E

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருக்குடவாயிற் புராணம்

சென்னை: ஜூபிடர் அச்சுக்கூடத்திற்
பதிப்பித்தது

*Copyright Registered*]

[தாது ஞு பங்குனிமீ

March, 1937

இந்தப் பிரதியின் எண்:


## விற்பனைக் குரிய புத்தகங்கள்

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| 1. | திருப்புகழ் முதற்பாகம் ... | 2 | 8 | 0 |
| 2. | ஷை இரண்டாம் பாகம் | 3 | 0 | 0 |
| 3. | ஷை மூன்றாம் பாகம் | 3 | 8 | 0 |
| 4. | சிவஸ்தல மஞ்சரி-25 படங்களுடன் | 1 | 8 | 0 |
| 5. | பிரமோத்தர காண்டம் (சிவ கதை) | 0 | 6 | 0 |
| 6. | திருத்தருப்பூண்டி புராண வசனம் | 0 | 6 | 0 |
| 7. | திருவாடானைப் புராணமும் வசனமும் .. | 0 | 12 | 0 |
| 8. | காசி மாஹாத்மியம் (சிவ கதை) | 0 | 1 | 0 |
| 9. | திருநீடூர்த் தல புராணம் ... | 0 | 4 | 0 |
| 10. | திருத்தணிகைத் திருப்புகழ் முதலியன.. | 0 | 6 | 0 |
| 11. | திருத்தணிகைத் தல புராண வசனம் .. | 0 | 3 | 0 |
| 12. | ஷை 10-11 ஒன்றாய்ச் சேர்ந்தது ... | 0 | 8 | 0 |
| 13. | அறுபத்துநான்கு திருவிளையாடற் பாட்டு | 0 | 2 | 0 |
| 14. | History of the Tamil Prose Literature | 0 | 6 | 0 |
| 15. | சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சரித்திரம் | 0 | 6 | 0 |
| 16. | வ. த. சுப்பிரமணிய பிள்ளை சரித்திரம் | 0 | 12 | 0 |
| 17. | கடோரசித்தன் கதை | 0 | 2 | 0 |
| 18. | மஞ்ஞைப் பாட்டு ... | 0 | 0 | 6 |
| 19. | சேவற் பாட்டு ... | 0 | 0 | 6 |
| 20. | வள்ளி-கிழவர் வாக்குவாதம் | 0 | 0 | 6 |
| 21. | வேல் பாட்டு | 0 | 0 | 6 |
| 22. | குமரன் தலக் குறட்பா; கன்னிக் குமரி | 0 | 0 | 6 |
| 23. | சுந்தர விலாசம் | 0 | 5 | 0 |
| 24. | திருக்குடவாயிற் புராணம் (வசனம்) | 0 | 10 | 0 |

ஒரே காலத்திற் பத்துப் பிரதிகள் வாங்கினால் ஒரு பிரதி விலை யின்றிக் கொடுக்கப்படும். தபாற் செலவு முதலியன வேறு.

வ. சு. ஷண்முகம் பிள்ளை,

292, லிங்க செட்டித் தெரு, சென்னை : MADRAS.

சிவமயம்

# முகவுரை

குடவாயில் என்னுந் தலம் சோழ நாட்டிற் காவிரியின் தென் கரையி லுள்ள 127-தலங்களுள் ஒன்று. திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பதிகங்களிரண்டும், திருப்புகழ்ப் பாடல்களிரண்டும் பெற்றது. குறடாச்சேரி ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கு 8-மைல். கும்பகோணத்தி லிருந்து திருவா ரூருக்குப் போகும் வழியிற் கும்பகோணத்துக்குத் தென்கிழக்கு 12-மைலிலும், திருவா ரூருக்கு வடமேற்கு 12-மைலிலும் உள்ளது.

இத் தலத்தை 1932-ஆம் வருடம் மேமீ 14-ஆந் தேதியிலும், நவம்பர் மாதம் 4-ஆந் தேதியிலும் தரிசிக்கப் பெற்றேன். இதற்கு முன்னரே, 1930-ஆம் வருடம் ஜனவரி மாதம் 8-ஆம் தேதி திருத்தேங்கூரி லிருந்து, இப் பொழுது திருவிடைக்கழி திருக்கோயில் மானேஜராக விருக்கும் திருவாளர் - தியாகராஜ ஸ்வாமிநாத முதலியா ரவர்கள் தாம் கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்த புராண வசனத்தை யச்சிடும்படி என்னிடங் கொடுத்திருந் தார்கள். ஊரில் விசாரித்தும் வசனப் பிரதி வேறொன்று எனக்குக் கிடைத்திலது.

1933-ஆம் வருடம் ஆகஸ்டு மீ 4உ கிடைத்த கையெழுத்துப் பாடற் பிரதி யொன்றால், இத் தலத்துப் புராணத்தைச் செய்யுளா லியற்றியவர் 'பஞ்சபூத மா தான

மான திருவாரூர் என்னும் திவ்விய தலத்தில் வசிக்கும் சைவ வைதிக குலமணி யாகிய ஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர் குமாரர் தியாகராஜ தேசிகர்' என்பதும், 'அதற் குரை செய்தவர் அம்பலவாணப் புலவர்' என்பதுந் தெரிகின்றன. இந்த வுரை எனக்குக் கிடைத்திலது. இப்பொழுது பதிப்பிக்கப்படும் இவ் வுரை வடமொழியினின்று யாரோ ஒரு பக்தரால் தமிழ் மொழி யாயிற் றென்பதை இதனைப் படிப்பவர்கள் உணருவார்கள். வட மொழிகள் சற்று மாறித் தமிழ் மொழிகள் ஆயினவே யன்றி, வடமொழி நடை முற்றிலுந் தென் மொழி நடையாக மாறவில்லை.

செய்யு ளுருவமாக இருக்கும் புராணத்தையும் அச்சிடுதல் நலம். ஏழு வருஷங்களாக உரையையே அச்சிட வியலா தாயிற்று. அதையும் தாழ்த்த லாகாதெனக் கருதி இப்பொழுது அதை அச் சேற்றினேன். அன்பர்கள் ஆதர விருந்தாற் செய்யுட் புராணத்தையும் அச்சிடலாம். சிவ புண்ணியத்தின் பெருமையை யுணர்ந்து, தலவாசிகள் தக்க முயற்சி செய்து, சிவாபராதத்தினின்றும் என்னை விடுவிக்கவேண்டு மென்று பிருகத்துர்க்காம்பா ஸமேதராகிய ஸ்ரீ கோணேச பெருமானை வேண்டிக்கொள்கிறேன்.

மஞ்ச குப்பம்
1-3-1937.

வ. சு. சண்முகம் பிள்ளை.

இவ்வாறே அநேகந் தலங்களுக்கு வடமொழியில் அவ் வவற்றின் மாஹாத்மியங்களும், சிலவற்றுக்குத் தமிழ்ச் செய்யுட் புராணங்களும், உள்ளன வென்பதையும், அவற்றைத் தமிழ் மக்க ளாகிய நாம், உலைவின்றித் தாழாதுஞற்றி, நம் ஊழை உப்பக்கங் கண்டு, வெளிப்படுத்துவோமாயின், சிவ புண்ணியங் கைகூடிச் சிறப்புறுவோ மென்பதையும் உணருவோ மாக.

சிவபெருமான் குட வாயிலா வெளிப்பட்டமையால் இத் தலத்துக்கு இப்பெய ரெய்தியது. இந்தக் கோயில் மாடக்கோயில்களு ளொன்று.

கருடன் அமுதங் கொணர்ந்து, தானும் தன் தாய் விநதையும் அடிமை நீங்கப் பெற்ற தலம்.

மதிலிலும் மண்டபத்திலும் கருடன் இருப்பது காண்ட லாகும்.

ஸ்வாமி - கோணேசுரர்

அம்பிகை - பெரிய நாயகி

தீட்டு செம்பொற்
கோயில்குட வாயிலாக் கொண்டுநித மும்பெரிய
நாயகிசேர் கோணேச நாயகா (157)

என்பர் சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பாவில், உமாபதி சிவாசாரிய ஸ்வாமிகள்.

சிவமயம்

# திருஞானசம்பந்த ஸ்வாமிக ளருளிச்செய்த

# தேவாரப் பதிகங்கள்

## I. பண் - இந்தளம்

### திருச்சிற்றம்பலம்

திகழுந் திருமா லொடுநான் முகனும்
புகழும் பெருமான் அடியார் புகல
மகிழும பெருமான் குடவாயில் மன்னி
நிகழும் பெருங்கோயி னிலாயவனே. 1

ஓடுந் நதியும் மதியோ டுரகம்
சூடுஞ் சடையன் விடைதொல் கொடிமேல்
கூடுங் குழகன் குடவா யில்தனில்
நீடும் பெருங்கோயி னிலாயவனே. 2

கலையான் மறையான் கனலேந்து கையான்
மலையா ளவள் பாகம் மகிழ்ந்த பிரான்
கொலையார் சிலையான் குடவா யில்தனில்
நிலையார் பெருங்கோயி னிலாயவனே. 3

சலவுஞ் சடையான் சுடுகா டிடமா
நலமென் முலையாள் நகைசெய்ய நடம்
குலவுங் குழகன் குடவா யில்தனில்
நிலவும் பெருங்கோயி னிலாயவனே. 4

என்ற னுளமேவி யிருந்த பிரான்
கன்றன் மணிபோல் மிடறன் கயிலைக்
குன்றன் குழகன் குடவா யில்தனில்
நின்ற பெருங்கோயி னிலாயவனே. 5

அலைசேர் புனலன் அனலன் அமலன்
தலைசேர் பலியன் சதுரன் விதிரும்
கொலைசேர் படையன் குடவா யில்தனில்
நிலைசேர் பெருங்கோயி னிலாயவனே. 6

அறையார் கழலன் அழலன் இயலின்
பறையாழ் முழவும் மறைபாட நடம்
குறையா வழகன் குடவா யில்தனில்
நிறையார் பெருங்கோயி னிலாயவனே. 7

வரையார் திரடோள் அரக்கன் மடிய
வரையார வோர்கால் விரல் வைத்த பிரான்
வறையார் மதில்சூழ் குடவா யில்மன்னும்
வரையார் பெருங்கோயில் மகிழ்ந்தவனே. 8

பொன்னொப் பவனும் புயலொப் பவனும்
தன்னொப் பறியாத் தழலாய் நிமிர்ந்தான்
கொன்னற் படையான் குடவா யில்தனில்
மன்னும் பெருங்கோயில் மகிழ்ந்தவனே. 9

வெயிலின் நிலையார் விரிபோர் வையினார்
பயிலும் உரையே பகர் பாவிகள்பால்
குயிலன் குழகன் குடவா யில்தனில்
உயரும் பெருங்கோயி லுயர்ந்தவனே. 10

கடுவாய் மலிநீர் குடவா யில்தனில்
நெடுமா பெருங்கோ யில்நிலா யவனைத்
தடமார் புகலித் தமிழார் விரகன்
வடமார் தமிழ் வல்லவர் நல்லவரே. 11

திருச்சிற்றம்பலம்

## II. பண்—காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கலைவாழும் அங்கையீர் கொங்கை யாருங் கருங் கூந்தல்
அலைவாழுஞ் செஞ்சடையில் அரவும் பிறையும் அமர்வித்தீர்
குலைவாழை கமுகம் பொன் பவளம் பழுக்குங் குடவாயில்
நிலைவாழுங் கோயிலே கோயிலாக நின்றீரே. 1

அடியார்ந்த பைங்கழலுஞ் சிலம்பும் ஆர்ப்ப அங்கையிற்
செடியார்ந்த வெண்டலை யொன் றேந்தி யுலகம் பலிதேர்வீர்
குடியார்ந்த மாமறையோர் குலாவி யேத்துங் குடவாயில்
படியார்ந்த கோயிலே கோயிலாகப் பயின்றீரே. 2

கழலார்பூம் பாதத்தீர் ஓதக் கடலில் விடமுண்டன்
றழலாருங் கண்டத்தீர் அண்டர்போற்றும் அளவினீர்
குழலார வண்டினங்கள் கீதத் தொலிசெய் குடவாயில்
நிழலார்ந்த கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. 3

மறியாருங் கைத்தலத்தீர் மங்கைபாக மாகச்சேர்ந்
தெறியாரும் மாமழுவும் எரியு மேந்துங் கொள்கையீர்
குறியார வண்டினங்கள் தேன் மிழற்றுங் குடவாயில்
நெறியாருங் கோயிலே கோயிலாக நிகழ்ந் தீரே. 4

இழையார்ந்த கோவணமுங் கீளும் எழிலார் உடையாகப்
பிழையாத சூலம் பெய் தாடல் பாடல் பேணினீர்
குழையாரும் பைம்பொழிலும் வயலுஞ் சூழ்ந்த குடவாயில்
விழவார்ந்த கோயிலே கோயிலாக மிக்கீரே. 5

அரவார்ந்த திருமேனி யான வெண்ணீ றாடினீர்
இரவார்ந்த பெய்பலிகொண் டிமையோ ரேத்த நஞ்சுண்டீர்
குரவார்ந்த பூஞ்சோலை வாசம் வீசுங் குடவாயில்
திருவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. 6

பாடலார் வாய்மொழியீர் பைங்கண் வெள்ளே றூர்தியீர்
ஆடலார் மாநடத்தீர் அரிவை போற்றும் ஆற்றலீர்
கோடலார் தும்பி முரன் றிசை மிழற்றுங் குடவாயில்
நீடலார் கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. 7

தொங்கார்ந்த பைங்கமலத் தயனுங் குறளாய் நிமிர்ந்தானும்
அங்காந்து தள்ளாட அழலாய் நிமிர்ந்தீர் இலங்கைக் கோன்
தங்காதல் மாமுடியுந் தாளும் அடர்த்தீர் குடவாயில்
பங்கார்ந்த கோயிலே கோயிலாகப் பரிந்தீரே. 8

தூசார்ந்த சாக்கியருந் தூய்மை யில்லாச் சமணரும்
ஏசார்ந்த புன்மொழிநீத் தெழில்கொள் மாடக் குடவாயில்
ஆசாரஞ் செய்மறையோர் அளவிற் குன்றா தடிபோற்றுந்
தேசார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. 10

நளிர்பூந் திரைமல்கு காழி ஞான சம்பந்தன்
குளிர்பூங் குடவாயிற் கோயில் மேய கோமானை
ஒளிர்பூந் தமிழ்மாலை உரைத்த பாட லிவை வல்லார்
தளர்வான தானொழியத் தகுசீர் வானத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருத்தணிகேசன் திருவடி துணை

## அருணகிரிநாத ஸ்வாமிகள் அருளிச்செய்த

# திருப்புகழ்

---

வேலு மயிலுந் துணை

அயிலார் மைக்கடு விழியார் மட்டைக
ளயலார் நத்திடு விலைமாதர்

அணைமீ திற்றுயில் பொழுதே தெட்டிக
ளவ்வோ வற்செய்து தமியேனும்

மயலா கித்திரி வதுதா னற்றிட
மலமா யைக்குண மதுமாற

மறையால் மிக்கருள் பெறவே யுற்புத
மதுமா லைப்பத மருள்வாயே;

கயில்ாயப் பதியுடையா ருக்கொரு
பொருளே கட்டளை யிடுவோனே

கடலோ டிப்புகு முதுசூர் பொட்டெழ
கதிர்வேல் விட்டிடு திறலோனே

குயிலா வித்திடு பொழிலே சுற்றிய
தூடவா யிற்பதி யுறைவோனே

குறமா தைப்புணர் சதுரா வித்தக
குறையா மெய்த்தவர் பெருமாளே. 1

சுருதி யாயிய லாயிய னீடிய
தொகுதி யாய்வெகு வாய்வெகு பாஷைகொள்
தொடர்பு மாயடி யாய்நடு வாய்மிகு துணையாய்மேல்

துறவு மாயற மாய்நெறி யாய்மிகு
விரிவு மாய்விளை வாயருள் ஞானிகள்
சுகமு மாய்முகி லாய்மழை யாயெழு சுடர்வீசும் ;

பருதி யாய்மதி யாய்நிறை தாரகை
பலவு மாய்வெளி யாயொளி யாயெழு
பகலி ராவிலை யாய்நிலை யாய்மிகு பரமாகும்

பரம மாயையி னோர்மையை யாவரும்
அறியொ ணாதது நீகுரு வாயிது
பகரு மாறுசெய் தாய்முத னாளுறு பயனேதான ;

கருது மாறிரு தோள்மயில் வேலிவை
கருதொ ணாவகை யோரர சாய்வரு
கவுணி யோர்குல வேதிய னாயுமை கனபாரக்

களப பூண்முலை யூறிய பாலுணும்
மதலை யாய்மிகு பாடலின் மீறிய
கவிஞ னாய்விளை யாடிடம் வாதிகள் கழுவேறக் ;

குருதி யாறெழ வீதியெ லாமலர்
நிறைவ தாய்விட நீறிடவே செய்து
கொடிய மாறன்மெய் கூனிமி ராமுனை குலையாவான்

குடிபு கீரென மாமது ராபுரி
யியலை யாரண வூரென நேர்செய்து
குடசை மாநகர் வாழ்வுற மேவிய பெருமாளே. 2

## ஆதிகஜாநநர் துதி

*சீதள வுந்தியு மதியுஞ் சேர்ந்துகமழ்ந் திடுமிதழிச்
சிவனஞ் சேல்போற்
காதளவும் விழியிடத்தாள் களித்திடச்செய் பணிகொண்டு
கவினுஞ் சோலைத்
தாதளவு குடவாயிற் றலத்தமிழ்த நதிக்கரைமேற்
றங்குந் தந்தி
†மாதளவுந் திருத்தாட்டா மரைமலரை யென்னுள்ளும்
வணக்கஞ் செயவாம்.

## விநாயகர்

பொற்ற ருக்கணெண் ணுளங் திரு மான்முதல் போற்றுங்
கற்ற வர்ப்பிரா னுறைகுட வாயில்மான் மியங்கா
முற்று ரைக்க வவ் ‡வரியரி யறமுனிப் பயங்கொண்
டெற்று மாமுக னிணைப்பத மலரிறைஞ் சிடுவாம்.

* உந்தி=நதி; இங்கே கங்கை. † மாது=அழகு: பெருமை.
‡ அரி யரி - அரி=மலை; அரி=சத்துரு; விந்த மலைக்குச் சத்துரு: அறமுனி: அகஸ்தியர். பயம்=ஜலம்.

பின்வரும் பாடல்கள் இனி அச்சாகவேண்டிய செய்யுட் புராணத்தி னின்றும் எடுக்கப்பட்டன :

## காப்பு*

*வானைமுகந் தெழும்பூக மடல்விரிந்து குடக்கனிமேல்
வழிந்தி டுஞ்செந்
தேனைமுகந் தளிமுரலுங் குடவாயிற் கோணேசன்
செம்ம லன்ப
ரூனைமுகந் துழல்பிறவி வெப்பகற்றக் குழைச்செவியி
னுறுகாற் செய்யு
மானைமுகப் பிள்ளையா ரடிக்கமல முடிசூட்டி
யன்பு கூர்வாம்.*

## கோணேசர் வணக்கம்

*சீர்கொண்ட வெளிமுகடு கடந்தண்டத் தப்பாலாய்ச்
சித்தாந் தத்தின்
வேர்கொண்ட பேரொளியாய்ச் சின்மயமா யகண்டமாய்
விமல மாகிப்
பேர்கொண்ட நாதமாய் விந்துவா யைந்தொழிலும்
பிறங்கச் செய்து
பார்கொண்ட குடவாயி லமர்ந்தகோ ணேசர்பதம்
பணிந்து வாழ்வாம்.*

## பெரிய நாயகியம்மை

பரையாகி யிச்சாஞா னங்கிரியை யதிகாரப்
　　பான்மை யெய்திப்
புரைதீர்ந்து விந்துமோ கினியொடுமா னனைத்துலகும்
　　பொருந்தச் சார்ந்து
கரைதீர்க்குஞ் சமயவித சத்தியமாய்க் காணமுக்கட்
　　கடவு ளாகித்
தரைமேவுங் குடவாயில் வரும்பெரிய நாயகிதா
　　டலைமேற் கொள்வாம்.

## முருகக் கடவுள்

ஆறிரண்டு மலர்க்கண்ணு மாறிரண்டு திருக்கையு
　　மரவிந் தம்போற்
கூறிரண்டு சேவடியு முடியாறும் படைத்தமரர்
　　கோனுக் காக
மாறிரண்டு கொண்டிருந்த மனத்தோடு கீழ்மேலாம்
　　வன்சூர் மாவை
வேறிரண்டு கூறுபட வேலெறிந்த குமரனடி
　　விரும்பி வாழ்வாம்.

உ

கணபதி துணை.

சிவமயம்.

# திருக்குடவாயிற் புராணம்

## முதல் அத்தியாயம்

### கோணேஸ்வர ஸ்வாமி க்ஷேத்திர மாஹாத்மியம்.

முன்னொரு காலத்திற் புண்ணிய க்ஷேத்திரமாகிய நைமிசாரணியத்திற், சௌநகர் முதலிய முனிவர்கள் தவஞ் செய்துகொண்டிருக்க, அங்கு வந்த சூத புராணிகரைப் பூஜை செய்து, ஆசனங்கொடுத்துக் காலை ஔபாசந முதலிய கடன்களை முடித்துவிட்டு, மிக்க ஆர்வத்துடன் சொல்லுகிறார்கள்:

"சூதபுராணிகரே! தாங்கள் வந்ததனாலே நாங்க ளெல்லோரும் பரிசுத்தர்களானோம். பிறப் பிறப்புக்களைப் போக்கும் சிவபிரானுடைய கதை யென்னும் அமிருதத்தால் எங்களைப் பரிசுத்தஞ் செய்யவேண்டும். பூவுலகிற் சிவ க்ஷேத்திரம் ஒன்று, அமிருதக்ஷேத்திரம் என்றும், அதன் மஹிமையைக் கேட்பவர் சிவனாகவே ஆகிவிடுகிறாரென்றும், அது மோக்ஷத்தையும், எல்லா க்ஷேத்திர மஹிமையையுங் கேட்ட பலனையுந் தருகிறதென்றுஞ் சொன்னீர்களே? அதன் மஹிமையைச் சொல்லியருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். சூதர் சிவபக்தி மேலிட்டு, அமிருத

க்ஷேத்திரத்தை நமஸ்கரித்து, சௌநகாதி முநிவர்களைக் கொண்டாடிச் சொல்லுகிறார் :

" நீங்களே பாக்கியஞ் செய்தவர்கள் ; சந்தேஹமில்லை. மனிததேகம் கிடைப்ப தரிது. அதிலும் மறையவர் ஜன்மங் கிடைப்ப தரிதரிது. அதிலும் சிவபக்தி குறைவில்லாமற் கிடைப்பது மிக அரிது. அதிலும் சிவபெருமானுடைய கதையைக் கேட்கும் புத்தி யுண்டாவது அரிது. அதைச் சொல்வது அதனினும் அரிது. நெடுங்காலம் செய்த புண்ணியத்தாற் சிவாநுக்கிரகத்தாற் புராணம் சொல்லக் கூடியவனுவன். வியாஸ மஹரிஷியின் அநுக்ரஹத்தால் உலகில் இணையில்லாத அமிர்த க்ஷேத்திரத்தின் மஹிமையை நன்றாகச் சொல்லுகிறேன். இது மற்றெல்லா க்ஷேத்திரங்களிலும் மேலானதால், நூறுகோடி கற்பகாலங்கள் சொன்னாலும் என்னுல் முழுவதுஞ் சொல்ல முடியாது. முழுவதுஞ் சொல்லக் கூடியவர் கோணேசரே ! முழுவதுங் கேட்கக் கூடியவரும் அவரே. அவர் மஹிமையை ஜாக்கிரதையுடன் கேளுங்கள் :

கிழக்குச் சமுத்திரத்துக்கு மூன்றுகாத வழி மேற்கிற் காவேரிக்குக் காத வழி தெற்கில், எல்லாப் புண்ணியங்களையுந் தரும் பிரமநதிக்குத் தெற்கில் இரண்டு நாழிகை வழி தூரத்தில், அமிருத க்ஷேத்திர மிருக்கின்றது. அதன் வாயு மூலையில் இரண்டு நாழிகை வழிதூரத்திற் சாரக்ஷேத்திர வாசியாகச் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். இதற்கு வடமேற்கில் சமீபத்திற் புண்ணியந் தருவதும் பாபக்கோட்டை அழிப்பதுமான வசிஷ்டாசிரமம் இருக்கிறது. அதன் அக்நி மூலையில் ஒரு காத தூரத்திற் கரவீரவநத் தீச்வரர் இருக்கிறார். இதற்குச் சற்று தென்மேற்கில் ஞாநமளிக்குஞ் சிவபிரான் அமர்ந்திருக்கிறார்.

இதற்கு மேற்கு ஒரு நாழிகை வழிதூரத்தில் சுவர்ணபுரீப்வரர் உள்ளார். இதற்குச் சற்றுத் தெற்கில் பாபமலையைப் பிளக்கும் பெருமான் வீற்றிருக்கின்றார். இவைகளின் மத்தியில் யாவற்றினும் மேலாய்ப் புண்ணியந் தருவதும், அழிவில்லாததுமான அமிருதக்ஷேத்திர மிருக்கின்றது. அதனை நினைத்த மாத்திரத்தில் ஒருவன் சிவனாகிவிடுகின்றான். இது நிச்சயம். முனிவர்களே! ஆதியிற் சுபமான மந்தாரவன மென்றிருந்ததாகவும், அதுதான் எல்லாருக்கும் எல்லாப் புருஷார்த்தங்களையும் அளிக்கும் உத்தமமான அமிருத க்ஷேத்திர மாயிற் றென்றும், தேவர்கள் சொல்லுகிறார்கள். யாவனொருவன் அங்குச் செல்ல உவகையுடன் நினைக்கின்றானோ, அவன் சங்கரனாகிவிடுகிறான் என்றால், அந்த க்ஷேத்திரத்தில் வசிக்கிறவர்களுடைய பெருமையைச் சொல்லவும் வேண்டுமா? இத் தலத்துக்குப் போக நினைத்து, ஓரடி வைப்பவனுக்கு மோக்ஷம் கைவசமாகிவிடு மென்றால், மற்ற சம்பத்துக்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? ஒரு நொடிப் பொழுதேனும் அரைநொடிப் பொழுதேனும் அமிர்தக்ஷேத்திரத்தில் வசிப்பவன் சங்கரனாகிவிடுகிறான். பிராமணோத்தமர்களே! பிராயசித்தத்தாற் போகாத பாவங்களும் கோணேசரை ஒருதரம் நினைத்தாற் போய்விடும். ஆநந்த ஸ்வரூபியாயும், சகல தேவர்களுக்கும் மேலானவராயும், சாந்தமூர்த்தியாயும், சற்குணங்கள் நிறைந்த மூர்த்தியாயும், பிருகத்துர்க்காம்பிகைக்குப் பதியாயும், அமிருத க்ஷேத்திர வாசியாயுமுள்ள சிவபெருமானைச் சநிப்பிரதோஷத்தில் நன்றாகப் பூஜித்தாற் சிவசாரூப்பியம் நிச்சயமாகக் கிடைக்கும். கார்த்திகை மாதம் திங்கட்கிழமையில் இவரை வில்வதளங்களாலும், தீபங்களாலும், புஷ்பங்களாலும், ஆரத்திகளாலும்,

வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும், நைவேத்தியங்களாலும், நிர்த்தனங்களாலும் ஸ்தோத்திரங்களாலும் பூஜை செய்கிறவர்களுடைய புண்ணிய பலத்தைச் சொல்லவல்லவர் சிவபெருமானே யாவர். தங்க வில்வதளமாலையைக் கோணேசருக்குச் சூட்டுபவர் அவருக்கு நந்திபகவானைப் போல் உகந்தவ ராவார்.

பிரதோஷகாலத்திற் சிவபக்தியுடன் கோணேசராலயம் புக்கு, நந்தீசன் அர்ச்சனையைக் காண்பவர் சிவ ஞகி விடுகின்றார். பிரதோஷ விரத மிருப்பவரும், பிரதோஷ காலத்தில் நந்தி பகவான் முதுகிற் சேவைதரும் அமிருத க்ஷேத்திர பதியைப் பார்ப்பவரும் சங்கர ஞகிவிடுகிறார். பிரதோஷ வேளையிற் கோணேசரை வில்வ தளங்களாற் பூஜை செய்பவர் சங்கர ஞகிவிடுகிறார். இத் தலத்தில், தாலப்ய மஹரிஷி, உலக வாழ்க்கையாகிய சமுத்திரத்தைத் தாண்ட லாகாதென, மோக்ஷம் விரும்பி, மந்தார மரம் ஒன் றுண்டாக்கி, அதன் கீழ் லக்ஷம் வருஷம் கோணேசரைத் தியானித்துத் தவம்புரிந்தார். கோணேசர் திருப்தி யுற்றுப் பிரத்தியக்ஷமாகித் "தாலப்யரே! பௌர்ணமையில் திருவாதிரை நக்ஷத்திரத்தில், உதய காலத்தில் என்னைப் பூஜை செய்ய, இந்த மந்தார மரத்தை நீர் உண்டு பண்ணினதால், இம்மரம் எல்லாப் பாவங்களையும் போக்கும். மந்தார வனத்தை நினைத்தவர் தமது குலத்திற் பிறந்த கோடிபேர்கள் சிவலோக மெய்தச் செய்வார்" என்றார்.

லோகோற்பத்தி, ஸ்திதி, லயங்களைச் செய்கிற கைலாச வாசியான சிவபெருமான், முன் பிரளயம் உண்டான காலத்திற் சீவராசிகளை அமிருத குடத்திற் சேர்த்துவிட்டுப் பிறகு உண்டாகும் உலகம் விளக்கமெய்த, மூ வுருவங் கொண்டனர். குடத்தின் முகத்திற் சிவலிங்க மாயினர்;

துளிகள் விழுந்த இடம் அமிருத க்ஷேத்திரம் ஆயிற்று. அமிருத ஜலம் முழுவதுஞ் சேர்ந்த இடம் அமிருத தீர்த்தம் ஆயிற்று. இங்ஙனம் மூன் றுலகங்களாலுங் கொண்டாடப் பெறுகின்றார். அந்தத் தீர்த்தத்தின் காற்று மேலேபட்ட அளவில் அமிருதமயமான தேக மூண்டாகிறது; மோக்ஷமும் கிடைக்கும். சிவபிரான் ஆஞ்ஞையால் இத் தலத்தில் திதிதேவியின் பிள்ளையாகிய ஓ ரசுரன் இறவாமை விரும்பிக் கீழ்ப் பாகத்தில் நூறாயிர வருஷம் தவம்புரிந்தான். இஃ திப்படி யிருக்க, அமிருத லிங்கேசர் மீது புற்று மிக வளர்ந்து விட்டது. அந்தப் புற்று மழையினும் காற்றினும் கொஞ்சங்கூடக் கெடவில்லை. அதனால் மூடப்பெற்ற இலிங்க மூர்த்திக்குங்கூடக் கெடுதியில்லை. இஃ திவ்வாறாக, பாம்புகளுக்கெல்லாம் பகைவனை கருட பகவான் ஒரு காரணங்கருதி அமிருதகுடத்தை யெடுத்துக்கொண்டு அங்கு வந்தார். அங்குத் தவஞ் செய்துகொண் டிருந்த மஹா பயங்கரன் என்னும் அசுரன் அப் பூர்ண அமிருதத்தை யுண்டு, திடங்கொண்டு, மீட்டுந் தவஞ் செய்யலா மென நினைத்துக் கருடனுடன் சண்டையிட்டான். கருட பகவான் அமிருத குடத்தைப் புற்றின்மேல் வைத்துவிட்டு அசுரனுடன் சண்டை செய்து, ஒரு நொடிப்பொழுதில் அவனை மாய்த்துக் குடத்தை யெடுத்துச் செல்ல முயலப் புற்றுள் ளிருந்த கோணேசர், குடத்தை உள்ளே யிழுத்து விட்டார். கருட பகவான் அதி சீக்கிரமாகத் தன் மூக்கினால் மலைபோற் பெரிதாகிய அப் புற்றைப் பிளந்தார். அதனுள் விளங்குகின்ற லிங்கமூர்த்தியைக் கண்டு ஆச்சரியங் கொண்டு, கண்ணிமையாற் சேவித்து, நாவால் துதித்துத் தலையால் வணங்கித் 'தெரியாது செய்த குற்றத்தை மன்னித்து, அமிருத குடத்தை யளித்தருளல் வேண்டும்'

எனப் பிரார்த்தித்தார். கருணாநிதியாகிய சிவபிரான் அங்ஙனமே குடத்தைக் கொடுத் தருளக் கருட பகவான் மீட்டும் பலவாறாகத் தோத்திரஞ் செய்து பூஜிக்கச் சிவபெருமான் பிரசன்னமாகி அநேக வரங்களைக் கொடுத் தருளினார். இவற்றுடன் கருட பகவான் தன் தாயாகிய விநதையின் துன்பத்தை நீக்கக் கருதி அவளிடம் போய்ச் சேர்ந்தார். அது முதல் இத் தலம் வன்மீகாசலம் என்று சொல்லப்படுகிறது. ஸ்வாமியையும் வன்மீகாசலேசர் என்று சொல்லுகிறார்கள். அரை நொடிப் பொழுதேனும் வன்மீகாசலத்தில் வசிப்பவர் மோக்ஷம் பெறுகிறார் என்றால், மற்ற சம்பத்துக்களைப் பற்றிப் பேசவும் வேண்டுமா? கருடனால் பிரகாசித்ததனால் கருடாத்ரி எனவும் சொல்லப் பட்டுப் பாவங்களை யெல்லாம் போக்குகின்ற தென்கிறார்கள். இத் தலத்துச் சிவபெருமான் முதலிற் கோணேசர் எனப் பெயர் பெற்றார். அமிருத குடம் வைக்கப்பட்ட பின் அமிருதலிங்கேசர் எனப் பெயர் பெற்றார். கருடன் வேண்டுகோளுக் கிரங்கி கருணையங்கட லாகிய சிவபெருமான் அமிருத குடத்தைத் திரும்பக் கொடுத்த காரணத்தாற் சுதா கடபதி எனப் பெயர்பெற்றார். மாசி பௌர்ணமையில் அமிருத தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்பவர் பிறவித் துன்பம நீங்கி மோக்ஷமடைகிறார். இவ்வாறு ஸ்நாநஞ் செய்வதால், அநேக கோடி பிராமணர்களைக் கொன்ற தோஷங்களும், குரு பத்தினி முதலியோர்களைச் சேர்ந்த அநேக கோடி பாவங்களும், அடியோடே அழிந்துவிடுகின்றன. எவர் வன்மீகாசலத்தில் இருபத்து நான்கு படிகளையும் ஏறுகிறாரோ அவர் கைலை மலையை ஏறுகிறவ ராவார். அப்படி ஏறுமுன், படிகளுக்குக் கீழிருக்கிற விநாயகரை வணங்கித் தேங்கா யுடைத்து நிவேதனஞ் செய்தல்வேண்டும்.

திருதராஷ்டிரன் முதலாகிய சர்ப்பங்கள் அமிருத க்ஷேத்திரத்திற் சிவபிரானைப் பூஜித்து அவருக்கு ஆபரணங்களாயின. கருடனும் இவரைப் பூஜித்துப் பக்ஷி ராஜன் ஆனதாக இந்திராதி தேவர்களும் முனிவர்களும் சொல்லுகிறார்கள். மேற்சொன்ன சர்ப்பங்கள ஸ்நாநஞ் செய்ததால் தீர்த்தத்துக்கு நாக தீர்த்தம் என்னும் பெயர் போந்தது. சூரியனது கடுந் தவத்துக் கிரங்கிச் சிவபிரான் சூரியனைச் சந்திரன் முதலிய எல்லா கிரஹங்களுக்கும் அரச னாக்கினார். இசனாற் கோணேசர் சூர்யேஸ்வரன் என்று பதினான் குலகத்துங் கொண்டாடப் பெறுகிறார். சந்திரனும் இவ்வாறே பூஜித்து க்ஷயரோகத்தினின்றும் விடுபட்டான். கன்னிகைகள் நான்கு வெள்ளிக் கிழமைகளிற் பிருஹத் துர்க்காம்பிகையைச் சிங்க வாகனத்திற் பூஜித்து, நல்ல கணவர் முதலாகிய பாக்கியங்களைப் பெற்றார்கள். இக் காரணத்தால் அமிருத க்ஷேத்திரம் கன்னிகா க்ஷேத்திரம் என்றும் பெயர் பெற்றது. இன்றும் கன்னிகைகள் கூட்டங் கூடித் தம திஷ்டத்தை யடையப் பிருஹத் துர்க்காம்பிகைக்குப் பூஜை செய்கிறார்கள். சிவ ராத்திரியிற் கோணேசரை நல்ல பஞ்சாமிருதங்களாலும், எண்ணெய்களாலும், வாசனைப் பொடிகளாலும், அக்ஷதை முதலானவைகளாலும் கடலைச் சுண்டலாலும், வில்வ தளங்களாலும் ஒருகாற் பூஜிப்பவர் மஹாராஜா ஆகிவிடுதல் திண்ணம். சிவ ராத்திரியிற் கோணேசருக்கு ஒரு சாமம் அர்ச்சனை செய்பவர் சக்கிரவர்த்தி யாவார். இரண்டு சாமம் அர்ச்சனை செய்பவர் தேவ ராவார். மூன்று சாமம் அர்ச்சனை செய்பவர் கைலாசத்தில் வெகுகால மிருப்பார். நான்கு சாமங்களிலும் பக்தியுடன் பூஜிப்பவர் சிவனே யாவார். சந்தேகமில்லை. எவர் கோணேசரை அழகும்

மென்மையுமுள்ள வில்வ தளங்களால் ஆநந்தத்துடன் பூஜிக்கிறாரோ அவர் சிவசாரூப்யம் அடைகிறார். எல்லாப் புருஷார்த்தங்களையும் பெறுகிறார். பிறர் பெறுதற் கரிய கீர்த்தியையும் சிவ பக்தியையும் பெறுகிறார். தீர்த்தங்க ளெல்லாவற்றினும் மேலான அமிருத தீர்த்தத்திலும், சந்திர தீர்த்தத்திலும், பிரம தீர்த்தத்திலும், சூரிய தீர்த்தத்திலும், அக்நி தீர்த்தத்திலும் ஸ்நாநஞ் செய்பவர் எல்லாப் பாவங்களினின்று நீங்கி, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அடைந்து சிவனாகின்றார். சிவபெருமானது தாமரைப் பூப்போன்ற பாதங்களிற் பக்தியுடையவர் இவ் வுலகிற் குறைவில்லாத கீர்த்தியையும், சம்பத்தையும், ஞாநத்தையும் அடைகிறார். அரசர்கள் பக்தி செய்யின் தம் சத்துருக்களை வென்று ஜய மடைகிறார்கள். ஈற்றிற் சம்சார பந்தம் நீங்கிக் கைலாச மெய்திக் கைலாசநாதருடைய ரூபத்தையும் பெறுகிறார்கள்.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்திற் பூகோள விஸ்தாரத்தில் மேல் பாகத்திற் சூத சௌநக சம்வாதத்தில், அமிருதஸ்தாந வைபவத்தில், அநுக்கிரமணிகை என்கிற முத லத்தியாயம் முடிந்தது.

## இரண்டாம் அத்தியாயம்

சௌநகர் முதலிய முநிவர்கள் சூதமுநிவரை நோக்கி, "வியாச மகருஷியின் இரண்டு பாத கமலங்களிலும் பக்தி யுள்ள மகான்களுக் கெல்லாம் சிறந்த பக்தியை யுடைய சூத புராணிகரே! வியாச முநிவர் அநுக்கிரகத்தால் நீர் எல்லாவற்றையும் அறிந்தவ ராகிறீர்; சந்தேக மில்லை. கருடன் எதற்காக அமிருதக்ஷேத்திரத்துக்கு வந்தார்? அமிருத

குடம் எங்கே யிருந்தது? எதற்காக அதைக் கருட அமிருதக்ஷேத்திரத்துக்குக் கொண்டுவந்தார்? அவர் புற்றின்மேல் வைத்த குடம் அதற்குள் மறைந்து விடுவானேன்? இவைகளை நன்ருக எங்களுக்குச் சொல்லல் வேண்டும். தயைசெய்து எங்களைப் பரிசுத்தமாக்க வேண்டும். யாங்க ளனைவரும் கோணேசமூர்த்தியின் மகிமையை எப்பொழுதுங் கேட்க விரும்புகிருேம்." என்ருர்கள். இங்ஙனம் வேண்டப் பெற்ற சூதமுநிவர் சொல்லுகிருர்:

"நீங்க ளெல்லோரும் கோணேச ஸ்வாமியின் மகிமையைக் கேளுங்கள். அதைக் கேட்டவர் எத்துணைப் பாவிகளாயினும் எல்லாம் பாவமும் போய்ப் புண்ணியவான்களாகிருர். புண்ணிய காலங்களிற் சிவகதையைக் கேட்பவர்கள் பாக்கியசாலிகள். சிவகதையைக் கேளாத கெட்டவர்கள் வியாதியாற் பீடிக்கப்பட்டு ரௌரவ நரகத் துறுவார்கள். சிவகதையைக் கேட்பவர்களை அசூயையால் நிந்திப்பவர்கள் பிரயோஜனமற்ற நபும்ஸகராய்ப் பிறக்கிருர்கள். சிவபுராணம் படிப்பவர்களையும், விபூதி ருத்திராக்ஷந் தரித்தவர்களையும் நிந்திப்பவர்களும் இவ்வாறே நபுஸக ஜன்மத்தை யடைகிருர்கள். தும்மினும், இருமினும் சிவபெருமானை நினைபவர்களும், இந்திரியங்களை வென்று சிவகதையிற் பக்தியால் ஈடுபடுபவர்களும், சிவாலய பிரதிஷ்டை முதலிய சிவதருமங்களைச் செய்பவர்களும், சிவபிரானுக்கு அபிஷேகஞ் செய்கிறவர்களும், சிவார்ச்சனைக் கெனத் தோட்டம் வைத்து வில்வம் முதலியவற்றை வளர்க்கிறவர்களும், சிவபெருமானுக்குச் ஜீர்ணோத்ஸவம் செய்கிறவர்களும் அளவற்ற நற்காரியம் செய்தவராவார்கள். அநேக ஜன்மங்களிற் செய்த புண்ணிய மேலீட்டினுலேயே

ஸத்கதையைக் கேட்பதிற் புத்தி செல்கிறது. அநேக புண்ணியங்களைச் செய்தவர் மானுடராகிறார். அதிலும் மிக்க புண்ணியஞ் செய்தவர் சிவபக்தியை அடைகிறார். இதனினும் மிக்க புண்ணியஞ்செய்தவர் சிவசரித்திரங்களைக் கேட்க விரும்புகிறார். ஆதலின், நீங்கள் மஹாபாக்கியவான்கள். உங்களை யடைந்த நானும் பாக்கியம் பெற்றேன். ஆதலின் அமிருததீர்த்த மஹிமையைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அதை ஒருகால் கேட்கினும் மோக்ஷங் கிடைக்கும்.

முற்காலத்திற் காசிபருக்கும் விநதைக்கும் புத்திரராகிய கருட பகவான் மஹா பல பராக்கிரம முடையவராயும், எக்காலும் விஷ்ணுவுக்குப் பிரிய முள்ளவராயும் இருந்தார். இத்தகைய கருடன் தன் தாயின் விருப்பப்படித் தன் இளைய தாயாகிய கத்துருவின் பிள்ளைகளாகிய பாம்புகளைத் தான் வாகனமாகிச் சுமந்து கொண்டுபோய் அவைகள் இஷ்டப்பட்ட இடத்தில் விடுவது வழக்கம். ஒருநாள் ஒரு காரியத்தால், வேளைக்குவரத் தடைப்பட்ட கருடனைப் பார்த்துப் பாம்புகள் மிகக் கோபமுற்றுச் சற்றும் பயமின்றிக் கடிந்தன. "அடா, அடிமைக்கார கருடா! ஏனடா, நாங்கள் சவாரிபோவதைத் தாமதிக்கச் செய்தாய்? சீக்கிரமாக எங்களைத் தூக்கிச் செல்லடா. அடா, தூங்குகிறவனுக்கும் பிணத்துக்கும் கொஞ்சமேனும் வித்தியாச மில்லை. அவ்வாறே விஷத்திற்கும் எண்ணெய்க்கும் பேத மில்லை. பிராமணனுக்கும் நெருப்புக்கும் பேத மில்லையடா. பிணத்துக்கும் அடிமைக்காரனுக்கும் பேத மில்லையடா. இனி ஜாக்கிரதையுடன் எப்பொழுதும் நாங்கள் சவாரிபோகுங் காலத்திற் காத்திருந்து எங்களைச் சுமத்தல் வேண்டும். யாரோடும் பேச லாகாது. உன் சொந்தவேலை யென்றையும்

பாராது எங்களைச் சுமக்கவேண்டிய வேலையைப் பார். தவறுவாயாயின் நன்றாக அடிப்போம், கொல்லுவோம்" என்று, நாடோறும் பாம்புகளாற் கண்டிக்கப்பட்ட கருடன் வெட்க மடைந்து, தன் தாயாகிய விநதையிடஞ் சென்று வணங்கி, மனமுதலியவற்றைத் திடப்படுத்திக்கொண்டு, "தாயே! எதற்காக உன் சக்களத்தியாகிய கத்துருதேவிக்கு நீ அடிமை வேலை செய்கிறாய்? அவளுடைய பிள்ளைகளுக்கு நான் அடிமைவேலை செய்வானேன்? இதற்கு உண்மையான காரணத்தைச் சொல்லுக" என்று பிரார்த்தித்தார். விநதை சொல்லுகிறாள்: "அப்பா, குழந்தாய்! முற்காலத்தில் தேவர்கள் அமிருதம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்தார்கள்; மந்தரமலையை மத்தாக நிறுவினார்கள்; வாசுகியைக் கடைகயிறாகக் கொண்டார்கள். தேவர்கள் ஒரு புறமும் அசுரர்கள் ஒரு புறமுமாய் நின்று கடையும்பொழுது, அதிலிருந்து மிக்க அழகுடைய உச்சைசிரவம் என்னும் குதிரை தோன்றிற்று. தேவேந்திரன் அதைத் தனக்கு வாகனமாகக் கொண்டார். என் சக்களத்தியாகிய நாகமாதாவுடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு, 'இந்தக் குதிரையைப் பார். எவ்வளவு அழகாயும் முழுவெளுப்பாயும் இருக்கிறது! இந்திரனுடன் கூடக் கரைக்கு வருகிறது பார்' என்றேன். அவள் 'ஏ விநதை, உனக்குப் புத்தியில்லை யென நினைக்கிறேன். அந்தக் குதிரைக்கு வால்மட்டும் கறுப்பு நிறம்' என்றாள். நான் மறுபடியும் 'ஏ, கத்துரு! அப்படி யன்று; அந்தக் குதிரை முழு வெளுப்புத் தான்' என்றேன். அவளுக்கு வெகு கோபம் வந்துவிட்டது. என்னைப் பார்த்து, 'ஏ, விநதை! ஏ, ஸகி! அந்தக் குதிரை வால் கறுப்பா யிருந்தால், நீ என்ன விதமாகிறாய்? சொல்' என்றாள். நானும், 'அந்தக் குதிரைக்கு

வால் கறுப்பா யிருந்தால், உனக்கு நான் வேலைக்காரி யாகிறேன் தடையில்லை' என்றேன். அவள் அந்தக் குதிரை அங்கு வர நேரமாகு மாதலால், என்னைக் காத்திருக்கச் சொல்லித் தான் வீடுபோய், அங்குச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யச்சொல்லி வேலைக்காரிகளுக்கு உத்திர விட்டுவிட்டு, என்னிடம் வருவதாகச் சொல்லிப் போயினாள். நான் காத்திருந்தேன். அவள் தன் பிள்ளைக ளாகிய பாம்புகளைக் கூப்பிட்டுப் 'பிள்ளைகளே! உங்களுக்கும் எனக்கும் சுகத்தைத் தரக்கூடிய உண்மையான என் வார்த்தையைக் கேளுங்கள். என் சக்களத்தி விநதை உங்கள் பிதாவுக் குகந்தவளாய் அவரிடம் எப்பொழுதும் இருக்கிறாள். எனக்கு அது எப்படிப் பொறுக்கும்? அவள் கொழுப்பை எப்படியாவது அடக்கவேண்டுமென எனக்கு நினைவு. அதற்கு இதுவே நல்ல சமயம். திருப்பாற் கடலைத் தேவர்கள் அமிருதம் வேண்டிக் கடைந்தபொழுது, முதலில் உச்சைசிரவம் என்கிற முழு வெளுப்பான குதிரை தோன்றிற்று. அது இந்திரனுக்கு வாகன மாயிற்று. கடற்கரையில் யானும் விநதையும் வேடிக்கைப் பார்க்கப் போனபொழுது, அவள் என்னை நோக்கி, 'முழுதும் வெளிறிய குதிரையைப் பார்; நிரம்பவும் ஆச்சரியம்; இத்தகைய குதிரையை யாண்டுங் கண்டிலேன்' என்றாள். நான் அதன் வால் கறுப்பு என்றேன். அவள் என் வஞ்சனையை யறியாது அதன் வாலும் வெளுப்புத் தான் என்றாள். நான் மீட்டும் அதன் வால் கறுப்புத்தா னென்றேன். அதற்கு அவள் அப்படியாயின் நா னுனக் கடிமை; வெளுப்பாயின் நீ எனக் கடிமை என்றாள். அவளை யங்கேயே இருத்திவிட்டு நான் உங்களிடம் வந்திருக்கிறேன். குழந்தைகாள்! விரைவின் அந்தக்

பின் வாலை உங்கள் கொடுமையான கறுப்பு விஷப்பிழம்பால் கறுப்பாக்கிவிடுங்கள்' என்றாள். அந்தக் குழந்தைகள் 'தாயே, உண்மை பேசிய எங்கள் பெரியதாயை எப்படி வஞ்சிப்போம்? அது எங்கள் பிதாவுக்கும் சம்மத மாகாது; தாய்க்குத் துரோகம் நினைப்பதிலும் பெரிய பாவம் கிடையாது; மூத்தவள் அடிமை செய்தல் நியாயமோ? பாவ மன்றோ? அதனால் நீ யழிந்துவிடுவாய்' என்றார்கள். கத்துருவுக்குக் கோபம் வந்து உதடு துடித்தது. 'பிள்ளைகளே உங்களுக்குத் தாயாகவும், தர்மங்களைத் தெரிந்தவளாயும், எல்லாருக்கும் ஒப்புள்ளவளாயும் உங்களுக்கு உதவி செய்பவளாயும் இருந்து, உங்களைக் கெஞ்சிக் கேட்கும் என்னைத் தெரியாதவளென நினைத்து மூடத்தனத்தால் எனக்கு நீங்கள் தர்மம் போதிக்கிறீர்கள். நீங்கள் எல்லீரும் உங்கள் குழந்தைகளைத் தின்னக் கடவீர்கள்' என்று சபித்தாள். கார்க்கோடகன் நடுங்கித் தாயைப் பார்த்துத் 'தாயே! உன் வார்த்தை யாதாயினும் கேட்கத் தகுந்ததே; ஆதலின், அப்படியே செய்கிறேன்' என்று சொல்லிக் குதிரையின் வாலிற் பிரவேசித்து விஷஜுவாலையால் அதைக் கறுப்பாக்கித் தாயின் வார்த்தையைக் காப்பாற்றினான். அவளும் நா னிருந்த கடற்கரை வந்து சேர்ந்தாள். தேவேந்திரன் தேவர்கள் சூழ அந்தக் குதிரைமேல் வந்தார். கத்துரு என்னைக் கூப்பிட்டுக் 'குதிரையின் வால் எப்படி யிருக்கிறது பார்' என்றாள். அந்த வால் மிகவும் கறுப்பா யிருப்பதைப் பார்த்து, ஒன்றுஞ் சொல்லாமலே அவளுக்கு அடிமையாய் விட்டேன். பக்ஷிராஜனே! கற்றாவை விலைபேசி விற்றால் அதன் கன்றும் எப்படி விலைப்பட்ட தாகிவிடுமோ, அது போல், நான் அடிமை யானதால், நீயும் அடிமை யாயினை.

ஆதலின் என் சக்களத்தியின் பிள்ளைகளைச் சுமக்கிறாய். கவலைப்படுவதிற் பயனின்று" என்றாள். அதுகேட்ட கருடன், 'அம்மா, அடிமைத்தொழில் விலக என்ன செய்யலாம்? யோசித்துச் சொல்க' என்றார். அவள் கத்துருதேவியைக் கேட்டுச் சொல்வதாகச் சொல்லி, அவளிடம் போய்த் தன் ஆயுள்வரை அடிமைத் தொழில் இயற்றவேண்டுமோ? அல்லது அதற் கீடாக வேறு யாதானும் உபகாரஞ் செய்யலாமா? என்று கேட்டாள். அவள் சிலகாலம் ஆலோசித்துத் தனக்கு எத்தனையோ வேலைக் காரிகள் யௌவநத்திலும் அழகினுஞ் சிறந்தவர்கள் இருக்கிறார்கள் என்றும், திருப்பாற்கடலில் உண்டான அமிருத குடத்தைத் தருவித்துத் தந்தால், அடிமை வேலை செய்ய வேண்டியதில்லை யென்றும் சொன்னாள். விநதை யிதைக் கருடனுக்குத் தெரிவித்தாள். அவர் சந்தோஷத் துடனே தன் தந்தையாரிடந் தெரிவித்து, எவ்விதத்தானும் அமிருத குடத்தைக் கொண்டுவருவதாகச் சொல்லித் தன் தாயாரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, தந்தையாரிடந் தான் வெகுதூரம் போகவேண்டியிருப்பதாற் 'பூரணமான சாப்பாட்டுக்கு உத்தரவாக வேண்டுமென்று வேண்டினார். காசிபர், 'குழந்தாய்! முன் இரு முநிவர்கள் பெண்டாட்டிகள் பேச்சைக் கேட்டுச் சண்டையிட்டார்கள். ஆதலின் அவர்கள் பெரிய யானையாகவும் யாமையாகவும் பிறந்திருக் கிறார்கள். வெகுபேர்களைத் தொந்தரவு செய்கிறார்கள். அந்த யானையையும் யாமையையும் உனக்கு ஆகாரமாகக்- கொள். இடையூறின்றிச் சுகமாகப் போய், அமிருத கலசத்தைக் கொண்டுவா' என்றார். கருடன் அவரை வணங்கி, மீட்டுந் தாயாரிடம் வந்து வணங்கிக் கவலையுடன் தேவலோகஞ் சேர்ந்தார்.

இப்படி, ஸ்காந்த புராணத்தில், மேல்பாகத்தில், அமிருத க்ஷேத்திர மாஹாத்மியத்தில், அமிருத கலச நிமித்தம் கருடமன நிரூபணம் என்கிற இரண்டாவது அத்தியாயம் முடிந்தது.

## மூன்றும அத்தியாயம

கருடன் அதிவேகமாகச் சென்றார். அதனால் பூமியி லுள்ள பொருள்களெல்லாம் நடுங்கின. யானையும் யாமையு மிருக்குமிடஞ் சென்று, ஒரேயெனப் பாய்ந்து, ஒரு காலால் அவை யிரண்டையுந் தூக்கிக் கொண்டு, பறக்கும் பொழுது, ஓர் ஆலமரத்தைக் கண்டு, அதிற் றங்கிப்போகக் கருதி, அதில் யானையையும் யாமையையும் வைத்து விட்டு, ஒரு கிளையி லமர, அது சுமை பொறாது முறிந்தது. அதன்கீழ், அநேக கோடி வாலகில்யாதி முனிவர்கள் தவஞ் செய்வதைக் கண்டு, அது கீழே விழாமல் ஒரு காலால் தூக்கிக்கொண்டு, மற்றொரு காலால் யானையையும் யாமையையுந் தூக்கிக்கொண்டு, நெடுந்தூரஞ் சென்று, ஓரிடத்தில் அசுரர்கள் இருப்பதைப் பார்த்து, அவர்கள்பேரில் அக் கிளையைப் போட்டுப் பலரையும், தன் தொடையடியாற் பலரையுங் கொன்று, யானையையும் யாமையையும் புசித்துப் பசி யடங்கித் தேவலோகஞ் சேர்ந்தார். அமிருத கலசத்தைக் காப்பதற்காகப் பிரளய காலத்து நெருப்பு நான்கு பக்கத்திலுஞ் சூழ்ந்திருப்பதைப் பார்த்தார். ஸ்வர்க்கத் துள்ள கங்காஜலத்தைத் தன் இரண்டு இறகுக ளால் வாரி இறைத்து, நெருப்பை அணைத்தார். நெருங்கும் பொழுது, இரண்டு பாம்புகள் காவ லிருப்பதைப் பார்த்து, அவைகளைத் தன் மூக்கினாலும் இறக்கைகளாலுங் கொன்று

விட்டு, அமிருத கலசத்தை ஒரு கையா லெடுத்துக்கொண்டு ஆகாசத்திற் கிளம்பினர். முப்பத்து முக்கோடி தேவர்களும் தேவேந்திரனும் கோப மிகுந்து, சக்திகளாலும், கத்திகளாலும், தடிகளாலும், அரிவாள்களாலும், சூலாயுதங்களாலும், வேலாயுதங்களாலும், அம்புகளாலும், கம்புகளாலும் வெகு பராக்கிரமமுடைய கருட பகவானை யடித்தார்கள். அவர்களை மூக்கினாலும், இறகுகளாலும், கால்களாலும் அடித்துங் கொத்தியும் பிளந்தும் வீழ்த்தினர். அனைவரும் அதிவிரைவில் மூர்ச்சித்து வீழ்ந்தனர். தேவேந்திரன் இனி நல்ல வார்த்தை சொல்லியாகிலும் அமிருதத்தைக் கேட்கவேண்டு மென்று நினைத்துப் பின் வருமாறு துதித்தார்:

பக்ஷிகளுக் கரசரே! காசிப குமாரரே! மஹா பராக்கிரம முடையவரே! துஷ்டர்களாகிய அசுரர்களையும், ராக்ஷஸர்களையும் பசாசுகளையும் கொல்ல வல்லவரே! லக்ஷ்மிகாந்தருக் குகந்தவர்களுள் முதன்மையானவரே! தேவரே! கருடபகவானே! இப்பொழுது மூர்ச்சை யடைந் துள்ளவர்களையும் என்னையும் காப்பாற்றவேண்டும். இந்த அமிருதம் மூப்பினை யகற்றி முழுப் பலத்தைக் கொடுக்கும். மஹாவிஷ்ணு இதைத் தேவர்களுக்குக் கொடுத்துவிட்டார். ஆதலின் ஆதரவுடன் அமிருதத்தைத் தந்தருளல் வேண்டும். உமது வீரியத்தையும், தைரியத்தையும், சௌரியத்தையும், காம்பீரத்தையும், சாதுரியத்தையும் நான் அறிவேன். தாயும் தந்தையும் நீரே; சிநேகிதரும் பந்துவும் நீரே; தம்பியும் தமயனும் நீரே; எல்லாப் பொருள்களையுங் கொடுப்பவரும் நீரே; குருவும் நீரே; உம்மைத் தவிர வேறெவரும் எனக் கில்லை. இந்த அமிருத நடத்துக்காகத் தேவர்கள் அசுரர்களோடு சண்டையிட்டு

அடிபட்டார்கள். அவர்களுக்கு அது பெண்டாட்டி, பொருள், பிள்ளை பந்துக்களினும் மேலானது, என்று விண்ணப்பித்து, மீட்டுந் தோத்திரஞ் செய்தான். கருட பகவான் மகிழ்ச்சியுற்றுச் சொல்லுகிறார் : 'தேவராஜனே ! என் தாய் விநதாதேவி கத்துருதேவியிடம் அடிமைத் தொழில் செய்கிறாள். அமிருத கலசத்தைக் கொடுத்தால் அத் தொழில் நீங்கும் எனக் கத்துருதேவி சொன்னதால், அதற்காக நான் இங்கு வந்தேன். அமிருத கலசத்தைப் பார்த்துக் கத்துருதேவி ஸந்தோஷமடைந்து, என் தாயின் அடிமைத் தொழிலை நீக்கிவிடுவாள்.' பிறகு கலசம் உன்னிடம் வந்துவிடும். கத்துரு முதலானவர்கள் அதைப் பார்க்கலாமே தவிர, அமிருதம் உண்ண அவர்களுக்கு அதிகார மில்லை. கொஞ்சம் பொறுத்திருங்கள். அமிருத கலசம் போய்விடு மென்கிற பயம் வேண்டாம்' என்று சொல்லிவிட்டுச் சென்ற வேகத்தால் உலகங்களசைய, வன்மீகாசலம் வந்து சேர்ந்தார். முன் பிரளயம் உண்டான காலத்திற் பிராணிகளெல்லாம் சரீர மழிந்து துன்பப்படும் பொழுது, கருணைக் கடலாகிய கைலாசபதி, கைலாச ரூபமான தன திடமான குடத்திற் றன் ஸ்வரூபமான அமிருதத்தை நிறைத்து, அதிற் பிராணிகளெல்லாவற்றையுஞ் சேர்த்துத் தனக்கு மூன்று ஸ்தானங்களுக்குக் காரணமான அந்த அமிருத குடத்தை ஒரு காரணங் கருதிக் கைலாசத்திற் காப்பாற்றினார். உலகத்தைப் படைக்குங் காலத்திற் அந்தக் குடம் சிவபிரானருளால் மூன்றாக வுடைந்தது. முதற்பாகம் காவேரியின் தென் கரையில் விழுந்தது. அப்பொழுது அந்த இடத்தில் தன்னைத் தியானிப்பவர்களுக்குத் தன் னுருவத்தைச் கொடுக்கவல்ல சிவபிரான் ஆதி கும்பேசுரர் என்கிற திரு

காமத்தை யுடையவராய் விளங்கினர். இரண்டாவ தாகிய நடுப்பாகம் இதற்குத் தென்கீழ்த் திசையில் விழுந்தது. அங்குக் கடேசுரர் விளங்கினர். மூன்றாவதாகிய முகபாகம் அதற்கு ஆறுமைல் தூரத்தில் விழுந்தது. அங்குக் கோணேசுரர் விளங்கினர். இந்தக் கோணேச க்ஷேத்திரத்தில் ஒரு நொடிப் பொழுதேனும், அரைநொடிப் பொழுதேனும் வசிப்பவர் சிவ ஞகிவிடுகின்றார். கோணேசரை அமிருத லிங்கம் என்றும்,கைலாசநாத ரென்றும் கொண்டாடுகிறார்கள். அவரைப் பார்ப்பதாலும், சேவிப்பதாலும், தியானிப்ப தாலும், பூஜிப்பதாலும், நினைப்பதாலும் அளவற்ற பாவ நீங்கி, முத்தி கிடைக்கும். ஆதியிற் பிரமதேவர் கோணேசரை நன்கு பூஜித்து, உலகத்தைப் படைக்கும் ஆற்றலை யடைந்தார். மிருகண்டு மகாமுநிவர் எண்பதாண் டளவும் புத்திரப் பேறின்றி மனைவியுடன் மனம் வருந்தித் தவித்து, வசிஷ்ட முநிவரின் உபதேசத்தாற் கோணேச க்ஷேத்திரத்தை யெய்திக் கோடையிற் றனக்கு நாற்றிசை யும் நெருப்பை வளர்த்துச் சூரியனை நோக்கியும், பனிக் காலத்தில்,நீர் நடுவிற் கழுத்தள விருந்தும்,மழைக்காலத்தில், வானத்தை நோக்கியும், ஆயிரவருஷ காலம் தவம்புரிந்தார். கோணேச பெருமான் எதிர்தோன்றித் தமக்குத் தென்பா லுள்ள பிரமதீர்த்தத்திற் கார்த்திகை மாசம் நான்கு சோமவாரங்களிலும் உதயத்தில் மனைவியுடன் முழுகி, இரவிற் பூஜை செய்தாற் புத்திரப்பே றுண்டாகும் என் றருளிச்செய்தார். முநிவர் அவ்வாறே செய்தமையால் மார்க்கண்டரைப் புத்திரராகப் பெற்றார். துரோணாசாரியர் இந்தத் தலத்திற் கடுந்தவ மியற்றிக் கோணேசரைப் பூஜித்துக் கீழ்பா லுள்ள சூரிய தீர்த்தத்திற் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்நாநஞ் செய்தார். கோணேசரே

அவருக்கு அசுவத்தாமன் என்னும் புத்திரராய்த் தோன்றிக் கௌரவர்களுக்குக் குருவாக விளங்கினர். அமிருத குடத்தின் வாயினின்றும் வெளிப்போந்த அமிருத துளிகள் அமிருத தீர்த்தமாயிற்றெனத் தேவர்கள் சொல்லுகிறார்கள். எல்லாத் தீர்த்தங்களிலும் மேம்பட்ட இத் தீர்த்தம் கோணேச ரருகி லுள்ளது. அதன் மேற்பாங் குள்ள அரச மரத்தடியிற் பாஞ்சுரன் பதினயிர மாண்டு கடுந்தவ மியற்றினன். பக்தி மேலிட்டுப் பஞ்சாக்ஷரத்தைப் பலதரஞ் செபித்தான். மாசி யுவாவில் மகநாளில் இடபக்கொடியை யுடையவரும், மலைக்கொடி மணாளரு மான கோணேசர் அங்குத் தோன்றித் தவத்தைக் கண்டு களித்து, வேண்டிய தியாதெனக் கேட்க, அவன் தனக்கு ஆயிரங் கையும், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் தலைமையுற்ற மேன்மையும் வேண்டுமெனப் பிரார்த்திக்க, அவ்வாறே வரந் தந்தருளினர்.

ஒருகாற் பார்வதி தனது தேகம் அழுக்கா யிருந்ததால் ஸ்நாநஞ் செய்வதற்காகத் தன் அழகிய பிள்ளையாரை வாயிற் காவலாக வைத்து, அவர் கையில் ஒரு தடியைக் கொடுத்து, ஓ, குழந்தாய்! நான் ஸ்நாநஞ்செய்யப் போகிறேன். ஒருவரையும் உள்ளே விடாதே' என்றாள். அவரும் அம்மா! அப்படியே செய்கிறேன்' என்று சொல்லிக் காவ லிருந்தார்.

சிவபிரான் மூன் றுலகங்களிலுஞ் சஞ்சரித்து வந்து, உள்ளே நுழையுஞ் சமயத்திற் பிள்ளையார் தடியைக் குறுக்கே வைத்து, உள்ளே விடமாட்டேன் என்றார். சிவபிரான் பிள்ளையா ருடைய தலையைக் கிள்ளி எறிந்துவிட்டு உள்ளே சென்றார். உமாதேவியார் அவரை யுபசரித்து, அவர் மகிழ்ந்த சமயத்துப் பிள்ளையை நினைந் தழுதாள். சிவபெருமான் அவள் விருப்பத்தை நிறைவேற்றுவதாகச் சொன்னர்.

உமாதேவி தன் பிள்ளையை எழுப்பித்தர வேண்டினள். அதற்கு அவர் முன்னிருந்த தலை யொட்டாதென்றும். மாணிபத்திரன் கொணரும் வேறு தலை யொன்றைப் பொருத்தி எழுப்பித் தருவதாகவுஞ் சொன்னார். மாணிபத்திரனுக்குப் பதினன் குலகங்களிலும் தலை கிடைக்கவில்லை. சிவபிரான், 'கிழக்கே தலைவைத்துத் தூங்குபவனுக்கு ஞானம் அதிகரிக்கும. அக்கினிமூலையிற் றலைவைத்துத் தூங்குபவனுக்கு வியாதி யுண்டாகும். தெற்குத் திக்கில் தலைவைத் துறங்குபவனுக்குச் சம்பத்து அழிந்துவிடும். தென்மேற்கிற் றலைவைத்துத் துயில்பவனுக்குப் பிள்ளை யில்லாமற் போய்விடும். மேற்கிற் றலைவைத்துப் படுப்பவனுக்கு ஞானம் வளரும். வடமேற்கிற் றலைவைத் துறங்குபவனுக்குக் கீர்த்தி மிகும்; சிவபக்தி யுண்டாகும். வடக்குத் திக்கில் தலைவைத்துப் படுத்துத் தூங்குபவனுக்கு எல்லாம் அழிந்துவிடும். வடகிழக்கிற் றலைவைத் துறங்கினல் எல்லா சம்பத்தும் உண்டாகும். வடதிக்கிற் றலைவைத்துத் தூங்குகிறவன் தலையைக் கொண்டுவா. அது தவிர மற்றத் தலை பிள்ளையாருக்கு ஒட்டாது' என்று சொன்னார். மாணிபத்திரன் யாண்டுத் தேடினும் அத்தகைய மனிதர் தலை யொன்றுங் கிடைக்கவில்லை. மதயானை யொன்று வடக்கே தலைவைத் துறங்கிற்று. அதன் தலையை வெட்டி மாணிபத்திரன் சிவபிரானிடஞ் சேர்த்தார். அதைப் பொருத்திக் கடாக்ஷித்தலும், பிள்ளையார் சுகமாக உயிர்த்திருத்தலை நோக்கி, அவருக்கு அநேக வரங்களைத் தந்தருளினார். 'உனக்கு, மூஞ்சூறு வாகன மாகுக. நீ பதினன் குலகங்களிலும் பூஜிக்கப் பெறுவாய். என் பூஜாகாலங்களிலும், உற்சவ காலங்களிலும், உலகத்தில் விவாக முதலிய கல்யாண காலங்களிலும், எல்லா

ஜனங்களும் உன்னைப் பூஜிப்பார்கள். அப்படிச் செய்யாத வர்களுக்குப் பல இடையூறுகள் வரும்; அவர்கள் வேலைகள் முழுவதும் கெட்டுப்போகும். விரைவிற் பூவுலகில் எனக்கு ஆதியி லுண்டானதொரு க்ஷேத்திரம் போய்ச்சேருக. அங்கு உன்னை யாவருங் கொண்டாடு வார்கள். பிறகு எங்கும் பூஜிக்கப்படுவாய். அது காவேரிக்கும் பிரமநதிக்குந் தென்பக்கத்தில் உள்ளது. கோணேச க்ஷேத்திரம் எனப் பெயர்கொண்டது' என்று இவ்வாறாகச் சிவபெருமான் அருளிச்செய்தார். இவ்வாறு உத்தரவு பெற்ற பிள்ளையார் மூஷிக வாகனமேறிக் கைலையி னின்றும் கோணேச க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார். யாவராலும் பூஜிக்கப்பெற்றார். ஆதிகஜாநநர் என்னும் பெயருடன் அமிருததீர்த்தக் கரையில் வீற்றிருக்கிறார். இன்றும் சித்திரைப் பௌர்ணமியில் அவர் எல்லாத் தேவர்களுடனு அநேக வாத்தியங்களும் மனோஹரமான வேதகோஷங்களுந் முழங்கப் பலவாறாய் அலங்கரித் துள்ளதும், துவஜஸ்தம்ப முள்ளதுமான மண்டபத்தில், ஸ்ரீ கோணேச பெருமானுக்கு அபிஷேக அலங்காரங்கள் செய்து பூஜிக்கிறார்.

அவ்விடத்தில் ஓ ரசுரன் கோரரூபத்துடன் அநேக மாயிர வருஷம் தவஞ்செய்தான். அமிருத கலசத்தைக் கையி லேந்தி வெகு வேகமாய் வருங் கருட பகவானைப் பார்த்தான். அமிருதத்தை யுண்டு சுகம்பெற எண்ணி அதைப் பறிக்க முயன்றான். கருட பகவான் இடையூறு வந்ததை யறிந்தார்.

இப்படி ஸ்காந்த புராணத்திற்
கோணேச க்ஷேத்திர மாஹாத்மியத்தில்
மூன்றாவ தத்தியாயம் முற்றிற்று.

# நான்காவது அத்தியாயம்

மஹா பயங்கரன் என்னும் அசுரன், கருடனை கொணரும் அமிருத குடத்தைப் பார்த்துத் தனக்கு நல்ல சமயம் வாய்த்ததெனை மகிழ்ந்து, அமிருதத்தைப் பருகிக் கவலையற்று, மீட்டுந் தவமியற்றக் கருதித் தான் வெகுகாலந் தவஞ் செய்ததனால், தேவர்கள் சந்தோஷித்து அமிருதம் அனுப்பினார்க ளென நிச்சயித்துத் தவத்தை நிறுத்திக் கருடனைப் பார்த்து, 'அடா, கருடா, நில்லு; நில்லு. அமிருத குடத்தை எனக்குக் கொடு; கொடாவிட்டாற் கொன்று விடுவேன்' என்று சொல்லவே, கருட பகவான் மிகச் சினந்து, அமிருத குடம் உடையாமல், அங்கிருந்த பெரும் புற்றின்மேல் தருப்பையைப் பரப்பி, அதன்மேற் குடத்தை வைத்து, சூத்துக்களாலும், முழங்கா லிடிகளாலும், மூக்கி னாலும் சற்றுநேரம் பொருதார். இந்திர னுடனும், தமது தா யுடனும், கொஞ்ச நேரத்தில அமிருத குடம் வரு மெனவும், அடிமைத்தொழில் நீங்கு மெனவுஞ் சொன்னது பழுதாகாவண்ணம், பொள்ளென அசுரன் தலையை மூக்கினாற் கொத்திக் கீழே தள்ளி, அவனைக் கொன்றார். தேவர்களும், இருடிகளும், கந்தர்வர்களும், சித்தர்களும், சாரணர்களும், மற்றவர்களும் பூமாரி பொழிந்தார்கள்; புகழ்ந்தார்கள். கருட பகவான் அமிருத குடத்தை யெடுக்க நெருங்கினார். அது கோணேசர் ஆஞ்ஞையாற் புற்றுக்குள் மறைந்தது. கருடபகவான் துயருற்று, மலைபோற் பெரிய அப் புற்றை தமது மூக்கினாற் பிளந்தார். அத னடுவே இந்திர நீலமணிபோல் விளங்கித் தன் ஜோதியால் தானும் விளங்கி, உலகத்தையும் விளக்கிக் குறைவற்றதாய்ப் பிரமாதி தேவர்களால், வெண் பட்டுக்களாலும், ஆபரணங்களாலும்

அலங்கரிக்கப் பெற்றதாய்ப் பதினாயிரம் சூரியர்களுடைய பிரகாச முள்ளதாய், எல்லார்க்கும் வேண்டுவனவற்றைத் தருவதாய், ஆநந்த மூர்த்தியாய்த் தான் கொண்டு வந்த அமிருத குடத்தை விழுங்கும், அந்த அமிருத லிங்கத்தைப் பார்த்து, மயிர்க் கூச் செறிந்து, தங்க ஸ்தம்பம்போற் கீழே விழுந்து வணங்கி, நான்கு முறை வலம் வந்து, கை கூப்பி நின்று, அமிருத குடத்தைப் பெற வேண்டித் துதிக்கின்றார்: "உலகத்தைப் படைப்பதற்கும் அழிப்பதற்கும் காரண பூதராய், அடியார்க் கெளியராய், அல்லார்க் கரியராய், எல்லாப் பொருள்களுக்கும் மூல காரணராய்க், கல்யாண குணக் கடலாய, சம்சார சாகரத்துக்குப் புணையாய், மங்களகரமான உருவ முடையவனை நமஸ்கரிக்கிறேன். ஞாநஸ்வரூபியாயும, பிரமனால் வணங்கப்பெற்றவராயும், யாவரையும் ரக்ஷிப்பவராயும், சரஸ்வதி தேவியாற் பூஜிக்கப் பெற்றவராயும், பராபரவஸ்துவாயும், அழிவில்லாத தவத்தை அளிப்பவராயும், யாவராலும் போற்றப் படுபவருமான சிவபெருமானை நமஸ்கரிக்கிறேன். மோக்ஷ ஞாநத்தையும், அறுபத்து நான்கு கலை ஞாநத்தையும் அளிக்கும முதன்மையான மூர்த்தியாயும், எங்கும் நிறைந்தவராயும, திரிபுரங்களை யழித்தவராயும், பூரணமான வரங்களைக் கொடுக்கிறவராயு முள்ள சிவபிரானை நமஸ்கரிக் கிறேன். கங்கையைத் தலையில் தரித்தவராயும், எல்லா வுயிர்கட்கும் போக மளிப்பவராயும், புலித்தோலை யரைக் கசைத்தவராயும், இடபக் கொடியை யுடையவராயும், இடபாசுரனைக் கொன்றவராயும், தேவதேவராயு முள்ள சிவனை நமஸ்கரிக்கிறேன். இந்திரனாற் பூஜிக்கப்பெற்ற பாதங்களுடன் விளங்குகிறவராயும், அஞ்ஞான விருளுக்குச் சூரியனையும், சூரிய சந்திரர்களைக் கண்களாக வுடையவராயும்,

சிவந்த நிறமுடையவராயு முள்ள சிவனை நமஸ்கரிக்கிறேன். துஷ்டர்களை மயக்கும் மாயையை உடையவராயும், மாயையி னுருவான இவ் வுலகத்தின் விளக்கத்துக்குக் காரணராயும், உலகத்துக்கு நன்மை செய்கிறவராயும், எங்கு நிறைந்தவ ராயும், பார்வதி பாகராயுமுள்ள சிவனை நமஸ்கரிக்கிறேன். மன்மதன்போ லுருவ முடையவராயும், பிரளய காலாக்கினியாற் பூஜிக்கப்பெற்றவராயும், மன்மதனை யெரித்தவராயும், வேண்டுவதைத் தருபவராயும், பிரளய காலத்தில் உலகத்தை யழிப்பவராயும், உலகத்துக்கு எட்டாதவராயும், மஹா மஹிமையை யுடையவராயு மிருக்கிற சிவனை நமஸ்கரிக்கிறேன். வெள்ளிமலையில் வசிப்பவராயும், துக்கத்தைப் போக்குகிறவராயும், தோஷங்களுக் கெட்டாத உருவத்தை யுடையவராயும், காமாதி அரிஷட் வர்க்கங்களைப் போக்குகிறவராயும், எல்லாக் கருமங்களுக்கும் கர்த்தராயு முள்ள சிவனை நமஸ்கரிக்கிறேன். சத்துருக்களுக்கு உக்கிர ரூபியாயும், பயத்தை யுண்டுபண்ணுகிறவராயும், பக்தர்க ளுக்குப் பயத்தைப் போக்குகிறவராயும், ஆதியாயும், பிறப்பு முதலியவைகளுக்குக் காரணராயும், சாதுக்களுக்குச் சுகந் தர இவ் வுலகி லுள்ளவராயு மிருக்கிற சிவனை நமஸ்கரிக் கிறேன். மந்திரரூபியாயும், மந்திரத்தின் அர்த்தரூபியாயும், மந்திரத்தைக் கண் முதலான உறுப்புக்களாகக் கொண்டவ ராயும், மந்திரத்தின் பலத்தைக் கொடுப்பவராயும், நல்ல மந்திரத்தை யுடையவராயும், பஞ்சாக்ஷரத்தாற் பூஜிக்கப் பெற்றவராயும், மந்திரத்தாற் புகழப்பெற்றவராயு முள்ள சிவனை நமஸ்கரிக்கிறேன். நல்ல விளக்க முடையவராயும், குருவை விளங்கச் செய்கிறவராயும், குருவினிடத்தி லிருப்பவராயும், குருஸ்வரூபியாயும், தானே குருவாயும், குருக்களுக் கெல்லாம் குருவாயும், லோக குருவுமா யிருக்கிற

சிவனை நமஸ்கரிக்கிறேன். உலகங்களுக்குக் கருத்தாவாகவும், விகர்த்தா (சூரியன்) ஆகவும், அழகிய உருவமுள்ளவராயும், பிரளயத்தில் உலகத்தை யழிப்பவராயும், வேதமூர்த்தியாயு முள்ள சிவனை நமஸ்கரிக்கிறேன். ஐஸ்வர்ய மூர்த்தியாயும், பலவான்களுக் கெல்லாம் மேலானவராயும், அழகிய அங்கங்களை யுடையவராயு முள்ள சிவனை நமஸ்கரிக்கிறேன. சகல சற்குண ஸ்வரூபியே! பிரபுவே! அருள்புரிக. வாமதேவ னென்னும் திருநாமமுடைய பிரபுவே! அருள் புரிக. கோணேச பிரபுவே! அருள் புரிக. அழிவில்லாத உருவத்தை யுடையவரே! அருள் புரிக். பார்வதி தேவியுடன் விளங்குகிற உம்மை நமஸ்கரிக்கிறேன். சிறிதிற் சிறிதாயும், பெரிதிற் பெரிதாயுமுள்ள உம்மை நமஸ்கரிக்கிறேன். பகவானே! பலகாலும் நமஸ்கரிக்கிறேன். எவ்விடத்தும் நமஸ்கரிக்கிறேன். எக் காலமும் நமஸ்கரிக்கிறேன். தேவ தேவரே! எல்லா மங்களங்களையும் கொடுக்கும் அமிருத கலசத்தை அளித்தருளல் வேண்டும். என் தாயின் அடிமையை நீக்கத் தேவலோகஞ் சென்று, இந்திரனிட மிருந்த அமிருத கலசத்தை எடுத்துக் கொண்டு வந்தேன். இங்கு என்னுடன் சண்டை செய்ய வந்த அசுரனுக்குப் பயந்து, புற்றின்பேரிற் கலசத்தை வைத்து, அவனைப் பொருதழித்தேன். மீண்டு அதை யெடுக்க வரும்பொழுது, அது புற்றுக்குள்ளே போயிற்றெனப் புற்றை என் மூக்கினாற் பிளந்தேன். தங்களைத் தரிசிக்கப் பெற்று, ஆச்சரிய முற்றேன். என் தாயின் அடிமை நீங்க அமிருத கலசத்தை அளித்தருளல் வேண்டும்'' என்று பலவாறு வேண்டிக் கைகூப்பி நின்றார். கோணேசபெருமான் புன்முறுவல் பூத்து, "பக்ஷிராஜ னாகிய கருடனே! இப் புற்றினுள் இருந்த யான் உன்னால் உலகத்தில் வெளிவந்து விளங்க

எண்ணி, உன்னை யீண்டு வரவழைத்தேன். உன் தாயின் அடிமை நீங்க வேண்டு மென்னும் புத்தியை யுனக் களித்தேன். இந்திரனிட முள்ள அமிருத கலசத்தை அற்ப சண்டையில் நீ அடையச் செய்தேன். பிரமபதம் கிடைக்க வேண்டி நெடுங்காலந் தவம் புரிந்த மஹா பயங்கரன் என்னும் அசுரனை உன்னுடன் போரச்செய்து முடித்தேன். பிரளயத்தால் உலக மழிந்த காலத்தில், எல்லா ஜீவராசிகளும கைலையங்கிரியில் அமிருதம் நிறைந்த குடத்தில் வைத்துக் காப்பாற்றப்பெற்றன. பிறகு ஒரு காரணம்பற்றி, அந்த அமிருதகலசம் மூன்று பாகமா யுடைந்தது. அதன் வாய்ப்பக்கம் விழுந்த இடம் இது; இங்கே யான் உற்பவித்தேன். பிரமன் இந்திரன் முதலியோர் பூஜித்த யான், நெடுங் காலமானதாற் காற்றினாலும் வெயிலாலும், மழையாலும், புழுதிகளாலும மறைக்கப்பட்டு, இப் புற்றுக்குள் இருந்தேன். உன்னால் இவ்விடத்தைப் புதுப்பிக்க நினைந்து, அமிருத கலசத்தை மறைத்து, உனக்கு என் தரிசனந் தந்தேன். கலசத்தைத் தருகிறேன். அதை உன் தாயிடஞ் சேர்த்து, அவள் அடிமை நீங்கக் கத்துரு தேவியிடம் கொடுத்து, அவள் ஒப்பியபின், உன் தாயை மகிழச்செய். அப்பால் அமிருத குடத்தை இந்திரனுடன் சேர்ப்பித்து, உன் தாய் விநதையை வணங்கி விடைபெற்று, விரைவில் இவ்விடம் வருக. இத் தலத்தின் மதில், படிக்கட்டு, மண்டபம் முதலியவைகளைப் புதுப்பித்து, மநோஹரமான பிரமோற்சவத்தைச் செய்க. என்னைத் தரிசித்தலாலும், நினைப்பதாலும், பூஜிப்பதாலும், உலகில் அனைவரும் தாங்கள் விரும்பியவற்றைப் பெறுகிறார்கள். சந்திர சூரியர்கள் உள்ள வரையில், உன் கீர்த்தி விளங்கும்" என் றிவ்வாறு திருவாய் மலர்ந்தருளினார். கருடபகவான்

ஆஞ்ஞைப்படி நடப்பதாகச் சொல்லி, அழகிய அமிருத குடத்தைப் பிரியத்துடன் அவர் திருவுருவத்தினின்று வெளிப்படுத்தித் தரப்பெற்றுத் தன் தாயிடங் கொண்டு சேர்த்தார். அவருடன் கத்துரு தேவியிடஞ்சென்று, அமிருத குடத்தைப்பெற்றுத் தன் தாயின் அடிமையை நீக்க வேண்டினர். கத்துரு தேவி அமிருதகுடத்தைப் பார்த்துப் பூரித்துப் புளகமெய்தி, 'விநதையே! உன் அடிமையை நீக்கிவிட்டேன். இனி நீயும் உன் பிள்ளையும் எனக்கு எவ்வித வேலையுஞ் செய்யவேண்டாம்' என மும்முறை கூறினள். விநதையும் அடிமை விடுபட்டு மகிழ்வுற்றுக் குளிர்ந்த முகத்துடன் தன் கணவனுக்குப் பூஜைசெய்துவந்தாள். கத்துருதேவி தன் பிள்ளைகளுடன் அமிருதகுடத்தைத் தர்ப்பாசனத்தின்மேல் வைத்துவிட்டு ஸ்நானஞ் செயயப் போனள். இதற்குள்ளே இந்திரன் வாயுபகவானை யனுப்ப, அவர் அமிருத குடத்தைத் தேவலோகங் கொடுபோய் அத னிடத்தில் வைத்து விட்டனர். கத்துருதேவி திரும்பிவந்து அமிருத குடத்தைக காணது, ஒருகால் தர்ப்பாசனத்தி லாகிலும் அமிருதம் சம்பந்தப்பட் டிருக்குமென நினைத்துப் பிள்ளைக ளுடன் தர்ப்பைகளை நக்கினள். நாக்கள் தர்ப்பைகளின் கூர்மையால் இரண்டாக அறுபட்டன. மூத்தாளை அடிமையாக் கொண்ட பாவத்தால் இவ்வித துன்பம் நேரிட்டது. கருடபகவான் ஆநந்த முடையவராய்க் கோணேச பெருமானது கட்டளைப்படி அவரது க்ஷேத்தி ரத்துக்கு வந்து அவரை வணங்கினர்.

இங்ஙனம் கோணேச க்ஷேத்திர மஹிமையில்
நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

## ஐந்தாவது அத்தியாயம்

## கோணேச க்ஷேத்திர மஹிமை

கருடபகவான் கோணேச ராஜ்ஞையாற் கோணேச க்ஷேத்திரத்தை யடைந்து, சந்நிதானத்தில் நவ ரத்நங்களாலும், பொன்னாலும் ஏழு பிராகாரங்களையும், அழகிய கோபுரங்களையும், உயர்ந்த மண்டபங்களையும், அரதனங் குயிற்றிய தூண்களையும் கட்டிவைத்தார். அம்மனுக்கும், விநாயகருக்கும், முருகருக்கும், சண்டேசராதி தேவர்களுக்கும் ஆலயங்களை நிருமித்தார். சந்நிதானங்க டோறும் நவரத்நங்களாலும் பொன்னாலும் படிகள் கட்டிக் கோணேசபெருமான் சந்நிதியில் இருபத்துநான்கு படிகள் கட்டினார். அப் பெருமானது கட்டளையால் அவர் சந்நிதிக் கெதிரில், அவரைத் தரிசிப்பவர்களுக்கு உத்தர வளிக்கும் ஆதிகணபதி சந்நிதியைக் கட்டினார். சந்நிதானத்தின் படிகடோறும் சிவபெருமான் காவல் வைத் தருளிய தேவர்கள் இருஞான்றுந் தோன்று துறைகின்றனர். அவர்களை வணங்கி, மெதுவாகப் படிகள் மீ தேறுதல் வேண்டும். சித்தர், சாத்தியர், கின்னரர், கந்தருவர், யக்ஷர், விஸ்வதேவர், பாஸ்கரர், சந்திரன், வைரவர், காலதன், சுபாங்கன், காமதன், கோணன், நீலலோகிதன், கோமுகன், சந்திரவதனன், க்ஷேத்திரபாலன், பிரபேதனன், சராரி, தக்ஷசாவர்ணி, வர்ணன், வாருணன், சமன், விதாதா ஆகிய அறுநான்கு தேவர்களையும் தியானித்துக்கொண்டு, வன்மீகாசலம் எனப் பெயரிய ஸ்வாமி சந்நிதியின் படிகளி லேறல் வேண்டும். இங்ஙனம் கருடபகவான் படிகளைக் கட்டி முடித்துப் பிறகு, அழகிய படிகளுடனும், விநோத

வேலைப்பாட்டுடனும், அரதனங் குயிற்றிய நந்திகேஸ்வர த்வஜஸ்தம்பங்களுடனும், பலவித மணிகளிழைத்த மண்டபங்களுடனும், அநேக ரத்நமாலைகள் கட்டப்பெற்று, ரத்ந கலசங்கள் வைக்கப்பட்டு, திவ்ய சந்தனம் பூசப்பெற்று, திவ்ய தூபங்கள் இடப்பெற்றுமுள்ள கோணேச ஸ்வாமியின் சந்நிதியைக் கட்டி, அதில் மனோஹரமான ஸர்வ மங்களகரமான விமானத்தைபு மியற்றி, நடுவே அமிருத ரூபியான கோணேச பெருமானை ஸ்தாபித்தார். அப் பெருமானின் அர்ச்சனைக்காக நந்தவன முண்டாக்கினார். அப்பால் ஸ்வாமிக்கு உன்னதமான பீடத்துடன் துவஜஸ்தம்பத்தையும், நந்தியெம்பெருமான் இடத்தையும் நிருமித்தார். இவையன்றி. அதிவிசித்திரமான யாகசாலையையும், சகல சற்குணமும் பொருந்திய பஞ்ச ரத்நங்களையும், தேரோடு வீதிகள் நான்கினையும் ஏற்படுத்தினார். நல்ல இல்லங்களை யமைத்து, அவற்றில் சாஸ்திர விற்பன்னர்களான மறையவர்களைக் குடியேற்றினார். தினந்தோறும் அர்ச்சனை செய்வதற்காக நூறு கிராமங்களையும், பிரமோற்சவத்துக்காக நூறு கிராமங்களையும், மாசபூஜைக்காக நூறு கிராமங்களையும் அவர்களுக்குக் கொடுத்தார். மேலும், நவமணி யிழைதத குடை, சாமரம், கொடி, வாகனம் பல்லக்கு முதலியவற்றையும், பட்டு பீதாம்பரம், பூஜாபாத்திரம், திருவாபரணம் இவைகளையும் அளவற்றனவாகத் தந்தார். மாசிமாசம் வந்ததும் கோணேச மூர்த்திக்குப் பிரமோற்ஸவம் செய்யத் தொடங்கினார். சித்திரைப் பிரமோற்ஸவம் செய்கிறவன் ராஜ்யம் செழிக்கப்பெறுகிறான்; வைகாசியிற் செய்யும் அரசன் சுக மடைகிறான்; ஆனியாயின் சம்பத்தைப் பெறுகிறான்; ஆடியாயின் தர்மம் வளர்கிறது; ஆவணியாயின் வியாதிகள்

அற்றுப்போகின்றன; புரட்டாசியாயின் பொருளுண்டாகிறது; ஐப்பசியாயின் நல்ல தெளிவாகிய அறிவு வருகிறது; கார்த்திகையாயின் பயிர்கள் செழிக்கும்; மார்கழியாயின் ஊர் செழிக்கும்; தைம்மாத மாயின் பசுக்கள் செழிக்கும்; மாசியாயின் எல்லாப் பொருள்களுமுண்டாகும். உறுதியாக நம்புங்கள். மேலும் மாசிமாதத்தில் உற்ஸவம் நடப்பித்தால், ஊர், ராஜ்யம், குடும்பம், கிருஹம் இவைகள் விருத்தியாகின்றன. எல்லாப் பொருள்களுங் கிடைக்கின்றன. சிவப்ரீதி யுண்டாகிறது. சிவசாரூப்பியமும் அடையலாம். ஆதலின், மாசி மாதத்துக்கு நிகரான தொன்றில்லை. ஸ்நாநம், தானம், ஜபம் முதலியன செய்ய மாசி மாசத்துக்குச் சமான மொன்றில்லை. மாசிமாதத்திற் செய்யும் உற்ஸவம் மிகப் புண்ணியமானது. பாவமாகும் காட்டை யழிக்குந் தீ மாகஸ்நாநம். அதைச் செய்யாத வரையிற் பாவம் உடம்பைவிட்டு நீங்குவதில்லை. மாக ஸ்நாநஞ் செய்யப் புறப்படுபவர் கைலாசத்துக்கு அழைத்துப் போகப்பெறுவார். ஸ்நாந தானுதிகளாற் பரிசுத்தமுற்றவர் கோணேச பெருமானுடைய உற்ஸவத்தைச் செய்தல் வேண்டும். சிவபெருமானுடைய மாசிமாத மஹோற்ஸவத்தைச் செய்விக்கும் அரசன் புண்ணியவானுகிக் கைலாச முறுவான்; சங்கர ஞுவான். வெகுகாலம் நடவாது நின்ற மாசி உற்ஸவத்தை நடத்துவிப்பவர் சிவசாயுஜ்ய மடைவார். உற்ஸவ நடக்க உதவிபுரிபவரும் சிவலோகத்தை அடைகிறுர். மாக ஸ்நாநம் இந்த ஜன்மத்திற் செய்த பாவம், முன் ஜன்மங்களிற் செய்த பாவம், தாய், தந்தை, மனைவி, மக்கள், குரு, எஜமான், சிநேகிதர் இவர்களாற் செய்யப்பட்ட பாவ முதலியவற்றைப் போக்கிப் புண்ணியத்தை யளிக்கும். பிரமோற்ஸவத்தைச் செய்துமுடித்துத் தேர் நிலைக்கு

வந்ததும் செய்யும் அவபிருத ஸ்நாநம் சூரியன் இருளைப் போக்குவதுபோற் பாவங்களைப் போக்கும். பாவங்களைப் போக்குவதில் மாகோற்ஸவத்துக்குச் சமமானது விண்ணிலேனும் மண்ணிலேனும் யாண்டும் இல்லை. ஜாதிகளிற் பிராமணஜாதி போலும், மந்திரங்களிற் காயத்திரி போலும் வேதங்களிற் சாமம் போலும், தேவர்களிற் சிவபிரான்போலும், நதிகளிற் கங்கைபோலும், விரதங்களிற் சிவராத்திரி விரதம் போலும், கிழமைகளிற் கார்த்திகைத் திங்கள் போலும், காலங்களிற் பிரதோஷம் போலும், பத்திரங்களில் வில்வம் போலும், பூக்களிற் றும்பை போலும், பசுக்களில் இடபம் போலும், ஆபரணங்களில் உருத்திராக்கம் போலும், அலங்காரங்களில் விபூதி போலும், மலைகளில் வன்மீகமலை போலும், ஆகமங்களிற் காமிகம் போலும், உற்ஸவங்களி லெல்லாம் சிவபெருமானது மஹோற்ஸவம் மேலானது. சிவபிரானுடைய உற்ஸவகாலத்தில் தேவர்கள் அந்த உற்ஸவத்தைத் துலையின் ஒரு தட்டிலும், எஞ்சின எல்லா உற்ஸவங்களையும் மற்றொரு தட்டிலும் வைக்க, மஹோற்ஸவம் நிரம்பவுங் கனமாயிருந்தது.

அப்பொழுதே 'மஹோற்ஸவம் மேலானது' என அசரீரி வாக்கு உண்டாயிற்று. இந்திராதி தேவர்களனைவரும் மஹோற்ஸவம் மேலானதெனப் பிரசித்தப்படுத்தினார்கள். ஆதலின், கருடபகவான் அமிர்த குடத்தின் வாயிலிருந் துண்டாகிய கோணேச பெருமானுக்கு மஹோற்ஸவஞ் செய்யச் சங்கற்பித்துக் கந்தருவர் அப்சரசு முதலிய எல்லாத் தேவர்களையும் வரவழைத்து, உற்ஸவத்துக்கு வேண்டிய பலவித விடுதிகளையும் சமையற் கட்டிடங்களையும், தண்ணீர்ப் பந்தர்களையும், ஜவுளிக் கடைகளையும், அநேக

மண்டபங்களையும் கட்டிவைத்தார். மாசிமாதம் வளர் பிறையில் அசுவனி நக்ஷத்திரத்திற் சைவாகமத்தொடு கூடிய காமிகாகமத்தினால் துவஜாரோகணஞ் செய்து வைத்தார். வேதியர்கள் அன்னம், தாம்பூலம், தக்ஷிணை ஆகிய தானங்களும், வாகனங்கள், பல்லக்கு, தண்டிகை முதலியனவும் நல்கப்பெற்று, சந்தோஷத்துடன் முழங்கும் மனதைக் கவரும் வேதகோஷங்களாலும், தீபங்களாலும், அலங்காரங்களாலும் நடனங்களாலும், மனோஹரமான பேரிகை,மிருதங்கம், இடக்கை, உடுக்கை முதலிய வாத்தியங்களாலும், பூமாரி பொழிவதாலும், கோணேச பெருமானுக்கு ஆநந்தத்தைத் தரும் மஹோற்ஸவத்தைச் செய்வித்தார். அதன் ஒன்பதாநாளிற் பலவித சித்திரங்களுடன் அமைந்த மேல்கொடுங்கை, கொடிமரம், மணிகள், தங்கப்பட்டைகள், தேங்காய், வாழை முதலிய குலைகள், குடை, சாமரம், கொடிகள் இவைகளால் அலங்கரிக்கப் பெற்று, மான், சிங்கம், பாம்பு, அரச அன்னம், மயில், குயில், கிளி, மக்கள், தேவர் இவைகள் விளங்கப்பெற்று, வாழைமரங்கள் சூழ்ந்து, நவமணிகள் குயிற்றி, மனதைக் கவரும் குதிரைகள் பிரகாசிக்கப் புஷ்பங்கள் நிறைந்து, மிகப்பெரிய அச்சுக்களும், எட்டுச் சக்கிரங்களுமுள்ள திவ்விய இரதத்திற் கோணேச பெருமானை எழுந்தருளச் செய்தார். பிருகத் துர்க்காம்பாளுக்கும், கணபதிக்கும், முருகக்கடவுளுக்கும், சண்டிகேஸ்வரருக்கும் ரதோற்ஸவம் தனித்தனியாகச் செய்வித்தார். அறுசுவையுண்டி யளித்து அந்தணர்களை யர்ச்சித்தார். பின்பு கோணேசராதி பஞ்ச மூர்த்திகளுக்கும் பூர்ணாபிஷேகத்தைத் தனித்தனி செய்தார். பத்தாநாளிற் கோணேச மூர்த்தியை இடப வாகனத்திலும், தேவியார் முதலானவர்களை அவரவர்கள்

வாகனத்திலும் எழுந்தருளச்செய்து, நான்மறைதம்மை நாவலர் முழங்கக் கலைஞர்கள் சாத்திரம் படிக்கப் பதினெண் வகை வாத்தியங்கள் இயம்பக், குடை, சுருட்டி, சாமரம், ஆலவட்டம் ஆகிய பல விருதுக்கள் உடன்வரத் தெருவில் தண்ணீர் தெளித்துக் கோலமிட்டு அலங்கரித்து, அகரு முதலிய தூபங்கள் இட, வன்மீகாசலத்தை வலம்வரச் செய்தார். தேவர், கந்தருவர், கின்னரர் முதலானவர்களுடன் திருவாதிரையில் அமிருத தீர்த்தத்தில் மஹோற்ஸவத்தின் அவபிருத ஸ்நானத்தைச் செய்தார். அன்று அறுசுவை பொருந்திய சித்திரான்னங்களையும், நறுமணங் கமழும் சந்தனம், புஷ்பம், முதலியவைகளையும் அந்தணர்களுக்கு அளித்தார். அதன் பின்னர், நவமணி குயிற்றிய உயரிய கம்பங்களுள்ள சுபகரமான திவ்விய மண்டபத்தில், அமிருத ரூபியானகோணேச பெருமானை, அம்மை முதலியவர்களுடன் அமர்வித்து. விதிப்படி விசேஷ மஹாபிஷேகத்தைச் செய்வித்து, அதிமதுரமான பாயஸத்தையும், சந்திரன் போல் விளங்கும் அப்பத்தையும், மற்றும் பல்வகைச் சிற்றுண்டிகளையும், பலபல பழங்களையும், வெவ்வேறுவித அன்னங்களையும், தங்கம் போன்ற தாம்பூலங்களையும், புதிதான பூமாலைகளையும் சமர்ப்பித்துப் பூஜைசெய்தார். இங்ஙனம் கருடபகவான் ஆகம முணர்ந்த குருக்களைக் கொண்டு, சைவகாமிக விதிப்படி கோணேச பெருமானுக்கு உத்ஸவஞ்செய்து, 'பகவானே! எல்லாம் உன் னருளால் நடந்தது' என்று அவரிடத்தி லொப்புவித்தார். இவ்வாறு கருடபகவான் கோணேச மூர்த்திக்கு மாசி மாதத்தில் மஹோற்ஸவத்தைச் செய்வித்துப் பின்னர் ஆண்டிறுதி காறும் அங்கே யிருந்து, விதிமுறை நித்யோத்ஸவம் முதலியவற்றைச் செய்வித்தார்.

இவ்விதம் ஸ்காந்த புராணத்திற், கோணேசத்தில் ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

# ஆறுவது அத்தியாயம்

கருடபகவான் இங்ஙனம் கோர்ணேச ஸ்வாமியின் மஹோத்ஸவத்தைச் செய்து முடித்துப் பின்னர் மாசோத்ஸவத்தைச் செய்வித்தார். மந்தார மலர்களாலும், மாலைகளாலும், சந்தனங்களாலும், தூபதீபங்களாலும், வில்வதளங்களாலும், பல்வகை நைவேத்தியங்களாலும், நல்ல வஸ்திராபரணங்களாலும், மஹாபிஷேகங்களாலும், பசும் பாலாலும், முன் தாலப்பிய முனிவர் செய்த மஹோத்ஸவத்தைச் செய்தார். இவ்வாறு கருடபகவான் கோணேச பெருமானுக்குப் பிராகார கோபுர மண்டப முதலியவற்றைப் புதிதாய்க்கட்டுவித்தும், மஹோத்ஸவத்தை முடித்துவித்தும், சிவபிரானிடம் விடைபெற்றுத் தனதில்லத்தை யெய்தித் தாயைப் பணிந்து பூஜித்துப் பேரானந்த முற்றார். மந்தாரவனத்தி லுள்ள வன்மீகாசலத்தின் மத்தியில் விளங்குகிறவரும், தாலப்பிய மஹாமுனிவராற் பூஜிக்கப் பெற்றவரு மான கோணேச மூர்த்தியைப் பக்தியுடன் பஞ்சாமிருதங்களாலும், பரிமள மிகுந்த தைலங்களாலும் அபிஷேகஞ் செய்பவர் கைலாசத்திற் களிப்புறுவார். பொடிகளாலும், பழங்களாலும் அபிஷேகஞ் செய்பவர் நந்தியெம்பெருமானைப் போலச் சிவகருணைக்கு இடமாவார். வன்மீகாசலநாதனை எல்லாக் காலங்களிலும் தியானிப்பவர் எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டுச் சிவலோகத்தை யடைவார். சிவனே யாவார். தாலப்பிய மஹரிஷியாற் பூஜிக்கப்பெற்ற கோணேசமூர்த்திக்குப் பசும்பாலால் ஒரு முறையேனும் அபிஷேகஞ் செய்பவர் நந்தி தேவர் முதலியவர்களைப் போலக் கைலாசத்தில் மகிழ்ச்சி யுறுவார். மந்தார வன நாதனான கோணேச பெருமானை மந்தார

மலர்களால் ஒருகால் அர்ச்சிக்கினும், கோடி குலங்கள் நற்கதி யடையும். சந்தனுபிஷேகஞ் செய்விப்பவர் ஏழு தலைமுறையி லுள்ளோரை நற்கதிக் கேற்றிச் சிவமூர்த்தி யாவார். ஆடிமாதத்தில் தாலப்யேஸ்வர ரென்னும் கோணேச மூர்த்திக்குக் குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் முதலிய கலந்து, பரிமள மிகுந்த சந்தனக்காப் பிடுவோர் தம் தந்தை, தாய், மனைவி, குரு இவர்கள் குலங்க ளொவ்வொன்றினும், நூற்றுவரை நற்கதிக் கேற்றித் தாமும் சிவலோக மெய்துவார். பெறுதற் கரிய மனிதப் பிறவியைப் பெற்றவர், பொறாமை நீத்துச் சிவபெருமானைப் பூஜியாராயின், அவர் இரண்டு கா லுள்ள மாடு போல்வார். கோணேசமூர்த்தியைப் பூஜிக்கும் குருக்கள் தேவாம்சம் பெற்றவர். அந்த மூர்த்திக்குக் குடை, சுருட்டி, சாமரம், வஸ்திரம், மணி, பூஜாபாத்திரம், வில்வதளம், புஷ்பம், தாம்பூலம், முதலியவற்றைக் கொடுப்பவர் தேவலோகத்தை ஆள்கின்ற இந்திர னுவார். மந்தாரவன நாத னுகிய கோணேச ஸ்வாமிக்கு மலர்மாலையைச் சாத்துகிறவர் சக்கிரவர்த்தி யாகிறுர். மல ரிடுபவர் இந்திர ராகித் தேவ லோகத்தில் நந்தவனத்தில் விளையாடுவார். மலர்மாலை சாத்துகிறவரை வன்மீகநாத னுன கோணேச பெருமான் தம் பக்கலிலேயே வைத்துக்கொள்ளுவார். ஒரு சொட்டாயினும் பசும்பால் அபிஷேகஞ் செய்பவர் சிவபகவா னுவர். மந்திர முறைத்தோ, உரையாமலோ, சநிப்பிரதோஷத்தில், ஒரு சொட்டுப்பால் அபிஷேகஞ் செய்பவர் சிவனுகிக் கைலாயத்திற் களிப்புறுவார். கோணேச பெருமானுக்கு மஹா பிரதோஷகாலத்திற் பசும்பாலால் அபிஷேகஞ் செய்பவர், தம் முன்னும் பின்னும் உள்ள பத்துத் தலை முறையோர்களைச் சிவலோகம் எய்துவித்துத் தாமும்

தேஜோரூபியாய்ச் சிவாநந்த முறுவார். கோணேச மூர்த்திக்கு ஒரு பசுவேனும் கொடுப்பவர் சக்கிரவர்த்தி யாகி, ஈற்றிற் சிவ னுவார். யாதேனு மியலாதவர் காலையின் முழுகித் திருநீ றணிந்து, அக்க மாலையைப் பூண்டு, சைவ தீக்ஷையுடன் பாற்காவடி சுமத்தல் வேண்டும். அந்தக் காவடியைச் சுத்தஞ்செய்து, புஷ்பங்களாலும், சந்தனத்தாலும், வில்வதளங்களாலும், கண்டாமணிகளாலும் அலங்கரித்து, அதைச் சிவனென நினைத்து, அகோரன், வாமதேவன், சத்தியோசாதன், தத்புருஷன், ஈசானன் ஆகிய ஐவரையும் அவ்வப் பெயர்களால் அர்ச்சனை செய்தல் வேண்டும். பிறகு எண்முறையேனும், நான்முறையேனும் தலையால் வணங்கி, அவ்வாறே வலம் வந்து, கைகூப்பிப் பக்தியுடன், 'ஈசான மூர்த்தியே! வணங்குகின்றேன்; தத்புருஷ மூர்த்தியே! வணங்குகின்றேன்; அகோர மூர்த்தியே! வணங்கு கின்றேன்; வாமதேவ மூர்த்தியே! வணங்குகின்றேன். சத்யோசாத மூர்த்தியே! வணங்குகினறேன்; சகல ஐஸ்வரியங்களையுங் கொடுப்பவரே! நான் மனே வாக்குக் காயங்களாற் செய்த எல்லாப் பிழைகளையும் பொறுத்தருள்க' என்று பிரார்த்தித்தல் வேண்டும்.

அந்தக் காவடியின் மணிகளிற் சரஸ்வதியும், நுனியிற் சிவனும், மூன்று மடிப்புக்களில் விஷ்ணுவும், கோட்டிற் பிரமனும், எல்லாவிடத்தும் மஹாலக்ஷ்மியும், தண்டத்தில் ஆதிசேஷனும், நான்கு பக்கங்களிலும் நான்கு வேதங்களும், கயிறுகளில் தக்ஷகன் முதலிய சர்ப்பங்களும், முனைகளில் திக்குப் பாலகர்களும், பீடத்தில் இந்திரனும் வசிக்கிறார்கள். இத்தகைய காவடியின் பாலைக் கொணர்ந்து, கோணேச மூர்த்திக்கு அபிஷேகஞ் செய்தல் வேண்டும். காவடியைச் சுமந்து, பால் வாங்க, ஓரடி நடப்பினும், ஆயிரம் அசுவமேத

யாக பலன் கிடைக்கும். பாற்காவடியை ஒருநாள் சுமப்பினும் சிவபதவி கிடைக்கும். அதி லுள்ள ஒரு சொட்டுப்பாலை அபிஷேகஞ் செய்யினும் ஒரு கோடி குலங்கள் நற்கதி யடையும்; இரண்டுநாள் அபிஷேகஞ்செய்பவரிடம் சிவபிரான் உல்லாசமாகச் சல்லாபஞ்செய்வார்; எப்பொழுதும அவரைப் பிரியார்; தம் சரீரத்தைப்போற் பாதுகாப்பார். வாழ்நாள் முழுவதும் பாற்காவடி சுமப்பவர் கோணேச மூர்த்தியே யாகிவிடுவார். முற்காலத்திற் கெட்டபிறவி யடைந்த ஒரு பாவி, ஏதோ புண்ணியவசத்தால், மந்தாரவனம் என்னும் கோணேச க்ஷேத்திரத்திற் பிறந்து, ஐந்து நாள் கோணேச பெருமானுக்குப் பாற்காவடி எடுத்தான். இந்தப் புண்ணியத் தாற் கோணேச பெருமானுடைய உருவத்தைப் பெற்றான். ஆதலின், முனிவர்காள்! யாவனொருவன் தாலப்பிய முனிவரின் தபோவனத்துக்கு அதிபதியாகிய கோணேச பெருமா னுக்குப் பால் அபிஷேகஞ் செய்கிறானோ அவன் மஹா புண்ணியவா னாகிக் கோணேச ஸ்வாமியின் உருவத்தைப் பெற்றுக் கைலாசத்தில் விளங்குவான்.

இஙஙனம் கோணேச க்ஷேத்திர மாஹாத்மியத்தில் ஆறும் அத்தியாயம் முடிந்தது.

## ஏழாவது அத்தியாயம்.

சௌநகாதி முனிவர்கள் சூதபுராணிகரே! மிகுந்த பாவஞ்செய்தவ னொருவன் மந்தார வனத்திற் பிறந்து, கோணேச ஸ்வாமிக்கு ஐந்து நாள் பாற்காவடி எடுத்ததாற் சிவரூபத்தை யடைந்ததாகச் சொன்னீர்களே. அவன் யார்? எந்த வூரிற் பிறந்தான்? யா ருடைய மகன்? அவன் பெய ரென்ன? யாது புண்ணியத்தால் மந்தாரவனத்திற்

பிறந்தான்? ஐந்துநாள் பாற்காவடி எப்படி யெடுத்தான்? மஹா ஞானவா னுன தங்களுக்குத் தெரியாததொன் றில்லை யாதலின் உரைத்தருளல் வேண்டும்' எனப் பிரார்த்திக்கச் சூதர், ஆநந்தத்தால் மயிர்க்கூச்செறிந்து சொல்லுகிறுர்: "முநிவர்களே! பாற்காவடி எடுப்பதன் பயனைக் கேளுங்கள்; அதைக் கேட்டதும் பூப் பிரதக்ஷிணப் பல னெய்தும்; கைலாசம் கிடைக்கும்; சிவபிரானுட னெப்பொழுதும் ஆநந்த மடையலாம். முன்னொரு காலத்திற் பாஹ்லிக தேசத்திற் பாவனன் என்னும் அந்தணன் வேதசாஸ்திரங்கள், மந்திர தந்திரங்க ளனைத்தையுங் கற்று, சைவதீக்ஷை பெற்றுச் சிவ பூஜை செய்து, திருநீறுங் கண்டிகையும் புனைந்து, சிவபுராணங்களைக் கேட்டுவந்தான். அவனுக்கு மஹா பாவியாகிய பிள்ளை யொருவன் பிறந்தான். எப்பொழுதும் பாவங்களையே செய்வான். பிறன் மனை விழைவான். மிகக் கோபி. சிவநிந்தனை செய்வான். இதிகாச புராணங்களைப் படிப்பவர்களைப் பழிப்பான். அஃதெவ்வாறெனின்: "இந்தப் பௌராணிகன் மஹா பாவி. கதை படிப்பவர்களுக்குத் தானஞ்செய்தால் மிகவும் புண்ணிய மெனப் பொய் சொல்லுகிறுன். அது சரியென்று எவர்கள் பணங் கொடுத்துக் கதை கேட்கிறுர்களோ அவர்கள் நரகத்தை யடைகிறுர்கள். நூறுயிரங் கோடி கற்பகாலங்கள், தினந்தோறும் கோடி கோடி தனங்களைக் கொடுத்த போதிலும், ஒரு சுலோகத்தி லுள்ள ஒ ரெழுத்தின் ஒரு பாகத்துக் கீ டாகாது. சிவராத்திரியன்று உபவாஸம் இருப்பவர்க ளுடையவும், சிவார்ச்சனை செய்பவர்க ளுடையவும், சிவகதையைக் கேட்கிறவர்க ளுடையவும் புண்ணியத்துக்கு அளவில்லை யென்று சொல்லியிருக்கிறது. கதையைக் கேட்டவர்களுக்கும், சொல்லுகிறவர்களுக்கும் பலன்

சமமான தென்றுஞ் சொல்லுகிறார்கள். அப்படியிருக்கப் புராணம் சொல்லுகிறவர்களுக்குப் பணங் கொடுப்பது வீண் என்றும் சொல்லுகிறார்கள். இந்தப் பௌராணிகனோ படிக்கிறவர்களுக்குத் தானங் கொடுக்கவேண்டு மென்கிறான். இது மெத்த ஆச்சரியம்! இவனோ அநேகம் ஸ்திரீகளைக் கொன்றுவிட்டுப் பிறரைத் தூஷிக்கிறான்" என்பான். நற்குடியிலுதித்துக் கணவனுக்குப் பணிசெய்யும் பரிசுத்தையான ஒருத்தியைப் பார்த்து, 'இவ் வழுகி எப்பொழுதும் பிறரகத்தில் வசிக்கிறாள். பரபுருஷர்களுடன் பேசுகிறாள். பரபுருஷன் நல்லாடையை இவளுக்குத் தருகிறான். இவள் கணவன் அறிவற்றவன்; மாடுபோல எப்பொழுதும் வீட்டிலேயே இருக்கிறான்; வியாதியஸ்தன்; கோபிஷ்டன்; ஆதலின், இவன் மனைவியைப் பிறர் சேர்கிறார்கள். இவள் என்னைப் பார்த்தவுடன் வேறொருத்தியைப் பார்த்துச் சிரிக்கிறாள், நானோ மிகவும் பயந்தவன்; எனக்கு வீண் நிந்தனையைச் செய்கிறாள். இனி இப்படிச் செய்யற்க என வைதபோதிலும், யாருமில்லாத சமயத்து என்னை வலுவந்தம் செய்கிறாள். வீட்டுப் பண்டங்களைச் சிறுவாடாக விற்றுவிட்டு மற்றொருத்தியைத் திட்டுகிறாள். இவள் புருஷன் உலகமெல்லாம் பிச்சை வாங்கித் திரிகிறான். இவள் பணமோ பணமோ என்று பறந்துகொண்டு, புருஷன் பெற்ற பிச்சைப் பணத்தைப் பரபுருஷனுக்குக் கொடுத்து அவனுடன் சேருகிறாள். இவன் கடூரமாய்ப் பேசுபவன். பிற பெண்களைத் தூஷிப்பவன். பதினாயிரம் பாவம் செய்தவன்' என்பான். இவற்றைக் கேட்டு, யாராகிலும் 'பிறன் மனைவியைத் தூஷியாதே, பாவம்' என்றால், 'அடா! உன் செய்தி தெரியாதா? என்னைத் தூஷிக்கிறாயா? பாவி யென்றும் கோபி யென்றும், செ

சேர்க்கை யுடையவ னென்றும் காம முடையவ னென்றும், பிறர் குற்றங் கண்டு மெத்தப் படிப்பவ னென்றும், சிவபக்தனுயும், காமம், கோபம் முதலியவற்றை யடக்கினவனுயு முள்ள என்னை ஏசினுய். நல்லது உன்னோடு நான் பேசல் தகுதியோ? இருக்கட்டும்,' என்னை யிப்படி ஏசினதற்கு ஸ்வாமி சிவ னிருக்கிறுர்; பிரமா இருக்கிறுர், அவர்களே சாக்ஷி; அவர்களே உங்களைக் கேட்பார்கள்' என்று கோபத்தை விளைவித்துச் சண்டையிடுவான். பின்னும் அப் பாதகன் சிராத்தத்தில் ஓரிடத்திற் புசித்துவிட்டு, மற்றொரு ஊரில் தான் பட்டினி யென்று அவ்வூர் சிராத்தத்திலும் புசிப்பான். வியாதியால் வருந்தும் வறிய சிவ பக்தர்களை நோக்கி, இளம்பருவத்திற் செய்த பாவத்தை யநுபவிக்கிறீர்கள் என்று பரிகசிப்பான். பிறர் வீட்டிற் பிச்சைபுகும் பேதைகளுக்குப் பிச்சை யில்லை யென்று பின்வாங்காமற் சொல்லுவான். ஒருநாள் ஓரந்தணன் அன்னபிக்ஷை கேட்டான். அவனை யழைத்து ராஜ கிருஹத்தில் ஏராளமான பொருள்களை ஏழைகளுக்கு அரசன் அளிக்கிறபடியால் அங்கே போ என்றுன். பிச்சையெடுத்த சோற்றை எங்கு வைப்பதென்று அந்த வேதியன் கேட்கத் தான் பார்த்துக் கொள்வதாகச் சொன்னுன். பிக்ஷுகன் அவ்வாறே செய்து அரசனில்லம் புக, அப் பாதகன் பிக்ஷுகன் சோற்றைக் காக்கைக்கும், நாய்க்கும், பூனைக்கும், கழுகுக்கும் போட்டு வேடிக்கைப் பார்த்தான். அரசன் வீடு சென்ற வேதியன் அங்கொன்று மில்லாததனுல், விசனமுற்றுத் திரும்பிவந்து, 'ஸ்வாமீ! வீணுக என்னை ஏன் அலையவைத்தீர்? அரசன் வீட்டி லின்றென்று மில்லையே' என்றுன். அதற்கு 'அவன், உன்னை எவன் போகச் சொன்னுன்?' என்றுன். திடுக்கிட்ட அந்தணன், தான்

வைத்த அன்ன மெங்கே என்றான். அதற்கு அவன், 'எனக்குத் தெரியாது' என்றான். கடைத் தெருவுக்குச் சென்று, பிரியமான வார்த்தைகளால் வியாபாரியைக் கொண்டாடி, நல்ல வஸ்துக்களை விலைபேசி வாங்கிக் கொள்வான். பணங் கேட்டால், முந்தியே கொடுத்து விட்டே னென்பான். வியாபாரி கொடுக்கவில்லை யென்றால், 'வர்த்தகா, ஏன் பொய் சொல்லுகிறாய்! அது நடவாது' என்பான். சண்டை மேலிட்டு ஒருவர்க் கொருவர் அடித்துக்கொண்டால், இவன் மிகப் பலவா னாகையால் வென்றுவிடுவான். தாசியைச் சேர்வான். பாவஞ்செய்வான். கடன் கொடுத்ததாகப் பொய்ப்பத்திரம் உண்டுபண்ணுவான். நின்ற இடம் நில்லாமல் அலைவான். சிவராத்திரி தினத்தில் தான் விஷ்ணு பக்த னென்றும், சிவராத்திரி விரதம் வேண்டா மென்றும், விஷ்ணு விரதம் வரின், சிவபூஜை செய்பவ னென்றும் சொல்லிக்கொள்வான். சிவமூர்த்தி புறப்படினும், விஷ்ணுமூர்த்தி புறப்படினும், பக்தியில்லாத தனால், தரிசனஞ்செய்ய ஒருபொழுதும் புறப்படான். ஏன் ஸ்வாமி தரிசனம் பண்ணப் போவதில்லை யென்று கேட்டால், "எதற்காகப் போவது? பாவ மிருந்தா லன்றோ அதைப் போக்கப் போகவேண்டும்? நற்குலத் துதித்து, சிவமதத்தை யடைந்து, விபூதி ருத்திராக்ஷங்கள் தரித்துத் தாய்தந்தையர்களை யுடைய எனக்குமா சிவதரிசநமும் விஷ்ணு தரிசநமும் வேண்டும்! ஒருநாளும் வேண்டாம். தியானம் வேண்டாம். புராணங்களைக் கேட்டல் வேண்டாம். வந்தனம், பிரதக்ஷணம், பூஜை முதலியவைக ளொன்றும் வேண்டாம். சிவபூஜை, வில்வபத்திர பூஜை இவைக ளெல்லாம் சைவனுக்கு வேண்டுவன அல்ல என்று எல்லா சாஸ்திரங்களிலுஞ் சொல்லப்பட் டிருக்கிறதாகத் தெரிந்து

கொண் டிருக்கிறேன். செய்யினும் வீண்" என்று நல்லவர்களுடைய வழியைக் கெடுக்கிற அந்தப் பாவி சொல்லுவான். இங்ஙனம் பல பாதகம் புரிந்த அவன் நெடுநாட்கள் கழிந்தபின் ஓரிரவில் வழி நடக்கும் பொழுது பாம்பு கடித்திறந்தான். நரக மெய்தி, அதிற் பலகாலந் துன்புற்று, யமதூதர்களால் வாய், மூக்கு முதலிய இடங்களிற் சூலங்களாற் குத்தப்பெற்றுப் பூமியில் வௌவாலாகப் பிறந்து, வாயினால் ஜலமலங் கழித்துப் பின் கழுதை, நாய், புலி, பூனை முதலான பிறப்பெல்லாம் பிறந் திளைத்தான். பிறகு முன்செய்த புண்ணியத்தால் ஒரு சிவ பக்த னகத்திற் பிறந்தான், உடனே தாய் இறந்தாள். ஐந்து வருஷஞ் சென்றபின் தந்தையு மிறந்தான். மூற் பிறவியில், ஓரந்தணனுக்கு மார்கழிப் பௌர்ணமியில், திருவாதிரை நாளில், ஞாயிற்றுக்கிழமை காலையிற் பிறந்தான். புண்ணியமான ஜடாநாத க்ஷேத்திரத்திற் தாசியைப் பார்க்கப்போன சமயம் சிவபிரானைத் தரிசித்தான். தெய்வச்செயலாய் நேர்ந்த சிவதரிசன பலத்தால், அவனுக்குத் தாலப்ய தபோவனம் எனும் கோணேச க்ஷேத்திரத்திற் பிறப்பு கிடைத்தது. இவன் தாய் தந்தையரை யிழந்தமையாற் சிற்றன்னையால் வளர்க்கப் பெற்றான். அவள் அவனுக்குத் தக்க வயது வந்ததும் கலியாணஞ் செய்வித்தாள். அவன் செய்த பாவத்தால் முதலில் மனைவியையும், பிறகு சிற்றன்னையையு மிழந்தான். அவன் வீடு தீப்பற்றி யெரிந்தது. விசனமும் வெறுப்பு முற்றுக் கோணேசமூர்த்தியை மும்முறை நினைந்து துதித்தான். அது சநிப்பிரதோஷ காலம். இந்தப் புண்ணிய விசேஷத்தாற் கோணேச மூர்த்தியைத் தரிசிக்க விரும்பி, அவராது சந்நிதி சென்று வணங்குவோரைக் கண்டு, தானும்

வணங்கினன். இப்படித் தினந்தோறுஞ் செய்யவே சிவபக்தி யுறுதியாய் விட்டது. இதனால் நற்புத்தியும் பூஜை செய்யும் மதியும் உண்டாயின. பிறகு தாலப்யேசராகிய கோணேச ஸ்வாமிக்குப் பாற்காவடி எடுத்து, விதிப்படி ஐந்துநாள் ஆதரத்துடன் அபிஷேகஞ் செய்துவந்தான். ஐந்தாநா ளிரவு அதிசார ரோகத்தாற் கோணேச க்ஷேத்திரத்தில் மரண மடைந்தான். விமான மேறப்பெற்று, நல்ல ஆடைகள் மாலைகள் ஆபரணங்கள் முதலியன புனைந்து, சிவனடியார்கள் போற்றிசைப்பக் கைலாச மடைந்து, சிவனுடன் ஐக்கிய மானன். ஆகையாற் கோணேச பெருமா னுடைய பாதாரவிந்தங்களை நினைந்து, பாவங்களை நீக்கிச் சுபகரமான பாற்காவடியைச் சுமந்து, கோணேசஸ்வாமிக்கு ஒருதரம் பாலபிஷேகம் பக்தியுடன் செய்தபோதிலும், கீர்த்தி, புஷ்டி, வைராக்கியம் முதலியவைகளும் ஈற்றிற் சிவசாரூப்பியமுங் கிடைக்கும்.

இப்படி ஸ்காந்தபுராணத்திற் கோணேச மாஹாத் மியத்தில் ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

## எட்டாவது அத்தியாயம்

சௌநகாதி முனிவர்கள், சூதரை நோக்கிப் "பூரணமான ஞானமுடைய சூதரே! ஆதியில் மந்தாரவனம் எப்படி உண்டாயிற்று? தாலப்பிய முனிவர் அங்குத் தவஞ்செய்து என்ன புண்ணியத்தை யடைந்தார்? வியாச முனிவரருளால் அனைத்தையு மறிந்த தேவரீர் இவை யனைத்தையும் எங்களுக்குத் தெளிவாகச் சொல்லியருளல் வேண்டும்" என்று கேட்டார்கள். சூதர் சொல்லுகிறார்: முனிவர்களே! நீங்கள் புண்ணியவான்கள். உங்கள் சேர்க்கையாற் சங்கரபகவானுடைய

யானும் பருகுவதால், யானும் புண்ணியவானே. அந்தக் கதாமிருதத்தைக் காட்டினும் சிவபதத்தைத் தரத்தக்கது வேறொன்றில்லை. ஆதலின் சிவகதையைச் சொல்லுகிறேன்: முன்னொரு காலத்தில் வேத வேதாந்தங்களைக் கற்றுணர்ந்து, முனிவர்களுள் மேன்மை பொருந்திய தாலப்பியர் என்றொரு முனிவ ரிருந்தார். அவர் நாடோறும் சைவாநுஷ்டானங்களைச் செய்து, சிவ தியானத்துடன் சிவபூஜை யியற்றி, ஐம்புலன்களை யடக்கிச் சிவகதைகளைக் கேட்டுவந்தார். வில்வ மரத்தையும், பல்வகைப் பூச்செடிகளையும் வைத்து வளர்த்துச் சிவார்ச்சனைக்காகத் தோட்டத்தை உண்டு பண்ணிக் காப்பாற்றினார். வழிப்போக்கர்களாகிய சிவபக்தர்களைப் பூஜிக்கத் தண்ணீர்ப்பந்தர், கிணறு, குளம், தோட்டம் முதலியனவற்றை யுண்டாக்கி, அவர்களைப் பூஜித்துத் தினந்தோறும் சிவபிரானைக் களிப்புடன் வணங்கினார். எக்காலமும் பிரதோஷம், சோமவாரம், சிவராத்திரி விரதங்களை அநுஷ்டித்துச் சிவதரிசனமுஞ் செய்துவந்தார். இங்ஙனம் இவருக்கு வயது எண்பதாயிற்று. சிவபக்தி முதிர்ச்சியால் உலக வாழ்க்கையை வெறுத்தவராயினார். "உலகத்தில் மிகுந்த ஆசையுள்ள எனக்குச் சிவபக்தி நன்றாய் உண்டாகாது. சிவனை யடையக் கூடிய ஞானமும் உண்டாகாது. பக்தியும் ஞானமு மில்லாவிடின் மோக்ஷ மெப்படிக் கிடைக்கும்? சரீர முள்ளவரையிற் சமுசாரத்தி லுழல்பவனுக்கு நரகமே கதி. ஆதலின் நல்லறிவுள்ளவன் சுகம்பெற விரும்பின், பலவித துன்பங்களுக் கிட மாகிய உலக வாழ்க்கையைத் துறத்தல் வேண்டும். மாயையுந் துக்கமு மாய உலக வாழ்க்கையில் துஷ்டையான பெண்டாட்டியுடன் பழகுவது கஷ்டம். பெண்டாட்டி இல்லாம லிருப்பது காமியா யிருப்பவனுக்கு

மிகக் கஷ்டம். காமத்தாற் கோப முண்டாகும். கோபத்தால் மோக முண்டாகும். மோகத்தால் அறிவு அழியும். இவ்வாறு அழிவு ஏற்படும். ஆதலின் உலக வாழ்க்கையை விட்டுச் சிவனை யடையத் தவஞ் செய்வேன். கைலாசபதியாகிய எம்பெருமான் என்ன வரம் வேண்டும் எனத் திருவாய் மலர்ந்தருளினால், தவத்தை நிறுத்தி, என்னப்பா! உன்னோடு ஐக்கியம் அடைய வேண்டுகிறேன் என்பேன்."

இவ்வாறாகத் தாலப்பிய முநிவர் நிச்சயித்துக்கொண்டு கந்தழியைக் குறித்துத் தவம்புரியச் சீடருடன் முயன்றார். எவ்விடத்தில் தவம்புரிந்தால் நல்ல பக்தியும், புத்தியும், சித்தியும் உண்டாகுமென்று ஆராய்ந்தார். காவிரிக்கும் பிரம நதிக்கும் தென் பக்கத்தில், சந்தன வனத்துக்கு மேற்கில், வடாரணிய க்ஷேத்திரத்துக்குக் கிழக்கில், பசுபதீச க்ஷேத்திரத்துக்கு வடக்கில், திந்திரிணீவன க்ஷேத்திரத்துக்குத் தெற்கில், முநிவர்களுக்குச் சித்தியைத் தரவல்ல ஸ்தான மொன்று அவர் மனதிற் றோன்றிற்று. முநிவர்களே! அதுவே கோணேச க்ஷேத்திரம். முன்னொரு முறை பிருகு முநிவர் பக்திமேலிட்டுக் கைலாசஞ் சென்று சிவதரிசநஞ் செய்தார். சிவபிரானது பொறுமையைச் சோதிக்க அவரை யுதைத்தார். அதனாற் பைத்தியங் கொண்டு, மூவுலகங்களிலு மலைந்து, நல்லறி விழந்து, வசிஷ்டா ராசிரமஞ் சேர்ந்தார். அவருக்கு நல்லறி வுண்டாகும் படி வசிஷ்டர் உபதேசித்தார். அதனால் தெளி வடைந்து, தண்டகாரணியத்தில் வசிஷ்டா ராசிரமத்துக்குத் தென்பால், தன் மனதா லொரு தீர்த்தத்தை யுண்டுபண்ணி, அதில் ஸ்நாநஞ் செய்துகொண்டு, நூறாண்டு தவ மியற்றினார். சிவபெருமான் தோன்றியருளி, அவரைப் பரிசுத்த ராக்கினார். அவர் சிவபெருமானை நோக்கித் தாம் பூஜிக்க எப்பொழுதும்

அவ் வண்ணமாகவே அங்கு எழுந்தருளியிருக்க வேண்டு மென்று வேண்டிக்கொள்ளச் சிவபெருமானும் அங்குள்ள வில்வமரத்தடியிற் பிருகுநாதன் என்னும் திருநாமத்துடன் வீற்றிருந்தருளினர். பிருகுநாதனை பிருகுமஹாமுனிவர் பூஜித்துவருங் காலத்தில், மறு கற்பம் வந்தது. அப்பொழு துண்டான காற்று, மழை, மண் முதலியவற்றாற் பிருகுநாத ரெனப் பெயரிய அவ் விலிங்கமூர்த்தி பெரும்புற்றினால் மூடப்பட்டனர். இந்த க்ஷேத்திரத்தை உலகத்தில் விளங்கச்செய்யச் சிவபிரான் திருவருளால் தாலப்பிய முனிவருக்கு விருப்ப முண்டாயிற்று. இவ்வாறு தூண்டப் பெற்ற தாலப்பிய முனிவர் இந்த க்ஷேத்திரத்துக்கு வந்து தவம்புரியத் தொடங்கினர். இங்கிருந்த புண்ணிய தீர்த்தத்தையும், அத னருகிருந்த புற்றையும், அதன் மேற்கி லிருந்த மந்தார விருக்ஷத்தையுங் கண்டார். அது தனிமர மாயினும், முதலில் வாழைத் தோட்ட மாகவும், பிறகு மந்தார வன மாகவும், அப்பால், வில்வ வன மாகவும், கலியுகத்திற் சண்பக வன மாகவும், யுகந்தோறும் மாறி வந்தது. கதலி விருக்ஷமே மந்தார விருக்ஷ மாயிற் றென்பதற்குச் சந்தேக மில்லை. இது சிவபிரான் அருளால் உண்டானது. அத னடியிற் சிவபிரானை வலம்வருதல், நமஸ்கரித்தல், தரிசித்தல், தியானித்தல் முதலியன செய்வோர் பிணி நீங்கிப் பிறப் பிறப் பற்று, மங்களங்களைப் பெறுவர். இத்தகைய மஹிமை வாய்ந்த அந்த விருக்ஷத்தி னடியில் தாலப்பிய முனிவர் பிருகு தீர்த்தத்தில் மூழ்கித் திருநீறுங் கண்டிகையும் புனைந்து, தவமியற்றத் தொடங்கி னர். 'அஷ்டைஶ்வர்யங்க ளாகிய பேரிதழ்க ளுடனும், அறு பத்து நான்கு கலைக ளாகிய சிற்றிதழ்க ளுடனும், ஞான மாகிற' காம் புடனும், கூடிய மனத்தின் மத்தியில் விளங்கும்

தாமரைப் பூவை நிமிர மலர்த்தி, அதனடுவிற் சூரியன் சந்திரன் அக்கினிகளிடம் விளங்கும் சிவனைத் தியானித்து, மூக்கி னுனியில் வைத்த் பார்வையினராய், மனதாற் ஷோட சோபசார பூஜை யியற்றிப் பரிவாரங்களையும் பூஜித்து வணங்கிக் கைகுவித்துக் கடுந்தவஞ் செய்தார். கோடையில் நாற்புரமும் தீ வளர்த்து, வெயிலி லிருந்துகொண்டும், குளிர் நாளில் நீரிலிருந்தும், மழைக்காலத்தில் ஆகாயத்தை நோக்கியும், உணவினை யொழித்துக் காமங் கோப முதலிய வற்றை நீக்கி, ஆயிரந் தேவ வருஷங்கள் அருந்தவம் புரிந்தார். அக் காலத்தில் இந்திரன் முதலாகிய தேவர்கள் இம் முநிவர் தவம்புரிவது எதற்காகவோ? ஒருவேளை நம் அதிகாரத்தைக் கேட்டு விடுவாரோ என்னும் பயத்தால், அவர் தவத்தைக் கெடுக்க நினைத்து, அப்சர ஸ்திரீகளை யனுப்பித் தவத்தைக் கெடுக்க முயன்றார்கள். அவற்றை யெல்லாம் மீறித் தவத்தை விடாது செய்தார். அவருக்கு ஏழாயிரஞ் சீடர்களுண்டு. அவர்கள் தினந்தோறும் அவரை வணங்கிக் காத்துக்கொண்டு, மந்தார வனத்தைச் சுற்றி இரண்டு மைல் தூரம் பாதுகாத்து வந்தார்கள். சிவபெருமான் கருணை கூர்ந்து, பார்வதி சமேதராய், தேவர், முநிவர், சித்தர் முதலியோர் சேவிக்க, வீணை, வேணு முதலிய வாத்தியங்கள் முழங்கக் கந்தர்வர்களும், யக்ஷர்களும் அப்சரஸுகளும் நடனஞ்செய்யப் புன்முறுவலுடன் திருவாய்மலர்ந்தருளுகிறார்: "தேவர்களே! என் பக்தன் இவ் வுலக வாழ்க்கையைத் துறந்து, மாயையை ஜயித்து, மனத்தை யடக்கி, ஐம்புலன்களை வென்று, காற்றையும் மழையையும் வெயிலையும் பொறுத்து, ஆகாரத்தைத் தவிர்த்து, மோக்ஷத்தை விரும்பி, என்னை நினைத்துத் தவஞ்செய்கின்றான். அவன் எப்பொழுதும் பக்தியுள்ளவன். முன்னிலும் அதிகமாக,

என்னை வேண்டித் தவஞ்செய்யும் அம் முநிவனிடஞ் சென்று, அவன் கேட்கும் வரங்களைத் தந்து, மங்களகரமாக அவன் பூஜைசெய்யும் க்ஷேத்திரத்தைக் கைலைக் கொப்பாக அவனால் விளங்கச்செய்கிறேன். அங்குப் பிரமன் மகனாகிய பிருகு முநிவன் சிந்தை கலங்கி, என்னைப் பூஜிக்க, யான் அவனுக்குத் தெளிந்த சிந்தையையும் கைலாசத்தையுங் கொடுத்தேன். அவனால் வில்வமரத் தடியில் லிங்கமாகப் பூஜிக்கப்பெற்றேன். அதுபற்றிப் பிரமன் முதலியோர் என்னை 'வில்வாரணியேஶ்வரர்' என்று சொல்லுகிறார்கள். ஆனால், இந்த ஸ்தலம் முந்திய கற்பத்திற் பிருகுவினாற் பூஜிக்கப்பெற்றது ஜீரணமாகிவிட்டதை நினைத்துத் தாலப்பிய முநிவரைக் கொண்டு, இதை விளக்குவிக்க எண்ணி, அவரை அங்குத் தவஞ்செய்ய நினைக்க அருள்புரிந்தேன். அங் கிருந்த என் ஸ்வரூபமான இலிங்கத்தின்மேல் மலைபோன்ற புற்றுண்டானதால், அவ்விடத்தை வன்மீகாசலம் என்று சொல்லுகிறார்கள். இதுமுதல் தாலப்பியர் தவஞ்செய்யும் வனத்தைத் தாலப்பியவனம் என்பார்கள். இதற்குப் பிருகு ஸ்தலம் என்றும் மற்றொரு பெயர் விளங்கப்போகிறது." என்று இவ்வாறு அருளிச்செய்து, சிவபெருமான் இடபாரூடராய்ப் பார்வதி சமேதராய் இந்திராதி தேவர்களும் குஹாதி பரிவாரங்களும், பிரம்மைக் கையி லேந்திய சிவ பக்தர்களும், வேதகோஷ வாத்தியங்களும் சூழத் தாலப்பிய முநிவரின் தபோவந மடைந்தார். மார்கழி மாதம் ஞாயிற்றுக்கிழமை திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஆயிரங் கோடி சூரியர்களைப்போலத் தோன்றியருளினார். முநிவர் தம்து தவத்தின் மனதில் விளங்கிய சங்கரன் மறையவே, இதுகாறும் விளங்கித் தரிசனந் தந்த ஸ்வாமியைக் காணோமே என்று ஆச்சரிய மடைந்து, மூடிய கண்ணைத் திறத்தலும்,

தம்முன் பரிவாரங்க ளுடனும் தேவர்க ளுடனும் இடபாரூடரான கைலாசநாதன் புற்றின் சமீபத்தில் விளங்கக் கண்டு, பேரானந்தங் கொண்டார்; ஆநந்தக்கடலி லழுந்தினர். கண்ணாற் காணவும், நாவாற் பேசவும் சக்தியற்றவ ரானார்.

இங்ஙனம் கோணேச மாஹாத்மியத்தில்
எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

## ஒன்பதாவது அத்தியாயம்

தாலப்பிய முனிவர் மெய்ம்மறந்து, சிறிது நேரத்தில் தம்முணர்வு வரத் தங்கத் தடிபோலக் கீழே விழுந்து, பன்முறை வணங்கி, நான்கு முறை வலம்வந்து, கைகூப்பிப் புகழுகின்றார்: "வேண்டியவைகளைக் கொடுப்பவராயும், யானைத்தோலைத் தரித்தவராயும், பாம்புகளை ஆபரணங்களாக அணிந்தவராயும், செல்வத்தைக் கொடுப்பவராயும், கணபதி முதலிய கணங்களால் துதிக்கப்படுபவராயும், இந்திராதி தேவர்களாற் பூஜிக்கப்படுபவராயும், ஸ்வர்க்கத்தைக் கொடுப்பவராயும், கம்பீர நாதத்தையும், கோர ரூபத்தையும், கபாலத்தையும் உடையவராயும், காமனை யெரித்தவராயும் காலத்தை வகுத்தவராயு முள்ள தங்களை நமஸ்கரிக்கின்றேன். காலரூபியாயும், யமனை ஜயித்தவராயும், ஆசை முதலான ஆறு பகைவர்களை ஒழித்தவராயும், பிரளயகாலத்தில் உலகத்தை யழித்தவராயும், குமாரக்கடவுளுக்குப் பிதாவாகவும், ஜடாதாரியாயு முள்ள தங்களை நமஸ்கரிக்கின்றேன். திவ்விய மங்கள மூர்த்தியாய்த் தேவி ஸமேதராய், சகலபாவ நிவர்த்தகராய், ஸர்வமங்கள தாதாவாய்ப் பரஞ்சோதி பதியாய் விளங்கும் தங்களை நமஸ்கரிக்கின்றேன். மலைக்கு

மலையாய், அணுவுக் கணுவாய், எங்கும் நிறைந்த தேஜோ மயமான தங்களை வணங்குகின்றேன். சிஷ்டராயும், சிஷ்டர்களுக்குப் பிரபுவாயும், சுபதனைக் கொடுப்பவராயும், தேவதேவரு மாகிய தங்களை வணங்குகின்றேன். மஹா பராக்கிரம முள்ளவராயும், சூரர்களைக் கொல்லுகிறவராயும், மயங்கச் செய்கிறவராயும், பகைவர்களுக்குப் பகைவராயு முள்ள பரஞ்சோதியை வணங்குகின்றேன். சர்வ கர்மங்களுக்குப் பிரபுவாயும், எல்லாக் கர்மங்களையும் செய்பவராயும், ஆநந்த ஸ்வரூபியாயும், அமிருதமய ாயும், இடபாரூடராயும், இடபக்கொடியை யுடையவ ராயும, உளள சமபுவை வணங

பூஜிக்கப்பெற்றவராயும், நித்தியராயும், குறை வற்றவராயும், மிச்ச மற்றவராயும், உரு வற்றவராயும் எல்லையற்ற வீரியத்தையும், ரூபத்தையு முடையவராயு முள்ள பரஞ் சோதியை வணங்குகின்றேன். யக்ஞ ரூபியாயும், யக்ஞ பதியாயும், யக்ஞம் செய்பவராயும், யக்ஞம் செய்து வைப்பவராயும், யக்ஞத்துக்குச் சிரசாயும், யக்ஞத்தாற் பூஜிக்கப்பெற்றவராயு முள்ள பரஞ்சோதியை வணங்கு கின்றேன். சிறிய உருவத்தை யுடையவராயும், பெரிய உருவத்தை யுடையவராயும், சிங்கத்தின் சடைபோன்ற கேசத்தை யுடையவராயும், அழகிய கேசத்தை யுடையவ ராயும், சிஷ்டர்களுக்குப் பதியாயும், முடிவற்றவராயும், தேவராயும், அளவிறந்த தலைகளை யுடையவராயும், அளவிறந்த கண்களை யுடையவராயும், அளவிறந்த கால்களை யுடையவராயும், முத்தர்களாற் சேவிக்கப்பெற்றவராயும், முத்தர்களுக்குப் பிரியத்தைக் கொடுப்பவராயும், மாயையி னீங்கினவராயும், நித்தியராயு முள்ள பரஞ்சோதியை வணங்குகின்றேன். இடப மேறிய கொடி யுடையோரே!

வந்தனஞ் செய்கிறேன். தாங்களே என்னைக் காக்கவேண்டும். தங்களைத் தவிர வேறு கதி யில்லை. தாயும், தந்தையும், நண்பனும், பந்துவும், மக்களும், குருவும், குருவுக்குக் குருவு மாகிய தங்களைத் தவிர வேறு கதி யில்லை.''

இங்ஙனம் பலவாறு துதித்துச் சிவபக்தியிற் சிறந்த தாலப்பியர் தன்னெதிரில் விளங்குஞ் சிவபெருமான் முன்னர் கைகூப்பி நின்று, அவரது கட்டளையை எதிர்பார்த்து, வாயை மூடிக்கொண்டார். சிவபிரான் புன்முறுவல் பூத்து, முநிவரை நோக்கித் ''தாலப்பியரே! சிவபக்தியிற் சிறந்தவர்களில் நீரே மேலானவர். உமது தவத்தாற் களிப் படைந்த யாம் வர மளித்திட வந்தேம். துதியாலும் பக்தி யாலும் மிக மகிழ்ந்தனம். ஆதலின் நீர் சுக முறுவீர். வேண்டியவைகளைத் தடையின்றிக் கேட்கலாம்'' எனத் திருவாய்மலர்ந்தருளினர். தாலப்பியர் பலவாறு வணங்கிக் கைகூப்பி ஆநந்த மேலிடக் கண்ணருவி பாய, உரோமஞ் சிலிர்த்து, நா குழறத் ''தங்கள் தரிசனத்தைத் தவிர யான் வேண்டுவ தொன்று மில்லை. பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும் எனக் கிணை யல்லர். அவர்களுக்குக் கிடைத்தற் கரிய தரிசன மன்றோ எனக்குக் கிடைத்தது! கருணைக்கடலாகிய காரணனை யா னென்று வேண்டுகின்றேன். நல மொன்று மில்லாத நான் அனைத்துக்கும் அருள்புரியும் தங்களோடு ஒன்றாகி வாழவேண்டும். அடியேன் தவம்புரிந்த இந்த க்ஷேத்திரத்தில், ரவிமதி விளங்கும் வரையில் தாங்கள் தங்கள் பரிவாரங்களுடன் வாசஞ் செய்தல்வேண்டும். யான் தவம்புரிந்த இவ் விடத்துக்குத் தாலப்பியவனம் எனப் பெயர் வழங்கல்வேண்டும். முப்புர மெரித்த முதல்வரே! தங்கள் தரிசனத்தில் ஆசை யுடைய இந்த க்ஷேத்திரவாசிக ளனைவரும் நிறைந்த செல்வங்களுடனும், சிறந்த

பக்தியுடனும் தங்கள் ஸ்வரூபத்தை யடைதல்வேண்டும்" என வேண்டிக்கொண்டார்.

சிவபெருமான், அவ்வா றாகுக என்றருளிப் பின்னும் சில திருவாக் களித்தார்:

"தாலப்பியரே! நீர் வேண்டியபடி முத லந்த மில்லாத என்னோ டொன்று சேர்ந்து வாழக்கடவீர். நீர் தவம்புரிந்த இவ் வனம் தாலப்பிய வனம் என் றாகுக. இந்தக் கற்பகால முடியு மளவில், என்னைப் பூஜித்து மஹோத்ஸவத்தைச் செய்யக்கடவீர். மார்கழிமாதம், பௌர்ணமி, திருவாதிரை கூடிய தினத்திற் சகல வைபவங்க ளுடனும், அருணோதய வேளையிற் பூஜைசெய்க. பசுவின் பாலினாலும் சந்தனத் தாலும் அபிஷேகஞ்செய்து, தூபதீபங் காட்டி, நைவேத்தியம் வைத்துப் பழங்களும் தாம்பூலமும் நிவேதனஞ் செய்க. நான் வசிக்கும் புற்றினால் மூடப்பெற்ற இவ் விடத்துக்கு மண்டபம், கோபுரம், மதில்கள் இவைகளைக் கட்டுக. எனக்குப் பிரியமாய் என்மீ திருக்கும் இப் புற்றினை வெட்டற்க. இவ் விடம் இவ் வுலகில் வன்மீகாசலம் என்று பிரசித்தி பெற்று விளங்குக. இக் காடு மந்தார வனம் என்று பிரசித்தி யுறுக."

இவ்வாறு கைலாசநாதர் சொல்லியருளிப் பரிவாரங்கள் சூழ, இடபவாகனத்தினின்றும் வ ன் மீ கா ச ல த் தி ன் சிகரத்தில் இறங்கித் தம் சங்கற்பத்தால் மங்கள விமானம் எனப் புகழ் பெற்ற தொரு விமானத்தை யுண்டாக்கி, அதன் காப்பண் திகழும் பிருகு முனிவராற் பூஜிக்கப்பெற்ற பிருகு நாதன் என்னும் இலிங்கத்தில் மறைந்தருளினார். தேவியார் தாலப்பியேசரது பே ருருவத்தை யுடையவ ளாதலாலும், மேன்மை பொருந்திய தேவர்களுக்கும் அருள் புரிபவ ளாதலாலும், பிறப்பு இறப்பு என்னும் பிணிகளை

விலக்குபவ ளாதலாலும் பிருகத் தூர்க்காம்பா எனப் புகழ்பெறுகிருள். இத்தகைய மகிமையுள்ள அம்மையாரும், முனிவர் காண அவ் விலிங்கத்திலேயே மறைந்தருளினுர். விநாயகர், குமாரர் முதலான பரிவார மூர்த்திகளும் அந்த மந்தார வனத்தில் வரிசையாய் விளங்கிஞர்கள். அது முதல் அவ் விடத்தை மந்தாரவனம் என்று சொல்லுகிருர்கள். முனிவர்களே! ஆதியில் அவ்விடம் பிருகு முனிவராற் பூஜிக்கப்பெற்று, வில்வ வனம் எனப் புகழுடையதாய் விளங்கிற்று. மறு யுகத்தில் மந்தார வனம் என லாயிற்று. தாலப்பிய முனிவர் தவம்புரிந்த காரணத்தால் தாலப்பிய வனம் ஆயிற்று. சிவாஞ்ஞையால் தாலப்பிய முனிவர் ஸ்நாநஞ் செய்துவந்த தீர்த்தம் தாலப்பிய தீர்த்தம் எனப் புகழ்பெற்று, எல்லாப் பாவங்களையும் போக்கவல்ல தாயிற்று. தாலப்பிய முனிவர் சீடர்க ளுடனே, ஸ்வாமியின் உத்தரவுபடித் திருக்கோயிலைக் கட்டக் கருதித் தமது தபோபலத்தால், தேவதச்ச ஞகிய விசுவகன்மனை யழைத்தார். விசுவகன்மன் மகிழ்ச்சியுடன் வந்து, தான் செய்யவேண்டிய தென்னென வேண்ட, முனிவர், 'பிருகு நாத னென்னும் என் நாதனுக்குத் திருப்பணி செய்க' என்ன, தேவதச்சனும் 'அங்ஙனே ஆகுக' என் றுரைத்து, நவரத்நங்களாலும், பொன்னுலும், அநேக கோபுரங்களையும், மண்டபங்களையும், ஏழு மதில்களையும், மனோஹரமான மேடைகளையும், விநோதமான விதானங்களை யும் இயற்றித் திருக்கோயிலைக் கட்டிமுடித்தார். பிறகு முனிவரை நோக்கி, உத்தரவுபடிக் கட்டி முடித்ததைப் பார்க்க வேண்டும் என்ன, அவரும் பார்த்து, மகிழ்ந்து, மெச்சினுர். அவரிடம் விடைபெற்று, விசுவகன்மரும் தேவலோகஞ் சென்ருர். அதன் பின்னர் தாலப்பியர் நாடோறும் பலவித புஷ்பங்களாலும் ஷோடசோபசாரங்களாலும்,

பழங்களாலும், பாலாலும், சந்தனத்தாலும் பூஜித்துவந்தார். மார்கழிமாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில், அருணோதய காலத்தில் மஹோத்ஸவத்தைச் செய்தார். பல்வகைப் பண்ணியங்களையும், சித்திரான்னங்களையும், பாயசத்தையும் பரிவாரங்களுடன் விளங்கும் ஸ்வாமிக்குப் படைத்துத் துதித்தார். பிறகு நித்தியோத்ஸவம், மஹோத்ஸவம் முதலானவைகளைப் பக்தியுடன் செய்துவந்தார். இங்ஙனம் வழிபட்ட தாலப்பியருக்கு ஞானமேலிட்டு, சிவபக்தி தலையெடுத்து, சிவசாயுச்சியம் கிடைத்தது· அது முதல் இவ்விடத்தைத் தாலப்பிய தபோ வனம் என்று முனிவர்கள் சொல்லுகிறார்கள். இத் தலத்தை ஒருகால் தரிசிக்கினும் புண்ணியங் கூடிச் சிவலோகங் கிடைக்கும்

இப்படிக் கோணேச மாஹாத்மியத்தில்
ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

## பத்தாவது அத்தியாயம்

முனிவர்களே! தாலப்பியேசருடைய சந்நிதானம் கற்பமுடிவில் ஜீரண மாய்விட்டது. முன்போலப் புற்று வளர்ந்து எங்கும் மூடிவிட்டது. இங்ஙனம் அழிவுற்ற ஜீவராசிகளைச் சிவபெருமான் அமிருத குடத்திற் சேர்த்து வைத்தார். பின்னர் உலகத்தைப் படைக்கத் திருவுள்ளங் கொண்டபொழுது, அந்தக் குடம் மூன்றுபாகமா யுடைந்தது. ஒரு பாக மாகிய குடமுகம் தாலப்பியேசலிங்கத்தில் ஒன்று பட்டது. அதுபற்றிப் பாவமலைகளைப் பிளக்காநின்ற தாலப்பியேசருக்குக் கோணேசர் என்ற பெய ருண்டாயிற்று· ஆங்குள்ள தாலப்பிய தீர்த்தத்தில், அமிருத துளிகள்

விழுந்தமையால், அந்தத் தீர்த்தம் பிறப்பையும் இறப்பையும் நீக்கும் அமிருத தீர்த்தம் எனப் பெயர்பெற்றது. கருடன் கொண்டுவந்து வைத்த அமிருத குடத்தைத் தாலப்பியேசர் விழுங்கினவ ராதலால், அவர் அமிருத லிங்கம் எனப் பெயர் பெற்ருர். இங்ஙனம் பல முநிவர்களாற் பூஜிக்கப்பெற்ற கைலை நாதனுக்குப் பிரியமான அந்த அமிருத க்ஷேத்திரத்தைத் தரிசிக்க முயலுபவர் அப்பொழுதே முக்தர் ஆகிவிடுகிருர். அந்தத் தலத்திற் சிவதருமஞ் செய்பவர்கள் தேவப் பிறப்பினரே; இவ் வுலகிற செல்வங்களுடன் சுகித்துக் கைலாசத்தை யடைவார்கள். சிவதருமத்தைச் செய்கிறே னென்று ஒருகால் மொழிபவர் இந்திர ராகி, நந்தவனத்தில் ஆநந்தத்துடன் ஆடுவார்; சிவதருமத்தைச் செய்பவரும், கோணேசரைப் பூஜிப்பவரும் எல்லாத் தேவர்களாலும் பூஜிக்கப்பெறுவார். சிவதருமஞ் செய்யக் கருதிப் பிச்சை யெடுக்க ஓரடி வைப்பினும், அசுவமேதயாக பலன் கிடைக்கும். சிவதருமஞ் செய்பவரைக் குளிர்ந்த கண்ணுற் பார்ப்பவர் எல்லாத் தேவர்களாலும் பூஜிக்கப்பெற்று, இறுதியிற் சிவபதவி யடைவார். கோணேசனுக்குச் செய்த அணுவளவு தருமம் மலைபோ லாகும்; இந்திர பதவியை யளிக்கும். சிவதருமஞ் செய்பவரைப் பரிகசிப்பவன் பாவங்க ளெல்லா வற்றுக்கும் இருப்பிட மாவன். சிவதருமத்தைச் செய்வ தாய்ச் சொல்லிச் செய்யாம லிருப்பவன் மஹாபாவியாய்க் கோவேறு கழுதை யாவான். சிவதருமஞ் செய்வதாய்ச் சொல்லிப் பொருளைத்தேடித் தன் வீட்டுச் செலவு செய்து கொண்டவன் கோட்டா னுவான். சிவதருமஞ் செய்பவரைப் பரிகசிப்பவன் கண்டமாலை யாகிய ரோகத்தை யடைவது மன்றி, விரைவில் ரௌரவ மஹா நரகத்தை யடைவான். சிவதருமஞ் செய்பவரைப் பார்த்து மகிழ்ந்து,

ஆடையாலும், பொருள்களாலும் உபசரிப்பவர் அரசராவார். சிவதருமத்துக்காக ஈட்டியவற்றை வட்டிக்குக் கொடுத்து, அந்த வட்டியாற் பிழைப்பவன் கண்டமாலையை யடைவான். சிவதருமத்துக்காக ஏற்படுத்திய சொத்தைத் திருடுபவன் மரத்திற் புழுவாக மும்முறை பிறப்பான். சிவதருமத்தாற் பயனொன்று மின்று; அதைச் செய்யற்க என்று, செய்பவனைத் தடுப்பவன் யாவரானும் அவமதிக்கப்படுவான். கொலை, களவு, குடி, குரு மனைவியோடு சேர்தல், சிசுஹத்தி, கோஹத்தி முதலிய பாவங்களைப் பதினாயிரந்தரஞ் செய்தவனாகினும், சிவதருமஞ் செய்வானாகிற் பரிசுத்த முறுவான். கோடி பிரமசாரிகளையும், கோடி இல்லறத்தோரையும் பூஜிக்கும் பலன் சிவதருமத்தாற் கிடைக்கும். கோடி அக்கிரகாரங்களை அந்தணர்களுக்குத் தானஞ்செய்தல், பாலகர்களுக்குப் பால் தானங் கொடுத்தல், கன்னிகாதானம் கோடி செய்தல் இவற்றா லுண்டாகும் பலனைச் சிவதருமம் தரும். பதினாயிரம் கோயில்களைக் கட்டி, வழிநடப்போர்க் குதவுந் தோட்டங்களை ஏற்படுத்தியும், குளங்களை வெட்டியும், கோதானங்களைச் செய்தும், பிரதோஷ விரதங்களையும், சோமவார விரதங்களையும், மாசசிவராத்திரி விரதங்களையும் அநுஷ்டித்தும், பதினாயிரம் பசுத்தொழுவங்களை நிருமித்தும், கோடி கங்காஸ்நாநமுஞ் செய்தபோதிலும், சிவராத்திரியில் ஒரு நொடிப்பொழுது சிவபெருமானைப் பூஜிப்பதற் கிணையாகாது. பிறந்தது முதல் வாழ்நா ளெல்லாந் தினந்தோறும் கேட்பவர்களுக்குச் சொல்லும் சிவ கதாமிருதத்தா லுண்டாகும் பலன் அனுவளவு சிவ தருமத்தால் உண்டாகும். சிவபெருமானுக்குப் பொற்றகட்டுடன் அஷ்டபந்தனஞ் செய்பவர் அஷ்டைசுவரியங்களையும் அடைவார்; எல்லாப் பாவங்களினின்றும்

விடுபடுவார்; தங்கள் குலத் துதித்த கோடி பெயர்களை நற்கதி யடையச்செய்து, தாமும் சிவலோகத்தில் விளங்கு வார். அஷ்டபந்தனஞ்செய்ய உதவியாயிருப்பவர் தேவ ராவார். அதை யிடிப்பவர் பதினாயிரம் மூதாதைக ளுடன் நரக முறுவார். அஷ்டபந்தன்ஞ் செய்யுங் காலத்தில் அரதனத்தைச் சேர்ப்பின், இப் பிறப்பிலும்,முற் பிறப்பிலுஞ் செய்த பாவம் போய்ப் புண்ணிய முண்டாகும். அஷ்டபந்தன மின்றிப் பூஜை செய்யின், குல மழிந்து, அரசுந் தேசமு மழிந்துவிடும். சிவபெருமானுக்கு அஷ்டபந்தன காலத்தில் ஓ ரணுவாகினும் உதவி செய்தவருக்கு நற்புத்திரனும் நல்ல மனைவியுங் கிடைப்பார்கள் ; பொரு ளில்லாதவர் பொருளை யடைவார்; நோயுடையவர் நோயி னீங்குவார்; வெற்றியை விரும்புவர் வெற்றியை யடைவார்; கைலாசத்தை விரும்புவர் கைலாசத்தை யடைவார். அஷ்டபந்தனத்துக்குக் கொஞ்ச மேனும் உதவி செய்பவர் பஞ்சகாலத்தில் அன்னதானஞ் செய்யும் பயனை அடைவார். கோணேச ஸ்வாமிக்குத் தைலாபிஷேகஞ் செய்ய விரும்புபவர் புண்ணியராய்க் கைலாசத்தில் நெடுநாள் திளைப்பார். தைலாபிஷேகத்துக்கு இரண்டு மரக்கால் எள் தானஞ்செய்பவர் மோக்ஷ மடைவார். ஒரு பாரம் எண்ணெய் கொடுப்பவர் அரசராகிச் சங்கர ராவார்.மந்தாரவன நாதருக்குப் பரிமளமுள்ள எண்ணெயால் ஒருகால் அபிஷேகஞ் செய்யினும், அரசபதவி கிடைக்கும்; எல்லாப் பாவங்களு நீங்கும். எல்லோருக்கும் நட் புண்டாகிக் கைலாசத்தில் நீண்டகால வாழ்வு கிடைக்கும். தே னபிஷேகஞ் செய்யின் இந்திரபதவி கிடைக்கும். தேனைச் சோதித்துச் சுத்தஞ்செய்து அபிஷேகஞ் செய்பவர் அரசராய் விளங்கிக் கடைமுறை கைலாசபதிக்கு நண்ப ராவார். பழங்களால் அபிஷேகஞ் செய்பவர் சக்கிரவர்த்தி

யாவார். இலக்கம் வில்வதளங்களாற் பூசிப்பவர் இந்திர ராவார். இலக்கம் ஜபா குசுமங்களாற் பூஜிப்பவர் கைலாசத்தில் விளங்குவார். பொன்னாற் கட்டிய உருத்திராக்க மாலையைக் கோணேச மூர்த்திக்குச் சாத்துபவர் அவருடைய உருவத்தை அடைவார். பொன்னாலாய வில்வதள மாலையைக் கோணேசருக்கு அணிவிப்பவர் இந்திர ராவார். கோணேச ஸ்வாமியின் சந்நிதியில் திருப்பணி செய்ய நினைந்தவர் சிவனாவார். திருப்பணிக்கென ஒரு கூடை மண்ணேனும், கல்லேனும் கொடுத்தவர் கைலையிற் சிவனாய் விளங்குவார். கோணேச ராலயத்திற் புல் பூண்டுகளைப் பிடுங்குபவர் செல்வத்துடன் வாழ்ந்து முக்த ராவார். உடைந்த மண்டபத்தைப் புதிதாய்க் கட்டுபவர் வெகு சுகத்துடன் வேந்த ராவார்; இருபது மூதாதைகளுடன் சிவசாயுச்சியம் பெறுவார்.* இடிந்த சந்நிதானத்தில் ஒரு கல்லை வைத்துத் தமது கையாற் கட்டினவர் அளவிறந்த பாவங்களினின்று நீங்கிக் கைலையை யடைவார்.

முனிவர்களே! முன்னொரு காலத்தில் ஓரந்தணன் அமிருத க்ஷேத்திரத்தில் வசித்தான். அவன் மிகப் பொருளுடையன். தனக்குக் கடன்பட்ட ஒரு ஸ்தபதியைத் தேடி, அந்தக் கடன்காரன் அமிருதேச ராலயத்தில் திருப்பணிசெய்வது தெரிந்து, அங்குச் சென்று, மற்ற வேலைக்காரர்களுடன் வேலை செய்துகொண்டிருந்த அந்த ஸ்தபதியைக் கண்டு, அவனிடம் பொருளை வாங்குவதற்காக, அக் கட்டிடத்தில் தானுமொரு கல்லை வைத்துக் கட்டினான். சிவதருமஞ் செய்வதனாற் புண்ணியங் கிடைக்குமென்னு மெண்ண முடையவனாய்ச் செய்தவ னல்லன். அங்ஙனம், அவ் வேதியன் அளவிறந்த பாவங்களினின்றும்

* செம்பரத்தை மலர்களாற்.

நீங்கிச் சிவலோக மெய்தினன். ஆதலின் பிருகுநாத க்ஷேத்திர மென்னும் மங்களகரமான கோணேச க்ஷேத்திரஞ் சென்று, அந்த ஸ்வாமியின் சந்நிதியிற் சிவ தருமத்தைப் பக்தியுடன் செய்பவர் ஸ்ரீ கைலாசபதியுடன் சேர்ந்து வாழ்வார்.

இவ் விதம் கோணேச மகிமையிற்
பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

## பதினோராவது அத்தியாயம்

முனிவர்கள் சூதமுனிவரை நோக்கிப் "பொருளுடையவ னொருவன் கடன்காரனைத் தேடிக் கோணேச ராலயஞ் சென்றவன், திருப்பணி செய்யு மிடத்தில் எதற்காக ஒரு கல்லை வைத்துக் கட்டினன்? அவனுக்குச் சிவபதங் கிடைத்த தெப்படி? கருணைக் கட லாகிய முனிவரே! இவற்றி னுண்மையை விளக்கியருளுக" என்றார்கள். சூதமுனிவர் சொல்லுகின்றார் :

முனிவர்களே! முன்னொரு காலத்தில், மந்தாரவன க்ஷேத்திரத்தில், வேதசாஸ்திரங்களை யுணர்ந்து, நல்லொழுக்கங்க ளமைந்த ஓ ரந்தண ரிருந்தார். அவர் சிவபூஜை செய்து, திருநீறுங் கண்டிகையும் புனைந்து, சிவபிரானைத் தியானித்துப் பஞ்சாக்ஷரத்தை ஜபித்து, அதன் பொருளை யுணர்பவர். சிவபக்தர்க ளான வேதியர்க ளுக்கு அறுசுவையுட னுண்டி யளிப்பவர். அவருக்குக் கௌசிகர் என்று பெயர். அவர் மனைவி பாவத்தில் விருப் புற்றவளாய்ப் பிறர் வீட்டி லிருப்பாள். விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்து, சிவனை நினைத்துச் சிவ

கதைகளைக் கேட்கும் பக்தர்களைக் கண்டால், இவர்கள் பிறர் பொருள்களைக் கவர இவ்வித வேஷம் பூண்டுள்ளவர்கள் என்பாள். சிவன் எங்கே யிருக்கிறார்? அப்படி அவ ரிருந்தால் எதிரிற் பேசட்டுமே? தம் வயிற்றை நிரப்பிக் கொள்ள மனிதர்கள் இவ்வுலகில் இவ்வாறு பேசுகின்றனர். தீர்த்த ஸ்நாநத்தால் யாதொரு பயனு மில்லை. பய னுண்டென்பீ ராகிற் கண்டவ ரொருவரு மில்லை. ஆகையால், ஸ்நாநம் செய்வதும் வீண். அங்குத் தானம் செய்வதும் வீண். என் றிவ்வாறு அந்த அந்தணன் மனைவி யனைத்தையுந் தூஷிப்பாள். ஒரு பொழுதும் ஸ்நாநஞ் செய்யாள். அவள் புருஷன் ஏன் செய்யவில்லை யென்றால், முன்னமே ஸ்நாநஞ் செய்து விட்டேன் என்று இசைந்து கூறுவாள். சமையல் செய்தாற் சங்கரனுக்கு ஸந்தோஷத்துடன் நிவேதனஞ் செய்யு முன் தான் தின்றுவிடுவாள். வீட்டி லுள்ள பண்டங்களை ரகஸியமாக விற்றுச சிறுவாடு சேர்ப்பாள். பிறரொடு கூடிப் பரிகாசம் பேசுவாள். இவளுக்கு ஒரு பாவியான புதல்வ னுண்டானான். அந்தணர் நெறியி னீங்கி, நெல், எள், துணி, வெல்லம், கடுகு, பால், தயிர், நெய், கறிகள், தின் பண்டங்கள் முதலிய பொருள்களைக் கொண்டுபோய்க் கிராமங்கள், நகரங்கள்தோறும் சென்று, கடைத்தெரு முதலான இடங்களில் விற்பான். ஸ்நாநம், ஸந்தியாவந்தனம், ஔபாஸனம், வேத மோதுதல், பிதுர்தர்ப்பணம் முதலியவற்றை ஒருபொழுதும் செய் தறியான். வட்டிப் பணத்தைக் கொண்டு ஜீவனம் செய்வான். சிலருக்குப் பொருளை வட்டிக்குக் கொடுப்பான். சிலருக்குக் கொடுத்த பணத்தை நின்று வாங்குவான். சிலரிடம் பிரியமாய்ப் பேசுவான். சிலரிடம் சண்டையிடுவான். சிலரிடங் கொடுத்த பொருளை யிழந்துவிடுவான். சிலரிடங்

கொடுத்த பொருளை மிகுந்த லாபத்துடன் திரும்பப் பெறுவான். இவ்விதம் அவனொரு பெரிய தனவந்தனானான்.

என்றிவ்வாறு சூதமுனிவர் சொல்லக்கேட்ட முனிவர்கள் "சிவபக்தியிற் சிறந்த கௌசிகன் என்னும் அந்தணருக்கு மனைவியும், மகனும் எப்படிப் பாவத்தில் ஆசைகொண்டனர்? பாவஞ் செய்த அந்த மகனுக்கு எப்படிப் பொருள் வளர்ந்தது? விளக்கியருளல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தனர். சூதர் சொல்லுகிறார்: முற்பிறப்பிற் கௌசிகன் என்னும் அந்தணன் காஸ்மீர தேசத்தில் ஓர் அந்தணனாகப் பிறந்து, வேத சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து, சிவபக்தியிற் சிறந்து, சிவகதையைக் கேட்டு வந்தார். சிவராத்திரியிற் சிவகதையைக் கேட்க விரும்பிச் சில துணைவர்களுடன் சிவாலயஞ் செல்லுகையில், இருளின் மிகுதியால் எதிரில் வருபவர்களை இன்னாரென் றறிய வியலவில்லை. அக்காலத்தில் மிக ரூபவதியாயும், பலவித நகைகளும் பூண்டு, யாரையு மயக்கக் கூடியவளாயும், சங்கீத நடனங்களைத் தீரத் தெளிந்தவளாயும், நல்ல புடைவை, சந்தனம், குசுமம் இவைகளை யணிந்தவளாயுமுள்ள ஒரு தாசி தெய்வச் செயலாய் எதிர்வர, அந்தணரும் அவளும், அவ்விருளில் ஒருவரையொருவர் கட்டிக் கொள்ளுவது போல, முட்டிக் கொண்டனர். பிறகு அவ் வேதியன் மதிமயங்கி, "ஐயோ! பாவம் இப் புண்ணியமான சிவராத்திரியில் ஸ்வாமி ஸந்நிதியிற் கதை கேட்கப் போகுமெனக்குத் தாசியின் தழுவுதலா வேண்டும்? இதனினும் பாவமில்லை" என்றான்.

அவன் தோழர்கள் அவனை நோக்கி, 'ஏன் பாசாங்கு பண்ணுகிறீர்? முன்னமே நீர் இவளிடஞ் சிநேகம் வைத்திருப்பது நிச்சயமாயெங்களுக்குத் தெரியும். இல்லாவிடில் இத் தாசி உம்மை யிவ்விதம் கட்டிக்

கொள்வாளா? உம்மைக் கண்டவுடன் அவளும் சிரித்துக் கொண்டு சிவாலயம் திரும்பி வந்துவிட்டாள்' என றிவ்வாறு சொன்ன இகழ்ச்சி மொழிகளைக் கேட்டுக்கொண்டு தேவாலயம் சென்றான். அங்கே சிவகதையைக் கேட்கும பொழுது, இடையிடையில் அந்தத் தாசியை நினைத்துத் தன் தோழர்கள் தன்னைப் பழிக்க லாயிற்றே, என் செய்வது? எங்குப் போவது? எப்படி பழிப்பை ஒழிப்பது? என் றிவ்வாறு நினைத்துச் சிவராத்திரி முழுவதும் போக்கினான். பொழுது புலர்ந்த பின்னும் சௌந்தரிய முள்ள அந்தத் தாசியை நினைத்து, அந்த அந்தணன் ஊண், உறக்கம், ஸ்நாநம், பானம், பேசசு முதலியவற்றில் விருப் பற்று, மூன்று நாள் சிவபெருமானைத் தியானஞ் செய்யாம லிருந்தான். அது கண்ட அவன் மனைவி திடுக்கிட்டு, அவனை வணங்கி, ஏன் மதிமயங்கினீர் என்ன, அவன் தாசியால் இவ்வாறு நிகழ்ந்த தென்றான். அந்தப் பதிவிரதை அவளைத் தன் வீட்டுக் கழைத்துத் தன் கணவன் மயக்க நீங்கும்படி அவனொடு சேரச் செய்தனள். கௌசிகன் அத் தாசியுடன் கூடி வாழ்ந்து, ஓய்வுற்றுத் தன் பாவத்தைப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து போக்கக் கருதி, மோக்ஷ மளிக்கும் இராமஸேதுவில் ஸ்நாநஞ் செய்தான். இந்தப் புண்ணியத்தால் இந்த மறையவன் மறு பிறப்பிற் சுபமான மந்தாரவன க்ஷேத்திரத்திற் பிறந்தான். சிவராத்திரி யன்று தற்செயலாய்த் தாசியைத் தழுவினதாற் பாவியான புதல்வ னுண்டானான். அப் புதல்வன் பிறந்தது முதல் வாலிப காலங்களிற் பிறர் பெண்டிரைக் கண்டால், தனக்கு மனைவியாகத் தகு மெனவும், அவனுக் கவள் தகுந்தவ ளல்ல ளெனவுங் கூறுவான். இதை அவன் நண்பர்கள் கேட்டு நகைத்துப் போவார்கள். இந்தப் பாவத்தால் அவன் மனைவி

பொய் முதலிய பாவங்களைச் செய்பவ ளானாள். சிவராத்திரியிற் சிவாலயத்திற் சிவகதையைச் சிரத்தை யுடன், கேட்டவ னாதலாற் கௌசிகனுக்குப் புண்ணிய க்ஷேத்திரத்திற் பிறப்புக் கிடைத்தது. ஆயினும் சிவாலயஞ் செல்லுங் காலத்திற் சிவாஞ்ஞையா லாய தாசியின் தழுவுதலால் அவன் பாவியாக, அவன் மனைவியும் மைந்தனும் பாவியானார்கள். மற்றொரு காரணமு முண்டு. கௌசிகன் முற்பிறப்பிற் கோழுட்டியாய்ப் பிறந்து, சிவராத்திரியிற் சிவாலயஞ் சென்று, சிவகதையைச் செவ்வையாய்க் கேட்டவன், சிவகதை யோதும் வேதியனுக்கு ஒரு காசளவுங் கொடுக்கவில்லை. சிவராத்திரியிற் சிவபுராணம் படிப்பவருக்கு எவ்விதத்திலும் பொரு ளளிப்பது முக்கியம். சிவராத்திரியிற் பக்தியுடன் சிவகதையைக் கேட்டுக் கதை யுரைக்கும் அந்தணனை ஆடையாபரணங்களால் அலங்கரிப்பவன் சக்கிரவர்த்தி யாவான்; பொருள், புதல்வன், மனைவி முதலான செல்வங்களுடன் வாழ்ந்து, தலைஞானத்துடன் கைலாச முடைவான். சிவராத்திரியிற் சிவாலயத்திற் சிவகதையை நான்கு யாமங்களிலுங் கேளாத பாவி பதினான்கு இந்திரர்கள் கால மளவும் ரௌரவ நரகத்திற் றுன்புற்றுப் பிறகு நபும்ஸகனாய்ப் பிறப்பான். அன்றேல், மிகக் கெட்ட புதல்வனைப் பெறுவான். அனைவராலுந் தூஷிக்கப் படுவான். ஆதலின் சிவராத்திரியிற் சிவகதையைச் சிரத்தை யுடன் கேட்டல்வேண்டும். அப்படிக் கேட்டால், ஆயுள் ஆரோக்கியம், கீர்த்தி, மனைவி, புத்திரன், பௌத்திரன் முதலானவர்களை யடைவதுந்தவிர, யாவரும் கொண்டாடவு மாகும். கதை கேட்குங் காலத்தில் வீண்வார்த்தை பேசாமலும், ஸ்திரீகள், துஷ்டர்கள் முதலானவர்களோ டிணங்காமலும், பாய், ஆசன முதலியவைகளி லிராமலும்,

படாமலும், வாயை மூடிக்கொண்டு, பக்தியுடன் கேட்டல் வேண்டும். முநிவர்களே! சிவராத்திரியிற் சிவபெருமானுக்குச் சிரத்தையுடன் அபிஷேகஞ் செய்து, பூஜை செய்து, வில்வதளங்களா லர்ச்சித்து, மங்களகரமான சங்கரன் கதையை அவன் சந்நிதியிற் கேட்பவர்கள் பாவங்க ணீங்கிப் புண்ணிய ராகிப் பொருள், புதல்வன், பூங்குழலார், கீர்த்தி முதலான அநந்த சுகங்களுடன் கூடிவாழ்ந்து, இறுதியிற் சிவரூபத்துடன் கைலாசத்தில் மங்களமாக விளங்குகிறார்கள். ஆதலாற் கௌசிகன் பிள்ளை மந்தாரவன க்ஷேத்திரத்திற் பிறந்து, மிகுந்த சம்பத்துடன் கடன் கொடுப்பவனானான். ஒரு கொத்தனுக்குக் கடன் கொடுத்திருந்தான். அந்த கொத்தனைச் சிவதருமஞ் செய்பவ னொருவன் கோணேசமூர்த்தியின் சந்நிதிக்கு அழைத்து, இடிந்த இடத்தைப் புதிதாகக் கட்டச் சொன்னான். அவன் கட்டிக் கொண்டிருக்குந் தருணத்திற் கௌசிகன் மகன் அங்கு சென்று, “அடா, கொத்தா! என் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பிறகு வேலை செய்யலாம்; வேலை செய்யாதே” என்றான். அவனைப் பிடித் திழுத்தான்; பலவாறு வைதான். “வட்டிக் கொடுக்க முடியாத மட்டி! என் வட்டி முதலைக் கொடடா, மூடா!” என்றான்.

சிவதருமஞ் செய்வதிற் சிரத்தையுடைய அக் கொத்தன் மிக வணக்கத்துடன், ‘அந்தணரே! சற்றுப் பொறுத்திரும். கையி லுள்ளதொரு கல்லைக் கட்டிவிட்டுச் சிவதருமஞ் செய்பவரிடஞ் சென்று, என் சம்பளத்தை வாங்கித் தங்களுக்குத் தருகிறேன். அதிக வம்பு வளர்க்க வேண்டாம். சிவ தர்மத்தைச் செய்யவிடாமற் றடுப்பவர் நபும்ஸக ராவார் என்றும், அன்றி, பொருள், புதல்வன், பூமி, மனைவி முதலானவற்றை இழந்து,

நரகத்தை யடைவார்க ளென்றும், பெரியோர்களாற் கேள்வி யுண்டு. ஆதலின் வேலையைத் தடுக்கவேண்டாம்' என்று பலவாறு சொன்னான். அந்தணன் கடுங்கோபங் கொண்டு, 'நீ கட்டும் கல்லை நான் கட்டுகிறேன். பணத்தைக் கொடுத்து விடு' என்று சொல்லி, அவன் கையிலுள்ள கல்லைப் பிடுங்கித் தான் கட்டினான். அப்பால், 'ஏ! கொத்தா! வெளியிற் போவோம் வா. பணத்தைக் கொடுத்துவிடடா; மூடா! மதிகேடா! இங்கே வாடா. கொடாமற் போனா லுன்னை விடுமோடா?' என்று சொல்லி அவன் கையைப் பிடித்துக் கரகர வென்று மேற்படியி னின்றுங் கீழே யிழுத்து வருங் காலத்தில், இழுத்த வேகத்தால், இருவர்க்குங் கால் தடுமாறி, ஒருவர்மே லொருவர் விழுந்து, இருவர்களு மிறந்தார்கள்.

முனிவர்களே! இவ்வா றிறந்த இருவர்களும், சுந்தர மூர்த்திகளாய், அம்பரத்தில், இந்திர விமானத்தில், நவ ரத்நங்க ளிழைத்த திவ்வியாபரண வஸ்திரங்களையும், பரிமள மிகுந்த நறுமலர் மாலைகளையும், திவ்ய சந்தனத்தையும், அணிந்தவர்களாய்த் தேவ ஸ்திரீகள் ஸேவிக்கச் சிவ பக்தர்கள் பூஜிக்க விளங்கினார்கள். நெடுநாட் பாவியான கௌசிகன் மகனையும், வாங்கிய கடனைக் கொடாத கொத்தனையும் பிடித்து வரும்படி, அத் தருணத்தில் எம தூதர்கள் கட்டளை பெற்று வந்தார்கள். சிவ தூதர்கள் எம தூதர்களை யடித்துத் துரத்திவிட்டுத் திருப்பணி வேலை செய்த கொத்தனையும், ஒரு கல்லைத் தன் கையினாற் கட்டிய வேதியனையும் கைலாசத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அவ் விருவர்களும் அங்கே கைலாசநாதன் உருவத்தை யடைந்து, ஆநந்தத்துடன் வாழ்ந்தார்கள்.

ஆகையாற் புண்ணிய ஸ்தலமாகிய கோணேச க்ஷேத்திரத்திற் பாவங்களை அழிக்குஞ் சிவதருமத்தைச்

செய்பவன் சிவலோக மெய்தி, நீடூழி காலம் சிவரூபத்துடன் வாழ்வான்.

பதினோராம் அத்தியாயம் முடிந்தது.

---

## பன்னிரண்டாவது அத்தியாயம

முனிவர்களே! அமிருத தீர்த்தத்தின் மகிமையை எல்லீரும் கேளுங்கள். அதைக் கேட்டவர்கள் கோணேச ராக ஆகின்றனர், கோணேசர் ஆலயத்துக்கு மேல் பக்கத் தருகில் விளங்கும் தீர்த்தங்களிற் சிறந்த அமிருத தீர்த்தத்தைக் கண்டவர்களும், உட்கொண்டவர்களும், தொட்டவர்களும், அதில் ஆடியவர்களும் பிறப் பிறப்பாகிய பிணிக ணீங்கித் துக்கமின்றி வாழ்கின்றார்கள். குளம், கிணறு, நதி முதலிய இடங்களில் முழுகும்பொழுது, அமிருத தீர்த்தத்தை நினைத்து ஸ்நாநஞ் செய்யின், சிவ பெருமானுக்குப் பிரிய முண்டாகிறது. பிறிதொரு காரியத்தைக் குறித்துச் செல்லுங் காலத்தில், தற்செயலாய்க் காணுறாஉம் அமிருத தீர்த்தம் பிரமஹத்தி பாவத்தைப் போக்குகின்றது. அதைத் தொட்டவருக்கு முன் எட்டுப் பிறப்பிற் செய்த பாவங்கள் நீங்குகின்றன. தாகத்துக்கு நாடோறும் அமிருத தீர்த்தத்தைப் பருகுபவர் புண்ணிய ராகிறார். அதில் முழுக விரும்பி, அது விருக்கும் திக்கை நோக்கி, ஓ ரடி வைத்தாலும், கங்கா ஸ்நாந பலமும், சிவலோக வாழ்வுங் கிடைக்கும். மக நக்ஷத்திரத்தில் அமிருத தீர்த்தத்தில் முழுகினல், அந்த மாசம் முழுவதும் செய்த பாவ நீங்கும். சிவராத்திரியிற் பக்தியுடன் முழுகினல், பதினுயிர அசுவமேத யாக பலன் கிடைக்கும். மார்கழிமாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் முழுகிக் கோணேச மூர்த்தியைத் தரிசிக்கிறவர் தேவ ராவார்.

அமிருத தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்பவர் கோணேச மூர்த்தியே யாவார். பூர்வ புண்ணியத்தால் அத் தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்ய விருப் புண்டாகும். அமிருத தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்பவா அமிருத மயமான சரீர முடையவ ராகிறுர். இந்த அமிருத தீர்த்தமே, பிருகு தீர்த்த மென்றும், தாலப்பிய தீர்த்த மென்றும், கன்னியா தீர்த்த மென்றும் பெயர் பெறும். புத்திரப்பேறு வேண்டுபவள், ஆவணி வெள்ளியிற் பிருகு தீர்த்தத்தில், வைகறையின் மூழ்கி, மஞ்சள், குங்குமம் அணிந்து, ஒருவருடனும் பேசாது, ஈர வுடையுடன் கை குவித்துக்கொண்டு, பிரகத்தூர்க்காம்பா சந்நிதியில் வணங்கி, நெய்யுஞ் சர்க்கரையுங் கலந்த மாவிளக்கைப் பழத் துடனும், தக்ஷிணை தாம்பூலங்க ளுடனும் நிவேதனஞ் செய்து, புஷ்பங்களாலும், அக்ஷதைகளாலும், குங்கும சந்தனங்களாலும், அம்மனைப் பூஜித்துத் தன் வேண்டுகோளை விண்ணப்பித்து, மாவிளக்கு எரியும் வரையில் பிரதக்ஷிணஞ் செய்யக்கடவள். இங்ஙனம் கோணேச நாதனையும் அம்மனையும் நான்கு வெள்ளிக்கிழமைகளிலும், அல்லது, ஒரு கிழமையி லாயினும் பூஜித்து, நிவேதனஞ் செய்த பாயசத்தைப் பக்தியுடன் உண்டு, இரவிற் பூமியிற் படுத்தாற் குலம் விளங்கும் புதல்வன் பிறப்பான். பிருகு தீர்த்தத்திற் றிங்கட்கிழமைகளில் முழுகுபவர் பௌண்டரீக யாகத்தின் பலனை யடைகிறுர். கார்த்திகை மாதத்தில், ஒரு தரம் மூழ்கினுல், வாஜபேய யாகத்தின் பலனும், கீர்த்தியும், செல்வமு முண்டாகும். கார்த்திகை மாதத்தில், ஞாயிறு, திங்களிற் செய்யும் ஸ்நாநம் பதினுயிரம் பிரமஹத்தி தோஷத்தைப் போக்கும். இந்தத் தீர்த்தத்தில் தாலப்பியேசரைத் தியானித்து, மாகஸ்நாநம் செய்பவர் அரச ராகிறுர். மாசி மாதம், ஞாயிறு தோறும்

ஸ்நாநஞ் செய்பவர் தங்குலத் துதித்த கோடி பெயர்களை நற்கதி யடையச் செய்கிறார். தாலப்பிய தீர்த்தத்தில், மாசி மகமும் பௌர்ணமியுங் கூடிய ஞான்று ஸ்நாநஞ் செய்பவர் தங்குலத் துள்ள கோடி பெயர்களைக் கரையேற்றுகிறார். அமாவாசை, பௌர்ணமி, கிரஹணங்கள், விஷு முதலிய மாதப் பிறப்புக்கள், உத்தராயண தக்ஷிணாயன புண்ணிய காலங்கள் இவைகளிற் ஸ்நாநஞ் செய்பவர் கோடி மூதாதைகளை நற்கதி யடையச் செய்கிறார். பிராமணனைக் கொன்றவன், கட்குடித்தவன், பொன்னைத் திருடியவன், குருவின் மனைவியுடன் சேர்ந்தவன், சிவ சொத்தை யபகரித்தவன், சிவ பக்தனை வைதவன், சிவ பூஜையை விட்டவன், சிவ தருமத்தைக் கெடுத்தவன், பறவைகள் பார்த்த அன்னத்தை நிவேதனஞ் செய்தவன், மிகச் சூடான அன்னத்தையும், மூடாது கொணர்ந்த அன்னத்தையும் நிவேதனஞ்செய்தவன், சிவனை யிகழ்ந்தவன், சிவமூர்த்தியை யுடைத்தவன், சைவ சாஸ்திரங்களைப் பழித்தவன், சிவபூஜை சிவாபிஷேக சாமான்களைத் திருடினவன், சிவ னடியார்களை யிகழ்பவன், சிவோத்ஸவத்தைத் தடுப்பவன், விபூதி. ருத்திராக்ஷம், திரிபுண்டரம், பஞ்சாக்ஷரங்களைப் பழிப்பவன், பஞ்சாக்ஷர ஜபத்தை விட்டவன், போஜன காலத்தில் ஒருவற்குக் குறையவும் இன்னொருவற் கதிகமாகவும் உண்டியளித்தவன், குருவின் சொத்தைத் திருடியவன், சைவ தீக்ஷை, சைவ விரதங்களை விட்டவன், சிவராத்திரியைப் பழித்தவன், வில்வ மரத்தை வெட்டினவன், வில்வார்ச்சனையைப் பழித்தவன், விபூதி திருடியவன், ஸ்வாமி, மித்திரன், பிதா, மகன் இவர்களுக்குத் துரோகஞ் செய்தவன், பிறர் சொத்தைக் கவர்ந்தவன், சிவசொத்தையும், சிவலிங்கத்தையும் விற்றவன், பிதுர்

சிரார்த்தம், பிதுர் பக்தி இவைகளை விட்டவன், சிவபூஜை யின்றி மலத்துக் கொப்பாகிய அன்னத்தை யுண்டவன், தீக்ஷா குருவுக்குத் துரோகஞ் செய்தவன், நெருப்பு வைத்தவன், விஷங் கொடுத்தவன், ஸ்நாநம், சந்தி முதலிய ஆசாரங்களை விட்டவன், தன் குலத்துப் பெண்ணைச் சேர்பவன், பொயயுரைப்போன், கடவு ளில்லை யென்பவன், வெற்றிலை போட்டுக்கொண்டு சிவதரிசனஞ் செய்பவன், மாமிசத்தைப் புசித்துவிட்டுச் சிவபூஜை செய்பவன், பிராமணன் சொத்தை யபகரித்தவன், பசுக்களின் வழியைத் தடுத்தவன், குளம், ஏரிகளை உடைத்தவன், கிணறு தோட்டங்களைக் கெடுத்தவன், பசுவை விற்றவன், உப்பு, கருந்துகில், எள், எண்ணெய், விபூதி இவைகளை விற்றவன், எள்ளைத் தானம் பெற்றவன், செக்கை யுடைத்தவன், குயவன் சக்கிரத்தை யுடைத்தவன், கள்ளுண்டவளைச் சேர்பவன், சிவபிரானுக்கு அபிஷேகஞ் செய்த எண்ணெய், அன்னம் இவற்றை யுட்கொண்டவன், தூர ஸ்திரீயைப் புணர்ந்தவன், பூவைத் திருடினவன், சிவதோட்டத்தை யழித்தவன், ஈற்றெடுத்திருக்கும் பசுவைத் தானம் வாங்கினவன், இவைபோன்ற அநேக பாவங்களைச் செய்தவ னாயினும், மாசி மகங் கூடிய பௌர்ணமியிற் கோணேச பெருமான் கும்ப லக்நத்தில் தீர்த்தம் கொடுக்குங் காலையிற் பக்தியுடன் அமிருத தீர்த்தத்தில் முழுகுவா னாயின் எல்லாப் பாவங்களினின்று நீங்கிப் பரிசுத்தனாய்ச் சிவபக்தனாய் முக்த னாகிறான். அமிருத தீர்த்தத்தில் மாசி மாதம் பௌர்ணமியில் ஒரு தரம் ஸ்நாநபானஞ் செய்தவர் கங்கை சங்கமுகத்தில், நூறு வருஷ காலம் அன்னதானம், கோதானம், பூதானம் செய்த பலனை யடைந்து, முடிவிற் சிவபதத்தை யடைகிறார். அமிருத தீர்த்தத்துக்குத்

தேவதை-செல்வங்க ளனைத்தையும் அளிக்கும் கோணேச ஸ்வாமி. விநாயகமூர்த்தி அதைக் காப்பவர். அதற்கு ருஷி-பிரமன். அமிருத தீர்த்தத்தின் மேல்கரையில் ஓரர சிருக்கின்றது. அதன் அடியிலுள்ள கணபதியையும், கோணேச ஸ்வாமி முதலாகிய முன் சொல்லப்பட்ட தேவர்களையும் வணங்கி, அவர்களுக்கு அர்க்கியங் கொடுத்து, உலர்ந்த ஆடை யுடுத்து, விபூதி ருத்திராக்ஷங்களைக் கூடுமிடங்கள் முப்பத் திரண்டிலும், பதினு றிடங்களிலுந் தரித்து, திரிபுண்டர மணிந்து, சுத்தமான மனத்துடன் பஞ்சாக்ஷரத்தை ஜபித்து, சிவபக்தர்களை யழைத்துத் தானங் கொடுத்து வணங்குதல் வேண்டும். சிவ பக்தியிற் சிறந்த சைவர்களுக்குத் தண்ணீர்க்குடம், வஸ்திரம், சிவலிங்கம், விபூதி, பால், தயிர், நெய், எண்ணெய், தேன், பசு, கம்பளம், பழம், பாயசம், கன்னிகை, குதிரை, பருத்தி, ஒரு ஜோடி பூணூல், ருத்ராக்ஷ மாலை, சிவபூஜை ஆகியவற்றை வணங்கிக் கொடுக்கவேண்டும். இங்ஙனம் சுபகரமான சுதா தீர்த்தத்தில் முற்கூறியாங்கு, தைப் பௌர்ணமியில் முழுகுபவர் சிவனுகிறூர். மேற் சொன்ன படித் தானஞ் செய்யச் சக்தியில்லாதவர் அறுசுவையுடன் அன்ன மளித்தால், தானமெல்லா மளித்த பயனை யடைவார். முன் குஷ்டரோகியான ஓரந்தண பரதேசி ஊர்தோறு மலைந்து, தற்செயலாய் அமிருத க்ஷேத்திர மடைந்தார். மாசி பௌர்ணமியில் அமிருத தீர்த்தத்தில் முழுகக் குஷ்ட நீங்கி, இஷ்ட பலனை யடைந்தார். ஆகையால், முனிவர்களே! அமிருத தீர்த்தம் எல்லா நோய்களையும் போக்கும்; கீர்த்தியைக் கொடுக்கும்; எக்காலமுந் தேவர்களால் வணங்கப் படும்; நன் மனைவி, பொருள், புதல்வன், பூமி, பசு இவைகளை நல்கும்; சிவபக்தியை வளர்க்கும்; அஷ்டைஶ்வரியங்களை

யளிக்கும்; ஈற்றிற் சிவரூபத்தோடு சேர்க்கும். இங்ஙனம் இது விளங்குகின்றது.

இவ்வாறு கோணேச மகிமையிற்
பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

## பதின்மூன்றுவது அத்தியாயம்

முநிவர்கள், "சகல தத்துவங்களை யுணர்ந்த சூதமுநிவரே! பிராமணனொருவன் அமிருத க்ஷேத்திரம் வந்து, அமிருத தீர்த்தத்தில் முழுகினதாற் குஷ்டநீங்கினன் என்று சொன்னீர்களே. அவன் எவவூர்? யார் மகன்? அவன் பெயரென்ன? யாது பாவத்தாற் குஷ்ட முற்றான்? யாது புண்ணியத்தால் அமிருத க்ஷேத்திரம் வந்து, அமிருத தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்தான்? இவைகளை யருளிச்செய்ய வேண்டும்" என்று வேண்டினார்கள். சூதர் சொல்லுகின்றார்: "முன்னொரு காலத்திற் காஸ்மீர தேசத்திலே, கண்ணுவ கோத்திரத்திலே, பிறந்த சிருத்தர்மன் என்றொரு பிராமண ரிருந்தார். வேதங்களையும் சாஸ்திரங்களையு முணர்ந்தவர்; மந்திர தந்திர மறிந்தவர்; சிவபக்தியிற் சிறந்தவர்; சம்சயங்க ளெல்லாவற்றையும் பிளந்தவர். சந்தியாவந்தனம் ஔபாசனங்களை வளர்த்தவர்; யாகங்கள் செய்பவர்; பொறுமையிற் பெரியவர்; சிவபூஜையிற் சிறந்தவர்; சிவ தருமத்திற் சிலாக்கியர்; சிவ பக்தர்களுக்குப் பூஜ்யர்; பஞ்சாக்ஷரத்தை ஜபிப்பவர்; பஞ்ச யஞ்ஞங்களைச் செய்பவர். அவருடைய உத்தமமான மனைவியின் பெயர் சுசீலை; தினமும் குருபூஜை, பிராமண பூஜை, பதிபூஜை, மாமன் மாமிகள் பூஜை இவைகளைச் செய்பவள்; மிகப் படித்தவள். சூரியனைப் பூஜிப்பவள்; சிவகதை கேட்பவரிற் சிறந்தவள்;

தன் புருஷனிடத்தில் மிகக் காம முடையவள்; மஞ்சள், குங்குமம், கஸ்தூரி, சந்தனம் இவற்றை யணிந்தவள்; நல்ல நகைகளைத் தரித்தவள்; கெட்டவர்களாற் கிட்டமுடியாதவள்; ஸாதுக்கள் மார்க்கத்தை வாழ்விப்பவள்; இவ்விதமான நற்குண முடைய மனைவியிடம் சிருத்தர்மனுக்கு, முன் ஜன்மத்தின் தீவினையால், மிகப் பாவியான பிள்ளை பிறந்தான். அவன் பெயர் பிரசண்டன். துஷ்டர்களுடன் சேர்ந்து பிதாவைத் தூஷிப்பான்; தாயைப் பழிப்பான்; சிவபூஜை செய்யும் பிதாவைப் பார்த்து, 'ஓ பிதாவே! ஏன் வீணாக சிவபூஜை செய்து சிரமப்படுகிறீர்? சிவனென்னு மொரு முநிவன் இருந்தா லன்றோ அவனைப் பூஜிக்கவும், அவன் கதையைக் கேட்கவும் வேண்டும்? வீண் பாடுபட்டு வாழுங் காலங்களைப் பாழாக்காதீர்!' என்பான். பின்னுமொரு சமயம், 'சிவபூஜை செய்பவன் தரித்திரனாய் வருத்த மடைகிறான். சிவபூஜை செய்யாதவன் செழித்தவனாய்த் தனத்தை யடைகிறான். அழகுடையவன் விபூதியைத் தரித்தாற் குரூபி யாகிறான். நல்ல சந்தனங்களை யணிந்தாற் பூர்ண சந்திரன்போல் விளங்குகிறான். ஆகையாற் பிதாவே! சிவபூஜையென்னும் சிரமத்தைவிட்டு, நவரத்நங்க ளிழைத்த தோள்வளை, தோடா, கடுக்கன், அரைநாண், கிரீடம் முதலான பலவித பூஷணங்களைப் பூண்டுகொள்ளும். ருத்திராக்ஷங்களைப் பூண்ட தங்களைப் பார்க்க எங்களுக்கு மிகப் பயமா யிருக்கிறது. சிவபூஜை செய்யுங்காலத்தில் வில்வதளங்களைக் கிள்ளிக்கிள்ளி எறிந்து பூஜை செய்யுங் குருக்களை வீணாக ஏன் பூஜை செய்கிறீர்? அவர் தம் பிழைப்புக்காக ஆகமங்க ளென்னும் பலவித பொய்யான சாஸ்திரங்களை யுண்டாக்கிச் சிவபூஜை செய்யின் மிகப் புண்ணியமென் றுரைக்கிறார். அவருடைய உட்கருத்தைத்

தாங்க ளறியவில்லை. தர்மமென்பது எங்கு மில்லை. தத்தம் தனங்களை யநுபவிப்பதே மேலானது; அதுவே சுவர்க்கம்; அதுவே கைலாசம்; எவ்விதமாவது ஒருவன் நிறைந்த பொருளைத் தேடி, அதை வீட்டில் மூடிவைத்து வயிறார நன்றாய்ச் சாப்பிட்டு, நல்ல புஷ்ப சந்தன கஸ்தூரிகளை யணிந்து, திவ்ய வஸ்திராபரணங்களைப் பூண்டு, வெட்கத்தை விட்டு, நல்ல சுந்தரிகளைப் புணர்ந்தால், அவனுக்குச் சந்திரன் போன்ற சுந்தர குமாரன் பிறப்பான். அந்தப் பிள்ளையை நல்ல ஆடை யாபரணங்களாலும், நல்ல அன்ன பானங்களாலும், வளர்த்தல் வேண்டும். அதனாலேயே மோக்ஷங் கிடைக்கும். இவ்வித பிள்ளை யில்லானுக்கே நரகம்' என்றிவ்வாறு பிரசண்டன் பிதாவுக்குத் தர்மோபதேசஞ் செய்தான்.

இவ்விதம் கெட்ட வழியைச் சட்டமாய்ப் பேசும் பிரசண்டன் வழியை முற்றிலும் விட்டுவிட்ட சிவ பூஜையிற் சிறந்த சிருத்தர்மன் மனம் வெறுத்து, இப் பாவியான பிள்ளையை விட்டுப்போவதே நலமென்று நினைத்து, மனைவியுடன் கோகர்ண க்ஷேத்திரஞ் சென்றார். அவருக்குப் பிள்ளையை விட்டோமே என்ற வருத்த மில்லை. 'சிவத் துரோகியான இவன் பிள்ளை யன்று; சத்துரு. சிவனையும், தாயையும், தந்தையையும் நிந்திக்கும் பாவியை விட்டுத் தூரத்தில் விலகவேண்டும். தாய், தகப்பன், தங்கை, தமக்கை, மனைவி, மித்திரன், பந்துக்கள், பிள்ளை, பேரன், தம்பி, தமையன் முதலாகிய யாராயினும், சிவனைத் தூஷித்தவரை விட்டுத் தூரத்தில் விலகவேண்டும். அது சிவசம்மத மாகும். சிவத் துரோகிகளாகிய தாய் தந்தை முதலியவர்களுடன் ஒரு நொடிப்பொழுது வசித்தபோதினும் அறுமடங் கதிகமான சிவத்துரோகி யாகிறான். பன்றியன்,

நித்திய கருமங்களை விட்டவன், தாசியைப் புணர்பவன், கோபி முதலாகிய யாரா யிருந்த போதினும், சிவபூஜை செய்பவன் சகல பாக்கியங்களையும் பெறுவான். தாயுடன் புணர்பவன் பாவத்தினும் பெரிய பாவத்தை சிவத்துரோகி யடைகிறான். பிராமணனைக் கோறல், கட்குடித்தல், பொன்னைத் திருடுதல், குருவின் மனைவியைப் புணர்தல், தாய், தந்தை, குரு, அரசன் முதலானவர்களைக் கொல்லுதல், விஷமிடுதல், கோஹத்தி, சிசுஹத்தி, பிள்ளையைக் கொல்லுதல் முதலிய பாவங்களெல்லாவற்றினும் சிவத்துரோஹம் பெரிது. ஒருகோடி வேதியரைக் கொன்ற தோஷமும், குருதாரகமனம் முதலான கோடி பாவங்களும் சிவனைத் தூஷித்தவன் பாவத்துக்கு அணுவளவு ஈடாகாது. சிவனைத் தூஷிப்பவனுடன் சேர்வதனு லுண்டாகிய பாவம் சிவத்துரோகியின் பாவத்தினும் பெரிதென்று பெரியோர் சொல்வர். பெண்டாட்டி, பிள்ளை, பந்துக்கள், சிநேகிதர் முதலானவர்கள் பணத்துக்குப் பங்காளிகளே தவிர வேறல்லர். எனக்குச் சிவபெருமானே தாய், தந்தை, உறவினர், கடவுள், மித்திரர், பெண்டாட்டி, பிள்ளை முதலிய யாவும். அவருடைய அடியார்களே எனக்கு எல்லாவித உறவினரும்' என் றிவ்வாறு நினைத்து, சிருத்தர்மன் பொருள்களையும் பிள்ளையையும் விட்டுப் பரம வைராக்கியத்துடன் தன் மனைவியோடு கோகர்ணக்ஷேத்திரஞ் சென்றான். பிரசண்டன், 'சனி தொலைந்தது' என்னும் சந்தோஷத்துடன் விலை மகளிரை யழைத்து, அவர்களுக்கு வேண்டிய பொருள்களையும், ஆடை யாபரணங்களையும், வீட்டையுங் கொடுத்து, அவர்களுடன் ரமித்தான். சொத்துக்கள் அழிந்தபின், திருடிக் கொணர்ந்து அவர்களுக்குக் கொடுத்தான். தவறின காலத்தில் அவர்கள் இவனை ஓட்டினார்கள். சிவத்

துரோஹத்தாலும், பிதுர் துரோஹத்தாலும், கண்டபடி யெல்லாம் புணர்ந்ததாலும் குஷ்டநோய் உண்டாயிற்று. கைகால்கள் புண்களாற் குறைந்தன. உறவினர்கள் இவனைப் பார்த்த லாகாது, துரத்தவேண்டுமென்று சொல்லி ஓட்டினார்கள். சோற்றுக்கு வழியற்று ஊரைவிட்டு வெளிப் புறப்பட்டான். காலிடறிக் கீழே விழுவான்; வெயிலில் விழுவான்; ஜலத்தில் விழுவான்; உடம்பு பிளந்து, ரத்தம் பெருகும்; விழுந்த இடத்திலேயே ஒரு ஜாமநேரம் கிடப்பான்; கடைவாயில் நீரொழுகக் கைகால் முடங்கிக் கீழே கிடப்பான். இங்ஙனம் மூக்குடைந்து, முழங்கால் பிளந்து, கன்னம் பெயர்ந்து, முதுகு கிழிந்து, துன்பமடைந்து, மிகக் கெட்டவனென்று எல்லாருந் திட்டத் தெற்கு நோக்கிச் சென்றான். ஆயினும், முற்பிறப்பில், ஸ்ரீசைல க்ஷேத்திரத்திற் பிரதோஷத்தில், மல்லிகார்ச்சுன மூர்த்தியைத் தற்செயலாய்த் தரிசித்த புண்ணிய வசத்தால், மந்தாரவனக்ஷேத்திரம் போய்ச் சேர்ந்தான். அந்த வேளை மந்தாரவன நாதராகிய கோணேச ஸ்வாமிக்கு மஹோத்ஸவம் மஹிமையுடன் நடந்தது. மாசிப் பௌர்ணமி கும்ப லக்நத்திற் கோணேச ஸ்வாமி அமிருத தீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தார். அவர் சந்நிதியிற் பிராமண, க்ஷத்திரிய வைசியர்கள் முதலியவர்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், இந்திரன் முதலிய திசாநாதர்களும் ஒருங்கு சேர்ந்து, சிவபிரானை நாடி, வாயாரப் பாடினார்கள்; வேத மோதினார்கள்; பதினெண்வகை வாத்தியங்களை முழங்கினார்கள். விசித்திர நடனங்களை ஆடினார்கள். அஃதிரநாதனைப் பூஜித்து, அவருடன் அமிருத தீர்த்தத்தில் உத்ஸவாபிருத ஸ்நாநத்தைச் செய்தார்கள். குஷ்ட ரோகத்தாற் கஷ்டப்படும் பிராமணன் ஆநந்தத்துடன்

ஸ்நாநஞ்செய்து கரையேறும் ஜனங்களைக் கண்டு, அமிருத தீர்த்தக்கரை வருதலும், கால்தடுமாறிக் கரையோரத்தில் விழுந்தான்; படியோர மாதலின் புரண்டு தண்ணீரில் விழுந்தான். அங்கிருந்தவர்கள் விழுந்த வேதியனைக் கரை தூக்கிவிடவே, அவன் பாவ மனைத்து நீங்கி, குஷ்டமும் அடியோடு நீங்கி, அழகிற் சிறந்த வாலிபனாய் விளங்கினன். அங்குள்ள அனைவருக்கும் தரிசனம் அளிக்கும் கோணேச மூர்த்தியை இடபவாகனத்தின்மீது சேவித்தான். பரிவாரங்கள் வணங்கிச் சூழ விளங்கும் முத்தியளிக்கும் மூல மூர்த்தியைப் பணிந்து, இரு கரங்களையுங் குவித்துக் கண்களாற் கண்டு, வாயால் வாழ்த்தினன். ஆரணங்கள் தேடும் காரணனாகிய சிவபிரானைத் தரிசித்தவளவிற் பரிசுத்தனாகி மடபுத்தி யொழிந்து, திடபக்தி யடைந்தான். குஷ்ட நீங்கிக் கஷ்டந் தீர்ந்து, புஷ்டி யடைந்ததைப் பார்த்து, மட்டில்லா ஆநந்தத்துடன் கோணேச ஸ்வாமியைப் பணிந்துகொண்டு, தன் வாழ் நாளை யங்கேயே கழித்தான். அங்குள்ளவர்கள் அதி மனோஹர ரூபத்துடன் விளங்கும் பிராமணனைக் கண்டு, ஆச்சரியங் கொண்டு, ஸந்தோஷ முற்று, மங்களகரமான அமிருத தீர்த்தத்தை மிகப் புகழ்ந்தார்கள். கோணேச மூர்த்தியின் கிருபையால் வியாதி யற்ற வேதியன் சிவபக்தி முதிர்ந்தவனாய்ச் சில வருஷங்கள் அங்கேயே வசித்துப் பலவிடங்களில் யாசகம் வாங்கிக் கோணேச ஸ்வாமிக்கு மண்டபம், கோபுரங்கள், மதில், தோட்டம் முதலான தருமங்களையும் செய்வித்தான். இறுதியிற் கோணேச நாதருடைய கிருபையால் எல்லாப் பாக்கியங்களையும் அளிக்கும் கோணேச ஸ்வாமியிடம் ஐக்கிய மடைந்தான் முனிவர்களே! அமிருத தீர்த்தத்துக்குச் சமானமான தொன்று வேறெங்கு மில்லை. சகல ரோகங்களையுந்

தரித்திரத்தையுந் தூரத்தும்; ஞானத்தையும், பக்தியையும் வளர்க்கும்; மங்களகரமான சங்கர னுருவத்தைக் கொடுக்கும்.

என்றிவ்வாறு கூறிய சூதரை நோக்கிச் சௌநகாதி முநிவர்கள், 'சிருத்தர்மரோ பிராமணர்களுட் சிறந்தவர்; அவர் மனைவியோ பெருத்த பதிவிரதை. யாது பாவத்தாலவர்களுக்குத் துஷ்டப் பிள்ளை பிறந்தான்? தயைசெய்து சொல்லியருளுக' என்று வேண்டினார்கள்: சூதர் சொல்லுகிறார். முநிவர்களே! சிருத்தர்மன் என்னும் வேதியர் முற்காலத்திற் கஜாரண்ணியத்தில் அநேகம் பிள்ளைகளைப் பெற்றிருந்தார். அவர் மனைவி தரித்திரத்தால் வருந்திக் கணவனைப் பார்த்து, 'நாதா! கஜாரண்யத்திலுள்ள சிவபெருமான் சந்நிதியிற் சமையல் செய்தாகிலும், குழந்தைகளையும் என்னையும் ரக்ஷியும்' என்றாள். அவன் அதைக் கேட்டு அப்படியே சமையல் வேலை செய்துவந்தான். ஒருநாள் பதினைந்து நாழிகை வேளையில், உச்சிக்கால பூஜைக்காக அறுசுவையுடன் கூடிய அன்னங்களை மூடாமல் திறந்து, ஸ்வாமி சந்நிதிக்குக் கொண்டுபோனான். அதனால் சிவத் துரோகியான பிள்ளை பிறந்தான். சிவபெருமானைத் தூஷிப்பதாலும், அவருக்குத் துரோஹம் செய்வதாலும் குலமழிந்துவிடும். அவர் மனைவியாகிய சுசீலை சில தினங்களுக்கு முன் புருஷனைப் பார்த்துத் தனக்கு மிகப் பசியாயிருப்பதாற் சிவபூஜை செய்ய வேண்டாமென்று சொன்னாள். அந்தப் பாவத்தால் அவளுக்குப் பாவியான பிள்ளை பிறந்தான். சிவபூஜை செய்யாமற் புசிப்பவன் மலத்தை யுண்டவனாகிறான். ஆபத்துக் காலத்திலுஞ் சிவ பூஜைசெய்து புசிப்பவன் புண்ணியவானாகி, மங்களகரமான சங்கர ரூபத்தை யடைகிறான். சிவபூஜை செய்யாதவர்கள்

யாராயினும் கால சூத்திரம் என்னும் நரகத்தில் விழுகின்றனர். சிவபூஜை செய்யாதவன் பாவியாகிய பிள்ளையை யடைகிறான்; அல்லது பிள்ளை யில்லாதவனாகிறான். இவ்வித பாவங்களெல்லாம் அமிருத தீர்த்தத்தில் தைம்மாதம் பௌர்ணமியில் முழுகுவதனால் சூரியனைக் கண்ட இருள் போல் அழிந்து விடுகின்றன. இவ்விதம் சொல்லப்பெற்ற அமிருத தீர்த்தத்தி னுடையவும், கோணேச ஸ்வாமியி னுடையவும் வைபவத்தைக் கேட்பவரும், படிப்பவரும் மிகப் புண்ணியவான்களாகிச் சகல சுகங்களையு மநுபவித்து, இறுதியிற் கைலாச நாதனுடைய ஸ்வரூபத்தை யடைகின்றனர்.

இவ்விதமாய்க் கோணேச க்ஷேத்திர மஹிமையில்
பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

## பதினான்காவது அத்தியாயம்

சூதர் பின்னும் சொல்லுகிறார்: முனிவர்களே! அந்த அமிருத தீர்த்தத்தையும் அதன் மகிமையையும் பின்னும் சொல்லுகிறேன் கேளுங்கள்: அந்தத் தீர்த்தத்தின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் எல்லாப் பாவங்களும் நீங்கிச் சங்கர பகவானுடைய ரூபம் சித்திக்கும். அமிருத தீர்த்தத்தைக் கன்னிகா தீர்த்த மென்றும் சொல்லுவார்கள். அதற்கு நிகரானது மூ வுலகங்களினு மில்லை. அவ்வளவு விசேஷ மகிமை யுண்டானதற்குக் காரணம் சொல்லுகிறேன் கேளுங்கள். முன்னொரு காலத்திற் பாவங்களைப் போக்கிப் புண்ணியங்களைக் கொடுக்கும் கங்கை முதலான நங்கைகளெல்லாம் ஒருங்குகூடி, ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டார்கள். உலகில் அளவற்ற பாவங்களைச் செய்யும்

பல பாவிகள் நம்மிடத்தில் ஸ்நானஞ் செய்வதால், நமக்குண்டாகும் பாவங்களை எப்படிப் போக்குவோ மென்று சொல்லி ஆலோசித்துக் கைலாயஞ் சென்று, ஆங்கு ஜகத் குருவாயும், பார்வதி நாதராயு முள்ள சிவபெருமானை வணங்கி, 'ஸ்நானஞ் செய்ய வரும் பாவிகள் சம்பந்தத்தால் எங்களுக் குண்டாகிய பாவங்களை நாங்கள் எப்படிப் போக்குவோம்?' என்று வேண்டினார்கள். அப்பொழுது கருணைக் கடலாகிய காரணர், அவர்களை நோக்கி, "நதிகளே! உலகில் உத்தமமான என் ஸ்தலங்களில் மிகவும் உத்தம மானவை மூன்று. காவிரியின் தென்கரையி லுள்ள அந்த க்ஷேத்திரங்களில் மூன்று தீர்த்தங்க ளுள்ளன. நீங்க ளெல்லோரும் புண்ணிய நதிகள். உங்களுட் கங்கை, காவேரி, கோதாவிரி, யமுனை, நருமதை, பாலாறு, ஸரஸ்வதி, ஸரயு, கன்னியாகுமரி ஆகிய ஒன்பதின்மரும் சகல பாவங்களையும் பரிசுத்தப் படுத்துகிறீர்கள். நீங்கள் எல்லோரும் உங்கள் அம்சத்தாற் கன்னியர்க ளாகி, ஒன்று கூடிச் சூரியன் கும்ப ராசியிலும், குரு சிங்க ராசியிலும், சந்திரன் மக நக்ஷத்திரத்திலும் விளங்கும் காலத்தில், முன் சொன்ன மூன்று தீர்த்தங்களிலும் பக்தியுடன் முழுகுங்கள். பன்னிரண்டு வருஷங்களுக் கொருமுறை குரு சிங்கராசியி லிருக்கும் காலத்தில், மூன் றிடங்களிலும், மாசிமாதம் முதல், முடிவு வரையில் இருங்கள். அப்படிச் செய்வீர்க ளாயின் நீங்கள் பரிசுத்தர்க ளாவீர்கள்" என் றருளிச் செய்தார்.

இவ்வாறு சிவபெருமானு லருளப் பெற்ற கங்கை முதலிய ஒன்பது நதிகளும், ஒன்பது கன்னியர்க ளாகிக் யற்றவர்களாய்த் தங்கள் சகிகளாகிய மற்ற களுடன் கூடி, சர்வாபரண பூஷிதர்களாய்ச் சிவ

பெருமானால் நியமிக்கப்பெற்ற மூன்று க்ஷேத்திரங்களுள் முதலிற் கும்பேச க்ஷேத்திரஞ் சென்று, மாசி மாசத்திற் குரு சிங்கராசியை யடைந்த சமயத்தில், திருவாதிரை நக்ஷத்திரத்தோடு கூடிய திங்கட்கிழமையில், தங்கள் பாவங்களைப் போக்குவதற்காக மாகதீர்த்த மென்னும் மஹாமக தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்தார்கள். பிறகு, அதற்கு தென்கீழ்த்திசையிற் சற்று தெற்கிற் சுத்தமாய், மங்களகரமாய்ப் பார்க்கினும், தொடினும் மகா பாவங்களைப் போக்குவிப்பதாய், நினைத்தவர்களுக்கு அணிமா முதலிய அஷ்ட சித்திகளையும், சற்புத்திரனையுந் தருவதாய், அமுத குடத்தின் நடுப்பாகத்தினின்று முண்டானதாய் விளங்கும் மஹேஸ ஸ்வாமியின் சந்நிதானஞ் சென்று, பிறப் பிறப்புப் பிணிகளைத் தொலைக்கும், அமுத மயமான சிவ தீர்த்தத்தில முழுகினார்கள். பிறகு அந்த சிவதீர்த்தத்தை வலம் வந்து, அமுத கடேச ஸ்வாமியையும், அமுத வல்லி யம்மையையும வணங்கி வாழ்த்திக் கோணேச க்ஷேத்திரஞ் சென்றார்கள். கோணேச நாதனைப் பக்தியுடன் பாதம் பணிந்து, அமிருத தீர்த்தத்தில் முழுகத் தொடங்கலும், அது நீர் வறண்டு வெறுங்குள மாயிற்று. கங்கை முதலானவர்கள் தங்கள் தீர்த்தத்திலேயே ஸ்நாநஞ் செய்து, கோணேசர் சந்நிதி சென்று வணங்கிக் கண்ணீர்விட்டுக் கதறி, 'பகவானே! நாங்கள் ஸ்நாநஞ் செய்யப் புகும்பொழுது, அமிருத தீர்த்தத்தில் ஜலமில்லாமற் போவானேன்? எங்கள் பாபங்களை எவ்விதம் போக்குவோம்? என்ன செய்வோம்? அமிருத தீர்த்தத்தை எப்பொழுது பார்ப்போம்? எங்கள் பாவத்தை எப்பொழுது தீர்ப்போம்?' என்று முறையிட்டார்கள். அப்பொழுது பின்வருமாறு ஆகாசவாணி யுண்டாயிற்று :

"நதிகளே! நீங்கள் கைலாசநாதனைக் கழல்பணிந்து, பாவிகள் சேர்க்கையாலுங்களுக்கு வந்த பாவங்களைப் போக்கவேண்டுமென்று வேண்டினீர்கள். அப்பொழுது கைலாசபதி காசினியில் விளங்கும் முக்கியமான மூன்று சிவக்ஷேத்திரங்கள் சென்று, அங்குள்ள மங்களரூபியான சங்கரனை வணங்கி, மூன்று புண்ணிய தீர்த்தங்களினும் முழுகுங்கள் என்று கட்டளையிட்டார். அங்ஙனமே செய்கிறோமென்று சொல்லிப் பூமிக்கு வந்த நீங்கள், முதலில் இங்கு வந்து அமுத தீர்த்தத்தில் முழுகாததனால், முன்னிலும் மிக்க பாவிகளானீர்கள். ஆதலின் நாங்களைக் கண்டவுடன் புண்ணிய தீர்த்தம் மறைந்துவிட்டது. இந்திரியங்களிற் கண்ணைப் போலத் தேகத்துக்கு முகம் முக்கியமானது. ஆகையால் அமுதகுடத்தின் முகபாகத்திலுண்டான கோணேச ஸ்வாமியை வணங்கி, அமுத தீர்த்தத்தில் முழுகின பிறகு, அமுதகுடத்தின் நடுப்பாகமாகவும், அடிப்பாகமாகவுமுள்ள க்ஷேத்திரங்களுக்கு நீங்கள் போகவேண்டும். அந்த முறையை மறந்தீர்கள். ஆயினும் நாங்கள் பாவம்போக ஒருபாயம் சொல்லுகிறேன்; கேளுங்கள் :

நீங்கள் பாவங்களைப் போக்குகிறவர்களாயினும், உங்களாலும் போக்கக்கூடாத பாவங்களைப் போக்கக் கைலாசபதியிடம் கதறி வேண்டினீர்களாதலின் பயப்பட வேண்டாம். சகல பாவங்களையுந் தீர்க்கும் அமிருத தீர்த்தத்தில் முழுகிக் கோணேச ஸ்வாமிக்கு வில்வதளங்களால் நூற்றெட்டு அர்ச்சனைகளும், பிருகத் துர்க்காம்பாளுக்கு நூற்றெட்டு அர்ச்சனைகளும் செய்து, ஜபா புஷ்ப மாலைகளையும் சாத்துங்கள். தீர்த்த பாலகராகிய விக்னேஸ்வர ஸ்வாமியையும் பூஜித்து,

மோதகமும், பரமான்னமும் நிவேதித்து, கோணேச ஸ்வாமியை வந்தித்து வாழ்த்திக் கலியுகம் முடியும் வரையும் இங்கேயே வசிப்பீர்களாயின், உங்கள் பாவங்களனைத்தும் ஒழிந்து, புண்ணியவதிகளாவீர்கள். தவிரவும், வருஷந்தோறும் மாசி பௌர்ணிமை மக நக்ஷத்திரத்திற் கோணேச ஸ்வாமியின் மஹோத்ஸவாபிருத ஸ்நாநத்தை அமிருத தீர்த்தத்திற் செய்யுங்கள். மேலும் பன்னிரண்டு வருஷங்களுக் கொருமுறை, குரு சிங்கராசியி லிருக்குங் காலத்தில், மாசி மாதம், கும்ப லக்நத்திற் கோணேச ஸ்வாமி அமிருத தீர்த்தத்தில் தீர்த்தங் கொடுக்குங் காலத்தில், அதிற் பக்தியுடன் ஸ்நாநம் செய்யுங்கள். பிறகு கடேச க்ஷேத்திரம் சென்று, அமுத குடத்தின் நடுப் பாகத்தி னின்று முண்டாகிய கடேச ஸ்வாமியை வணங்கி, மாசி மாதம், மீந லக்கினத்திற் சிவ தீர்த்தத்தில் முழுகுங்கள். அப்பால், அமுத குடத்தின் அடிப் பாகத்தி னின்று முண்டாகிய கும்பேச ஸ்வாமியின் சந்நிதி சென்று, அம்மனையும் ஸ்வாமியையும் வணங்கி, மாசி மாதம் இடப லக்கினத்தில், மாக தீர்த்தத்தில் முழுகுங்கள். பிறகு, முதலிற் கோணேச ஸ்வாமியையும் பிருகத் துர்க்காம்பாளையும் பூஜை செய்யுங்கள். அப்பால், மத்திய க்ஷேத்திரம் சென்று கடேஸ்வர ஸ்வாமியையும், அமிருத வல்லி யம்மையையும் பூஜை செய்யுங்கள். பிறகு மூல க்ஷேத்திரம் சென்று கும்பேசரையும் மங்களாம்பிகையையும் பூஜை செய்யுங்கள். இவ்வாறு நீங்கள் செய்வீர்களாயிற் பாவிகள் சேர்க்கையா லுண்டாகிய பாவம் விலகும். இந்த மூன்று க்ஷேத்திரங்களிலும் கலியுகம் முடியும் வரையில் வசித்து, சிவபெருமானைத் துதித்துவருவீர்களாயின் உங்கள் பாவங்கள் விலகுவதுந் தவிர, உங்கள்

தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்பவர்களுக்கும் மிகப் பரிசுத்த முண்டாகும்."

இந்த ஆகாச வாக்கைக் கேட்ட கங்கை முதலானவர்கள் கோணேச ஸ்வாமியை வணங்கி, 'நாங்கள் ஆகாச வாக்கின்படியே செய்கிறோம்; தடையில்லை' என்றார்கள். உடனே அமிருத தீர்த்தம் மிகுந்த ஜலத்துடன் விளங்கக் கண்டு, ஆநந்தங் கொண்டு, அதிற் பக்தியுடன் ஸ்நாநஞ் செய்து வலம் வந்தார்கள். விநாயகரைத் தொழுதார்கள். கோணேச நாதன் சந்நிதி சென்றார்கள். படிகளின் முன் வீற்றிருக்கும் கணபதியைப் பூஜித்து, அவ ரநுமதி பெற்றுப் படிகளிலுள்ள தேவர்களை வணங்கினார்கள். பிறகு கோணேச நாதன் சந்நிதியை யடைந்து, ஆகாச வாக்குப்படிப் பூசை செய்தார்கள். பிறகு வன்மீகாசலத்தினின்றும் மெதுவாக இறங்கிப் பிருகத் துர்க்காம்பாளைப் பக்தியுடன் பூஜித்தார்கள். செம்பரத்தைப் புஷ்ப மாலைகளைச் சாத்தினார்கள். நூற்றெட்டுத் திருநாமங்களால் அர்ச்சனை செய்தார்கள். ஆகாச வாக்கின்படிக் கடேச க்ஷேத்திரஞ் சென்று சிவ தீர்த்தத்தில் முழுகி, ஸ்வாமியையும் அம்மனையும் பூஜித்தார்கள். அப்பால் அவ் வாக்கின்படிக் கும்பேச க்ஷேத்திரஞ் சென்று கோணேசரையும் அம்மனையும் பூஜித்தார்கள். ஒன்பதின்மரும் ஒன்பது கன்னிகைகளாகி மூன்று க்ஷேத்திரங்களிலும் நித்தியவாசம் செய்தார்கள்.

ஆகையால், முநிவர்களே! முதலிற் கோணேசரைப் பக்தியுடன் வணங்கிப் பன்னிரண்டு வருஷங்களுக் கொருமுறை குரு சிங்கராசியி லிருக்கும் பொழுது, கும்ப லக்நத்தில், மாசி மாதம் பௌர்ணமையில், அமிருத தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்தால், எல்லாப் பாவங்களும்

நீங்கும். அமிருத கடேசரைப் பூஜித்து, மீந லக்கினத்திற் சிவ தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்து, பிறகு கும்பேசர ஸ்வாமியைப் பூஜித்து, மாக தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்தல் வேண்டும். இந்த மூன்று க்ஷேத்திரங்களிலும் சகல ஜனங்களும் ஸ்நாநஞ் செய்யுங்காலத்திற் கங்கை முதலான ஒன்பது கன்னியர்களையும் முதலிற் பூஜித்துப் பிறகு ஸ்நாநஞ் செய்யவேண்டு மென்பது சிவபெருமா னுடைய சுபகரமான கட்டளை. பொதுவாக இந்த மூன்று க்ஷேத்திரங்களையும் கன்னியா க்ஷேத்திர மென்றும, மூன்று தீர்த்தங்களையும் கன்னியா தீர்த்தம் என்றும சொல்லுகிறார்கள். வருஷந்தோறும் மாசி மாதம் பௌர்ணமி கும்ப லக்நத்தில் ஸ்நாநம் விசேஷமானதென்றும, பன்னிரண்டு வருஷத்துக்கொருமுறை, குரு சிம்ஹ லக்நத்திலிருக்குங் காலம் கூடிய மாசி மாதம் பௌர்ணமி மிகப் புண்ணியமான கால மென்றும், பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால், முநிவர்களே! இவ்விதமாய்ப் பிரசித்தி பெற்று சகல புருஷார்த்தங்களையுங் கொடுத்துக் கலிகாலத்தி லுண்டாகும் கொடிய பாவங்களை யழிக்கும் அமிருத தீர்த்தத்தில் ஒரு முறை முழுகினும், அதைப் பார்க்கினும் கைலாயங் கிடைக்கும்.

இங்ஙனம் கோணேச க்ஷேத்திர மகிமையிற்
பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினைந்தாவது அத்தியாயம்

முநிவர்களே! சகல பாக்கியங்களையு மளிக்கும் சந்திர தீர்த்தத்தின் மகிமையைச் சொல்லுகிறேன் கேளுங்கள் அதை ஒருவன் கேட்டவுடன் எல்லாப் பாவங்களு முக்தனாய்ச் சிவபக்த னாகிறான். மிகப் பரிசுத்த மா ய

சந்திர தீர்த்தம் கோணேச ஸ்வாமியின் ஆலயத்துக்குள் இருக்கிறது. அந்த அவ்விடம் உண்டானதற்குக் காரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்.

முன்னொரு காலத்திற் சந்திரன் குருவின் மனைவியைப் புணர்ந்தார். அந்தப் பாவத்தால் க்ஷய ரோகத்தை யடைந்து, அதைத் தீர்த்துக்கொள்ளப் பல க்ஷேத்திரங்கள் சென்றும், நீராடியும், பகவானைப் பாடியும், அந்தப் பாவம் தீரவில்லை. ஒருகால் வசிஷ்டாசிரமம் சென்று அம் மஹாருஷியைச சேவித்தார். முனிவர் கருணை கூர்ந்து, சந்திரனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்து, ஓரிரகசியங் கூறினர். 'சோமனே! குருதார கமனத்தா லுண்டாய பாவம் மிகக் கொடியது. அதையு நீக்கக் கூடிய புண்ணிய க்ஷேத்திர மொன் றிருக்கின்றது. உலகில் அதனினும் மேலான தொன் றின்று. அது தாலப்பிய முனிவ ராசிரமத்தில், தாலப்பிய முனிவராற் பூஜிக்கப்பெற்று, வன்மீகாசல நாத ரென்று திரு நாம முடைய சிவபிரானுடன் விளங்குகின்றது. அவ் விடத்துக்குச் செல்லுக' என்றார். சந்திரன் இதைக் கேட்டுத் தாலப்பியாசிரமஞ் சென்று, வன்மீகாசலத்தில் விளங்கும் ஸ்வாமியைப் பூஜித்து, மாசிமாதம் பௌர்ணமியில் ஸ்நாநஞ் செய்தார். அப்பொழுதே சகல ரோகங்களுடன் க்ஷய ரோகமு நீங்கப்பெற்று, மிகப் பிரகாசத்துடன் விளங்கினர்; மன மகிழ்ந்தார்; ஆநந்தக் கடலுள் மூழ்கினர். பிறகு சிவபெருமானை வணங்கித் 'தங்கள் சந்நிதானத்துக்குத் தென்பக்கத்தில் ஒரு தீர்த்தத்தை யுண்டாக்குகிறேன். அது சந்திர தீர்த்தம் என்னும் பெயருடன் மிகப் புண்ணிய தீர்த்தமாய் விளங்க வேண்டும்' என்று வேண்ட, அவரும் அப்படியே விளங்குக என் றருளிச் செய்தார்.

இங்ஙனம் சங்கரனருள்பெற்ற சந்திரன், சந்திர தீர்த்தம் என்றொரு தீர்த்தத்தை யுண்டாக்கித் தைம்மாதம் சோமவாரங்களில் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செயயுமவர்களுக்குச் சங்கரன் மங்களம் செய்க என்று வரமளித்தார். தமது தீர்த்தத்தில் முழுகுபவர்கள் மனைவி, மக்கள், பொருள், பூமி, கீர்த்தி, ஜயம் இவைகளை யடையக் கடவர்க ளென்றும் வர மளித்தார். தம் பெயருள்ள தீர்த்தத்தைக் கோணேஸ்வர ஸ்வாமி, நாடோறும் அபிஷேகத்துக்கும், பூஜைக்கும் ஏற்றுக் கொள்ளல் வேண்டுமென்று வேண்டினர். தம்மிடந் தயை கூர்ந்து, தாம வேண்டுவ அனைத்தையும் சோமநாதன் முடிக்கருளக் கேட்டுக்கொள்ள, அவரும் அன்புக் குகந்து இசைந் தருளினர். அதுமுதற் சந்திர தீர்த்தம் மிகப் புண்ணிய தீர்த்தமாய் விளங்குகின்றது. சந்திர தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்பவர்களும், சோமவார விரத மிருப்பவர்களும், சந்திர சேகர ருலகஞ் சென்று, சந்திரன் போல விளங்குவார்கள். அந்தத் தீர்த்தத்துக்கு ருஷி - அத்திரி; தேவதை-சந்திரன்; பாலகர்-சண்டேசர்; விருக்ஷம்-பாடலம். சந்திர தீர்த்தத்தில் முழுகுபவர்கள் அத்திரி முதலாயினோரை வணங்கி, அநுமதி பெற்று முழுகுதல் வேண்டும். பிறகு, திருநீற்றுப் புண்டரந் தரித்து, அக்கமாலை பூண்டு, அம்மனுடைய மந்திரத்தைப் பதினாயிர முறையேனும், அல்லது, ஆயிர முறையேனும் ஜபித்து, நல்ல சர்க்கரை கலந்த பாயசத்தையும், பசுவையும், சம்பா அரிசியையும், வெள்ளை யுடையையும், வெள்ளைப் புஷ்பங்களையும், பசும் பாலையும் அம்மனுக்குக் கொடுத்தல் வேண்டும். புணரலாகா தவர்களோடு புணர்ந்தும், புசிக்கத் தகாதவைகளைப் புசித்தும், செய்ய லாகாதவற்றைச்

செய்தும் உண்டாகிய பாவங்களனைத்தும் சந்திர தீர்த்த ஸ்நாநத்தால் அழிந்து விடுகின்றன. சீதளச் சுரம், பித்த சுரம், கபச் சுரம், ஸ்வாசச் சுரம் முதலாகிய சகல வியாதிகளையும் போக்கக் கூடிய சந்திர தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்பவர் எல்லாப் பிணிகளும் நீங்கிப் பரிசுத்த ராகிறார். சூலரோக முதலிய வாயு ரோகங்களுந் நீங்கப் பெறுவார். சிவபூஜையிற் குறைவுகள் நேரினும், அந்தப் பூஜை நிறைவு பெறும். அந்தத் தீர்த்தத்தைப் பார்த்தவர் சந்திரன்போலச் சுந்தர ராகிறார். அவரை அரசர்கள் புகழ்வார்கள். இவ்விதம் சிவபெருமான் சந்திர தீர்த்தத்துக்குப் பலவித வரங்களை யளித்திருக்கின்றார்.

முனிவர்களே! நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். கோணேச ஸ்வாமிக்குச் சமீபத்தில் வடபாற் பரிசுத்தமான அக்கினி தீர்த்தம் இருக்கின்றது. அது பாவக் காட்டுக்குக் காட்டுத் தீ. அந்தத் தீர்த்தத்தை நினைத்தவர் அக்கினிபோலப் பரிசுத்த ராகிறார்; தொட்டவர் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிறார்; அதிற் சித்திரை மாதம் ஸ்நாநஞ் செய்பவர் கங்காஸ்நாந பலனை யடைகிறார். சித்திரைப் பௌர்ணமியில் ஸ்நாநம் பூர்வ ஜன்ம புண்ணியத்தாற் கிடைக்கும். சித்திரை மாதம், கிருத்திகை நக்ஷத்திரத்தில் ஸ்நாநஞ் செய்பவர் பாண்டு ரோக நீங்கப் பெறுவார். சித்திரைப் பௌர்ணமியிற் பக்தியுடன் மும்முறை ஸ்நாநம் செய்பவருக்குக் குஷ்ட முதலாகிய எல்லா நோய்களுந் தீர்ந்துவிடுகின்றன. கார்த்திகை நக்ஷத்திரத்தில் ஒரு முறையேனும் அக்கினி தீர்த்தத்தில் முழுகுபவர் யாவரினும் மேலான பதவியை யடைவார். அக்கினி தீர்த்தத்துக்கு ருஷி—மாண்டவ்வியர்; தேவதை - அக்கினி; பாலகர் – சுப்பிரமணியர்; விருக்ஷம் - சண்பகம்; அக்கினி தீர்த்தத்தில் முழுகுபவர்கள்

மாண்டவியர் முதலானவர்களை வணங்கி, அநுமதிபெற்று முழுகுதல் வேண்டும். சண்பக மரத் தடியிற் சுப்பிரமணிய ஸ்வாமியின் மந்திரத்தை ஜபிக்கக்கடவர்கள். அன்னதான, கோதான, பூதான, கன்னிகா தானங்களையும், நெய், தேன் முதலான தானங்களையும் செய்யக்கடவர்கள். முனிவர்களே! முற்காலத்திற் பிரமர் யாகஞ் செய்தார். ஏராளமான நெய்யை அக்கினியில் ஓமஞ் செய்தார். அது ஜீரண மாகாமல், அக்கினி பகவானுக்கு வயிற்று வலி யுண்டாகி, ஆகார மின்றி, உடம்பு வெளுத்துப் பாண்டு ரோக முண்டாயிற்று. பலவித மருந்துக ளுண்டும் நோய் நீங்காது, துன்பப்படுவதை நாரத முனிவர் கண்டு, தயை கொண்டு, அக்கினி தேவனைப் பார்த்து, அமிர்த தீர்த்தத்தில் முழுகிக் கோணேசரைச் சேவிக்க உபதேசித்தார். அதைக் கேட்ட அக்கினி தன் மனைவியுடன் வன்மீகாசலஞ் சென்று, விஷு புண்ணிய காலத்திற் கோணேச ஸ்வாமியைச் சேவித்து, மனைவியுடன் சங்கற்பஞ் செய்துகொண்டு, அரசமரத் தடியில் வீற்றிருக்குந் தீர்த்த பாலக ரான கஜாநநனை வணங்கி, ஸ்நாநஞ் செய்ய உத்தரவு பெற்று, அமுத தீர்த்தத்தில் விதிமுறை மூழ்கினர். பிறகு, யாருடனும் பேசாது ஐந்தெழுத் தோதினர். அப்பால் ஸ்வாமியின் சந்நிதானஞ் சென்று, கங்கை முதலாகிய நவ கன்னிகைகளைப் பூஜித்துச் சிவபூஜை செய்ய உத்தரவு பெற்றுப் படிகளின் கீழ்க் காவல் பூண்ட கணபதியைப் பூஜித்து விடைபெற்றுப் படிகளி லேறினர். இருபத்து நான்கு படிகளிலு முள்ள தேவர்களை வணங்கி, விடை பெற்றுக் கோணேச ஸ்வாமியின் சந்நிதானத்தை யெய்தி ஆநந்த பரவசராய் நமஸ்கரித்துக் காமிகாகம விதிமுறை வழிபா டாற்றிப் புஷ்பங்களாலும், தூபங்களாலுந் தீபங்க ளாலும் சந்தனங்களாலும், பல்வகைச் சித்திரான்னங்க

ளாலும், பாயசங்களாலும் வெவ்வேறு பக்ஷணங்களாலும், பழங்களாலும், தாம்பூலங்களாலும், பானகங்களாலும் மங்களமளிக்குஞ் சங்கர மூர்த்திக்கு அக்கினிபகவான் பூசனையியற்றினார். பிறகு அம்மையாரின் சந்நிதி சென்று முன்போலவே அம்மனுக்குப் பலவகைப் பக்ஷண முதலானவற்றாற் பூசனை யாற்றி, முன் தாலப்பிய முனிவர் அர்ச்சித்தபடி நூற்றெட்டுத் திருநாமங்களையுஞ் சொல்லி, ஜபா புஷ்பங்களாலும் அம்மனை யர்ச்சித்தார்.

அதனாற் சந்தோஷ முற்ற பிருகத்துர்க்காம்பிகை அப்பொழுதே அக்கினி தேவனுடைய வயிற்றுநோயைப் போக்கினார். அக்கினிதேவன் மனைவியுடன் மகிழ்ச்சியுற்றவனாய்க் கோணேசமூர்த்திக்கு வடபக்கத்தில், அக்கினி தீர்த்தம் என்று தன் பெயர் கொண்டதொரு தீர்த்தத்தையுண்டாக்கி, அது மிகப் புண்ணிய தீர்த்தமாய்த் திகழுமாறு, அம்மையை நமஸ்கரித்து, அந்தத் தீர்த்தத்திற் சித்திரை மாதப் பிறப்பில் முழுகுபவர்கள் வேண்டிய சுகங்களையடையவேண்டும்; பாண்டு ரோக முதலிய ரோகங்கள் நீங்கப் பெறவேண்டும்; சித்திரை மாதத்தில் முழுகுபவர்கள் அரசனைக் கொன்ற தோஷ முதலியவற்றினின்று நீங்க வேண்டும் என் றிவ்வாறு வேண்டினார். அம்மையாரும் அவ்வாறே வர மளித்தார். அக்கினிபகவான் ஆநந்தத்துடன் சிவபெருமானையுந் தேவியாரையும் வணங்கி வாழ்த்தி, விடைபெற்றுத் தம் வீடுபோய்ச் சேர்ந்தார். அந்த அக்கினி தீர்த்தத்தில் முழுகினாற் சகல புருஷார்த்தங்களு முண்டாகின்றன.

இவ்வாறு சூதர் சொல்லக்கேட்ட முனிவர்கள், சகல தத்வார்த்தங்களையும் உண்மையா யுணர்ந்த சூத புராணிகரே! தாலப்பிய முனிவர் ஜபா புஷ்பங்களால் முன்செய்த

நூற்றெட்டு அர்ச்சனைகளை அக்கினிதேவர் தம் மனைவியுடன அம்மனுக்குச் செய்து, இஷ்டார்த்தங்களை யடைந்தார் என்றீர்களே? அஃது எவ்விதம்? அதை யருளிச் செய்ய வேண்டுமென்று வேண்டினர். சூதர் சொல்லுகிறார். முனிவர்களே! பிருகத் துர்க்காம்பாளுடைய நூற்றெட்டுத் திருநாமங்களைக் கேளுங்கள். அவற்றைக் கேட்டவர்கள் வாட்ட மின்றி, எல்லா இஷ்டங்களையும் அடைவார்கள். அதற்குப் பிருகத் துர்க்காஷ்டோத்தர சதம் என்று பெயர். அதற்கு ருஷி-பிரமன். அநுஷ்டுப்-சந்தசு. தேவதை-பிருகத் துர்க்காம்பாள். ஹ்ரீம்-சக்தி. ஹ்ராம்-கீலகம். 'நல்ல பீஜாக்ஷர மந்திர தந்திர யந்திர ஸ்வரூபையாயும், காமிகளுக்கு காமங்களைக் களிப்புடன் அளிப்பவளாயும், தத்துவஞான பக்தி சக்திகளை அவயவங்களா யுடையவளாயும், சிங்க வாஹனத்தை உடையவளாயும், மணி, சக்தி, சூலம், கத்திகளைக் கையில் உடையவளாயும், பிரளய காலத்தில் விளங்கும் சூரியன்போல் விளங்குபவளா யும், தனக் கொப்பாரும் மிக்காரும் இல்லாதவளாயும் விளங்கும் கோணேச ஸ்வாமியின் தேவியை வணங்கு கிறேன்' என்று தியானம் செய்யவேண்டும். அந்த நூற்றெட்டு அர்ச்சனையைக் கேளுங்கள்.

1. மஹே மஹிஷ்யை நம.
தேவ்யை நம:
மஹ தாம்பல தாயிந்யை நம:
மஹாஸேந குமாரப் தந்யை நம:
5. மஹிதாயை நம:
ஹிமாயை நம:
ஹிமாசலேந்த்ர துஹித்ரே நம:
ஹ்ரீங்கார பரமார்த்த தாயை நம:
10. ஹ்ரீம் பீஜாயை நம:
ஹ்ரீம் மத்யை நம:
கௌர்யை நம:

ஸ த் த ா ஸ ா த ன
ரூபிண்யை நம:
ஷாமகானப்ரியாயை நம:
15. ஸாத்வ்யை நம:
மஹேச ப்ரியதாயைநம:
பராயை நம:
பூர்ணாநந்தாயை நம:
பூர்ண சக்த்யை நம:
20. பூர்ண ஞா ந
ஸுகாத்மிகாயை நம:
ஸுந்தர்யை நம:
சோபநாயை நம:
சுத்தாயை நம:
சுப தாயை நம:
25. ஸர்வ தாயின்யை நம:
வைராக்ய தாயை நம:
வீரமூர்த்யே நம:
வீரஸேநாயை நம:
விரூபிண்யை நம:
30. யக்ஞார்த்த ரூபிண்யை
நம:
யக்ஞ மந்த்ர சக்தி
தராயை நம:
ப்ரபாயை நம:
நிகம விதிதாயை நம:
வித்யாயை நம:
35. வேத்யாயை நம:
நரார்ச்சிதாயைநம:

வித்யாவத்யை நம:
விலாஸாயை நம:
வீரகர்பாயை நம:
40. விசாலின்யை நம:
கர்மாத்யக்ஷாயை நம:
கர்ம பலாயை நம:
கர்மேந்த்ரிய
நியாமிகாயை நம:
ப்ருஹத் துர்காயை நம:
45. வீர துர்காயை நம:
சித்ர துர்காயை நம:
சிதாத்மிகாயை நம:
காலாயை நம:
காலார்ச்சிதாயை நம:
50. காமாயை நம:
காம மாத்ரு
பலப்ரதாயை நம:
சிவாயை நம:
சிவ மத்யை நம:
சைவ தீக்ஷாயை நம:
55. சிவ விநோதின்யை நம:
சிவதேஹாயை நம:
சிவாங்க்யை நம:
சைவாகம சரீரிண்யை
சிவகாமாயை நம:
60. சிவபுஜாயை நம:
சிவஸ்ம்ருதி விலா
ஸின்யை நம:

சிவதத்வ விசாரஞாலய
நம:
சிவ மந்த்ர பராயை
நம:
சுபாயை நம:
65. சிவ ஞாநவிதாம்
ச்ரேஷ்டாயை நம:
சிவ பத்நியை நம:
ஸு பூஜகாயை நம:
க்ஷேத்ரக்ஞாயை நம:
க்ஷேத்ர நிலயாயை நம.
70. ஸத் க்ஷேத்ர பல
தாயின்யை நம:
குசலாயை நம:
குத்ஸித ஞாந
பஞ்சகாயை நம:
கால பேதின்யை நம:
சந்திர சூடப்ரியாயை
நம:
75. சந்த்ரகோடி லாவண்ய
வக்த்ராயை நம:
கடகாங்கத கேயூர
ஹார நூபுர
தாரிண்யை நம:
மீந நேத்ராயை நம:
மீலிதாக்ஷாயை நம:
பக்த ஸ்வாந்த சராயை நம:
80. சுபாயை நம:

மோஹின்யை நம:
மோஹ ஜநகாயை நம:
மோஹநாங்க்யை நம:
முதான்விதாயை நம:
85. விஸ்மயாநந்த
ஜநகாயை நம:
பத்மோதர
நிபோதராயை நம:
பத்ம ப்ரியாயை நம:
பத்ம ஜாதகர பூஜித
விக்ரஹாயை நம:
பத்ம மாலாட்ய
ஸெளகாயை நம:
90. கம்பீராவர்த்த
நாபிகாயை நம:
குஹ மாத்ரே நம:
குண்டாயை நம:
குரு பாதக நாசின்யை
நம:
குரோர் குருதமாயை நம:
95. கான ந்ருத்த வித்யா
விலாஸின்யை நம:
நர்த்தநார்த்த
விசாரஞாயை நம:
தாண்டவ ஸ்வாந்த
வல்லபாயை நம:
ஆகண்டலார்ச்சிதாயை
நம:

சண்ட கர்ண காண்ட விபேதின்யை நம:

100. சித்ர வஸ்த்ர ப்ரியாயை நம:

சித்ர சரித்ர ஜந மோஹின்யை நம:

பூர்ண காமாயை நம:

பூர்ண வித்தியா தாயின்யை நம:

பூர்ண வல்லபாயை நம:

105. ஸமஸ்த பல தாயை நம:

ஸர்வ மங்களாயை நம:

ஹ்ருத் குஹாசயாயை நம:

108. ஸர்வ மங்கள மாங்கள்யாயை நம:

வத்ஸலாயை நம:

என்று பிருஹத் துர்காம்பாளுடைய இந்த அஷ்டோத்தர சத நாமாவளியை நாள்தோறும், மூன்று காலங்களிலும், ஒரு கால மாவது படித்தார்களாகில், அவர்கள் பொருள், புதல்வன், பூமி, மனைவி, பசு முதலிய ஸகல பாக்கியங்களையும் அடைகிறார்கள். இவ்விதமாய் வியாஸ மஹா முனிவர் எனக்கு உரைத்தனர். இந்த ஸ்தோத்திரத்திற்கு ஸமானம் மூன்று உலகங்களிலுமில்லை. மனிதர்களுக்குக் கீர்த்தியைக் கொடுக்கும். அர்ச்சகர்களுக்கு ஜயத்தைக் கொடுக்கும். பூர்ணமான ஆயுளையும், சகல மங்களங்களையும் கொடுக்கும். இந்த நூற்றெட்டு நாமங்களாற் கோணேச ஸ்வாமியின் தேவியைப் பக்தியுடன் செம்பரத்தைப் பூக்களால் அர்ச்சனை செய்பவர் அம்மனுக்கு ஸுப்ரமண்ய ஸ்வாமியைப்போல் மிகவும் பிரியமுடையவராகிறார். தாமரை முதலிய புஷ்பங்களால் அர்ச்சனை செய்யவா சக[illegible] யாகிறார். ஸ[illegible] ரன முதற் சகல பாக்கியங்களையும் கொடுக்கக்கூடிய இந்த கோணேச க்ஷேத்திர மஹிமையைப் படிப்பவர்களும், கேட்பவர்களும் இவ்வுலகத்தில் அளவற்ற செல்வங்களுடன்

கூடி மகிழ்ந்து, சிவபக்தியிற் சிறந்தவர்களாய், முடிவிற் கைலாயஞ் சென்று, ஆங்கு மங்களகர,ரான சங்கர பகவானோ டொன்றுசேர்ந்து ஸுந்தரமூர்த்திகளாய் வாழ்வார்கள்.

இவ்விதம் ஸ்காந்த புராணம் மேல் பாகத்தில், க்ஷேத்திர கோச விஸ்தாரத்திற் கோணேஸ்வர மஹிமையிற் சந்திர தீர்த்த வைபவ, அக்கினி தீர்த்த வைபவ, தேவி அஷ்டோத்தர சத நிரூபண மென்னும் பதினைந்தாம் அத்தியாயம் முற்றுப் பெற்றது.

திருக்குடவாயிற் புராணம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்